www.padippakam.com

# புதிய ஜனநாயகம்



கருணாநிதி நிர்வாக சூரப்புலியா?

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
1 — 15 அக்.'90 5/22 விலை ரூ.2




அயோத்தி - மண்டல் - ஜனதாதள சண்டை

www.padippakam.com



# விடுதி கோரி மாணவர் போராட்டம் தி.மு.க. வின் மிரட்டல்

மன்னார்குடி - திருமக் கோட்டை சாலையில் அமைந்துள்ள மன்னை ராசகோபாலசாமி அரசினர் கலைக் கல்லூரி முந்தைய தி.மு.க. ஆட்சியில் (21 ஆண்டுகளுக்கு முன்) தொடங்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை கல்லூரிக்கென்று ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி கிடையாது. பொதுவான விடுதியொன்று தொடங்கப்பட்டு பின்னர் சில பிரச்சினை காரணமாக அதுவும் இழுத்து மூடப்பட்டது. 'தாழ்த்தப்பட்ட' மாணவர்கள் தமக்கு விடுதியில்லாததால் மிகவும் சிரமப்பட்டனர்.இந்நிலையில் விடுதி கட்டித்தரக் கோரி முதற்கட்டமாக வகுப்புகளைப் புறக்கணித்து போராட்டம் தொடங்கினர். 15 நாட்களாகியம் எவ்விதப் பயனும் இல்லாததால் அடுத்த கட்டப் போராட்டமாக 17-9-90 முதல் மன்னார்குடி வருவாய் கே(ா)ட்ட அலுவலகம் முன்பு தொடர் பட்டினிப் போராட்டம் நடத்தினர். 2 நாட்கள் வரை எந்த ஓட்டுப் பொறுக்கி கட்சியும் எட்டிக் கூட பார்க்கவில்லை.

19ந் தேதி மதியம் அ.தி.மு.க. முன்னாள் மாவட்டச் செயலர் சு.ஞானசேகரன் வந்து போனபின் நகர தி.மு.க. செயலர் பழ.மணி வந்தார். வந்தவர், ''பெரியவர் (மன்னை நாராயணசாமி) மிகவும் வருத்தப்படுகிறார். நாளை தி.மு.க அலுவலகத்திற்கு வந்து பெரியவரிடம் கெஞ்சி மன்றாடிக் கேட்டுக் கொண்டால் அவர் உங்கள் கோரிக்கை நிறைவேற அரசிடம் பரிந்துரைப்பார். அதை விட்டுவிட்டு இப்படியெல்லாம் போராடினால் விபரீத விளைவுகள் தான் ஏற்படும்'' என்று அறிவுரை பாணியில் மிரட்டினார். அன்று மாலை நாகை நாடாளுமன்ற உறுப்பினர் (M.P.) எம்.செல்வராசு (சி.பி.ஐ) மாணவர்களைச் சந்தித்து ''கலெக்டர், மினிஸ்டர் போன்றவர்களைப் பார்த்து இது பற்றி பேசி விடுதி கட்ட ஏற்பாடு செய்கிறேன். பட்டினிப் போரை கை விட்டு விடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டதன் பேரில் மாணவர்களும் சம்மதித்து தற்காலிகமாக போராட்டத்தை கைவிட்டனர்.

எனினும் ஓட்டுப் பொறுக்கிகளை நம்பி பயனிருக்காது என்பதை உணர்ந்த மாணவர்கள் தொடர்ந்து ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டமும் பகுதியில் தெருமுனைப் பிரச்சாரமும் செய்வதென தீர்மானித்து போலீசிடம் அனுமதி கேட்டனர். சப் இன்ஸ்பெக்டர் அய்யனார் மாணவர்களிடம், ''ஆர்ப்பாட்டம் வேண்டுமானால் செய்யுங்கள்; பாதுகாப்பு தருகிறோம். ஆனால், தெருமுனைப் பிரச்சாரம் மட்டும் செய்யாதீர்கள். பெரியவர் கோபம் கொள்வார். பிறகு தி.மு.க வினர் உங்களைத் தாக்கினால் நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பு தர முடியாது'' என்று கூறியதோடு ''பெரியவர் காலில் விழுந்து காரியத்தை சாதிச்சுக்குங்கடா'' என்று அறிவுரை(!) வேறு கூறி அனுப்பினார்.

மாணவர்களில் சிலர் பயந்து போய் பெரியவரை சந்திக்க முயன்று வருகிறார்கள். ஆனால் பல மாணவர்கள் போராட்டத்தில் உறுதியாக நிற்கின்றனர். தொடர்ந்து சாலை மறியல் போராட்டம் நடத்தவும் தயாராக உள்ளனர்.

**தகவல்: மன்னை ராசகோபால்சாமி அரசினர் கலைக்கல்லூரி மாணவர்கள்.**

# திருச்சியில் தீ விபத்து! சூடுபட்ட போலீசு!

திருச்சி நகரத்திலும் அதன் சுற்று வட்டாரத்திலும் உள்ள சேரிப்பகுதி குடிசைகள் திடீரென தீப்பற்றி எரியும் சம்பவம் தொடர்கிறது. யாரோ சிலர் திட்டமிட்டு இச்செயலை செய்து வருவதாக செய்தி உலவுவதால் சேரிப்பகுதி மக்கள் இரவிலும். பகலிலும் காவல் புரிந்து வருகிறார்கள். உண்மை என்னவென்று கண்டுபிடித்து குற்றவாளிகளை தண்டிப்பதற்குப் பதிலாக போலீசோ, அப்பாவி மக்களை மிரட்டி அடித்து, உதைத்து பொய் சாட்சி கூற வைத்து 'தற்செயலாக நடந்த விபத்து' என கோப்பை மூடி விடுகிறது. கண்துடைப்பிற்காக சில சேரிப்பகுதிகளுக்கு 'கான்ஸ்டபிள்'களை காவலுக்குப் போட்டிருக்கிறது. ஆனால், போலீசு காவலில் இருக்கும் போதே சில பகுதிகளில் தீ விபத்துகள் நடந்துள்ளன. இதற்கு திருச்சி பெரியாஸ்பத்திரியின் அருகிலுள்ள வண்ணாரப்பேட்டை சி.இ. என்ற உயர்நிலைப் பள்ளியில் நடந்த தீ விபத்துகள் சிறந்த சான்றாக விளங்குகின்றன.

கடந்த 19.8.90 அன்று போலீசார் காவலில் இருக்கும் போதே இப்பள்ளி தீப்பிடித்து எரிந்தது. இதன் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து 31.8.90 அன்று மாலை பள்ளியின் எஞ்சியிருந்த கீற்று கொட்டகைகளும், பழனியாண்டி, சின்னப்பன், குழந்தைவேல் ஆகிய மூவரின் வீடுகளும் எரிந்து சாம்பலானது. வழக்கம் போல் இச்சம்பவத்திலும் போலீசு விசாரணை நாடகமாடியது.

உதவி கண்காணிப்பாளர் (A.S.P) விசாரணை மேற்கொண்ட பொழுது ''மின் கோளாறு காரணமாக நடந்தது'' என சொல்லும்படி சிலரை மிரட்டி தயார்படுத்திக் கொண்டு வந்து நிறுத்தினார். உறையூர் போலீசு நிலையத்தின் சப்-இன்ஸ்பெக்டர் காந்தி. ஆனால், A.S.P. விசாரணையில் அவர்கள் யாரோ ஒருவன் தீ வைத்துவிட்டு ஓடியதை பார்த்ததாக உண்மையைக் கூறியுள்ளனர். மக்கள் மத்தியில் அவமானப்பட்ட A.S.P., சப்-இன்ஸ்பெக்டர் காந்தியை இஷ்டத்திற்கு வசைபாடினார். A.S.P சென்றதும் ராஜ். கனகராஜ், செல்வராஜ், பழனியாண்டி, ரமேஷ், செல்வம், கருப்பாயி முதலானவர்கள் மீது உண்மையைக் கூறியதற்காக சாதியைச் சொல்லி தமக்கே உரிய 'பாஷை'யில் திட்டி வெறி கொண்டு தாக்கினார் இன்ஸ்பெக்டர் காந்தி. இதற்குப் பின்னும் மின்கோளாறு காரணமாகத்தான் தீப்பிடித்தது என்று கூறி பள்ளியின் மின்பணியாளர் ரசீத் என்பவரை (விபத்து நடந்த நேரத்தில் மின் விநியோகம் இல்லை என்பது தெரிந்து;ம்) அடாவடித்தனமாக கைது செய்து இழுத்துச் சென்றது போலீசு.




ஆத்திரமடைந்த பகுதி மக்கள் பெருவாரியாக திரண்டு சென்று அடுத்த நாள் மாவட்ட கலெக்டரிம் மனு கொடுத்தனர். கலெக்டரும் தம் பங்கிற்கு பரிவாரங்களுடன் வந்திறங்கி விசாரணை நாடகம் நடத்தினார். ''அரசு தரும் நட்ட ஈட்டுத் தொகை 400 ரூபாய்க்காக பகுதி மக்கள் தங்கள் வீட்டுச் சாமான்களை எல்லாம் வெளியே பத்திரமாக வைத்து விட்டு கொளுத்திக் கொண்டார்கள்'' என்று கலெக்டரிடம் போலீசு புளுகியது. பகுதி மக்கள் போலீசின் அராஜக செயலை எடுத்துக் கூறியபொழுது இடைமறித்து பேசி தன்னை உத்தமனாக காட்டிக் கொள்ள முயற்சித்தது. ஆனால், கருப்பாயி என்ற பெண்மணி போலீசு அடித்ததால் ஏற்பட்ட உடற்காயத்தைக் காட்டிய பொழுதும், போலீசின் அண்டப்புளுகை மக்கள் அம்பலப்படுத்திக் காட்டிய பொழுதும் முகங்கொடுக்க முடியாமல் மௌனமாகி ஓடிப்போனார் கலெக்டர்.

இத்தனைக்கும் சப்-இன்ஸ்பெக்டர் காந்தி 'தாழ்த்தப்பட்ட' வகுப்பைச் சேர்ந்தவர். அரசு எந்திரத்தில் யாராக இருந்தாலும் அவர்கள் ஆளும் வர்க்க நலனுக்கே சேவை செய்வார்கள்; உழைக்கும் மக்கள் மீது ஏன், தங்கள் உறவினர்கள் மீதே பாய்ந்து குதறுவதற்கும் தயங்க மாட்டார்கள் என்பதற்கு இவர் ஒரு எடுத்துக் காட்டு.

போலீசு: மக்கள் விரோத கிரிமினல் - ரௌடிக் கும்பலே என்பதை இச்சம்பவத்தின் மூலம் பகுதி மக்கள் நேரடியாக உணர்ந்தனர்.

— பகத்சிங் இளைஞர் முன்னணி
திருச்சி.

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

22

1 - 15 அக்.'90

உள்நாடு
தனிஇதழ் : ரூ.2.
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுசந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# ராமஜென்ம பூமி விவகாரம்:

# விட்டுக் கொடுப்பது தீர்வாகாது!

இட ஒதுக்கீடு எதிர்ப்புக் கிளர்ச்சியை பின்னாலிருந்து கொண்டு இயக்கிய இந்துவெறி பாரதீய ஜனதா, அடுத்த கட்டமாக இந்து ஓட்டுக்களை குறிவைத்து ராமஜென்ம பூமி விவகாரத்தைக் கிளறிவிட்டுள்ளது. அயோத்தியில் உள்ள பிரச்சனைக்குரிய மசூதியை இடித்துவிட்டு, 'ராமர் அவதரித்த' அந்த இடத்தில் கோயில் கட்டும் திட்டத்துடன் பாரதீய ஜனதா தலைமையில் இந்து வெறியர்கள் ரத யாத்திரை கிளம்பியுள்ளனர். குஜராத்திலுள்ள சோமநாதர் கோயிலிலிருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம் மேற்கு நோக்கி வட மாநிலங்களில் பிரச்சாரம் செய்து கொண்டே அக்.30 அன்று அயோத்தியைச் சென்றடையும்; அன்று திட்டமிட்டபடி கோயில் கட்டும் பணி தொடங்கும் என்றுகொக்கரிக்கின்றனர்.

இட ஒதுக்கீடு முடிவை வி.பி.சிங் அறிவித்து இந்து ஓட்டுக்களைப் பிளவுபடுத்திய ஆத்திரத்தில், மீண்டும் அதைக் கைப்பற்றுவதற்கான ஒரே துருப்புச் சீட்டான ராமஜென்ம பூமி விவகாரத்தை மீண்டும் உசுப்பிவிட்டு இடைத்தேர்தலைக் குறிவைத்து பாரதீய ஜனதா ஓட்டு வேட்டைக்குக் கிளம்பியுள்ளது. இட ஒதுக்கீடு கிளர்ச்சியால் நாடே பற்றி எரிவதாகவும், பஞ்சாப் - காஷ்மீர் பிரச்சனைகளால் நாட்டுக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் கூப்பாடு போட்ட பாரதீய ஜனதா, அதன் கூற்றுப்படி நாடு 'இக்கட்டான நிலையில்' உள்ளபோது ராமஜென்ம பூமி விவகாரத்தைக் கிளப்பி மிரட்டிப் பணிய வைக்கும் கிரிமினல் வேலையில் இறங்கியுள்ளது.

இட ஒதுக்கீடு எதிர்ப்பு கிளர்ச்சிகள், பதவிப் போட்டிக்காக ஜனதா தள கட்சிக்குள் நடந்து வரும் நாய்ச்சண்டைகள், பஞ்சாப், காஷ்மீர் - முதலான நெருக்கடிகளில் சிக்கி விழிபிதுங்கி நிற்கும் வி.பி.சிங் அரசு, பாரதீய ஜனதா தனது ஆதரவை விலக்கிக் கொண்டு விடுமோ என்ற பீதியில் உறைந்து போயுள்ளது. சங்கராச்சாரி, இமாம் புகாரி ஆகிய இந்து, முஸ்லீம் மதத் தலைவர்களைக் கொண்டு சமரசப் பேச்சு வார்த்தை நடத்துவது அல்லது கோர்ட் மூலம் தீர்வு காண்பது என்று பாரதீய ஜனதாவுக்கு விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்த வி.பி.சிங் அரசு முயலுகிறது. அதே சமயம் பாரதீய ஜனதா தனது ஆதரவை விலக்கிக் கொண்டு விட்டால், தாங்கள் வகுப்புவாதத்தை எதிர்த்துப் போராடுவதாக காட்டிக் கொள்வதற்காக அயோத்தியில் கோயில் கட்ட முயற்சிப்பவர்களைக் கைது செய்யுமாறு உ.பி. அரசுக்கு உத்தரவு போட்டுள்ளது.

இருப்பினும் சமரசத்தையும் ஏற்க முடியாது; ராமர் கோயிலைக் கட்டியே தீருவோம் என்று மசூதியை இடிக்க இந்து வெறியர்கள் திரிசூலங்களை உயர்த்துகின்றனர். ராமர் கோயிலை இடித்து விட்டு மொகலாய மன்னரான பாபர் மசூதியைக் கட்டினார் என்பதற்கு வரலாற்று ரீதியான ஆதாரமோ, அகழ்வாராய்ச்சி சான்றுகளோ கிடையாது. இந்து வெறியர்கள் இதை தேசியப் பிரச்சனையாக்குகிறார்கள் என்பதற்காக, கலவரங்களிலிருந்து நாட்டைக் காப்பதற்காக இந்து வெறியர்களுக்கு விட்டு கொடுப்பது என்பது சிறுபான்மை மக்களின் வழிபாட்டு உரிமையை மறுத்து அவமதிப்பதாகும். எங்கெல்லாம் மசூதி உள்ளதோ அங்கெல்லாம் ஆண்டவன் அவதரித்த இடமாகக் கூறி கலவரங்களைக் கட்டவிழ்த்து விடும் இந்து வெறியர்களுக்குச் சாதகமாக நடந்து கொள்வதாகும்.

ஆனாலும் இந்து ஓட்டுக்களை இழந்து விட விரும்பாமல் ஓட்டுக் கட்சிகள் 'நடுநிலை' வகிக்கின்றன. ஆளும் தேசிய முன்னணி அரசு பொறுப்பை உ.பி. அரசின் தலையில் கட்டி விட்டு நழுவிக் கொள்கிறது. குறைந்த பட்சம் யாத்திரை நடக்கும் மாநிலங்களில் வகுப்புவாத எதிர்ப்புப் பிரச்சாரம் செய்யக் கூட வக்கற்றுக் கிடக்கிறது. தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்தில் எல்லோரும் சேர்ந்து தீர்மானம் போட்டு பாரதீய ஜனதாவின் யாத்திரையை நிறுத்திவிடலாம் என்று தும்பை விட்டு வாலைப் பிடிக்க முயற்சித்தது.ஆனால் பாரதீய ஜனதா இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்து தப்பித்துக் கொண்டது. பாரதீய ஜனதாவின் இந்து வெறியை வெளிப்படையாக எதிர்க்கத் திராணியின்றி, தமது விசுவாசியான பூரி சங்கராச்சாரி மூலம் பாசிச காங்கிரசு எதிர்ப்புக் காட்டுகிறது. போலிக் கம்யூனிஸ்டுகளோ, கோயில் கட்டுவதில் தவறில்லை; மசூதியை இடித்துவிட்டுக் கட்டுவது தான் தவறு என்று மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டுகின்றனர்.

இந்நிலையில் உ.பி. முதல்வர் முலயம்சிங் யாதவ் பேரணி, பொதுக்கூட்டங்கள் மூலம் வகுப்புவாத எதிர்ப்பு இயக்கத்தை துணிவுடன் நடத்தி வருகிறார். வகுப்பு ஒற்றுமை நல்லிணக்கத்திற்கான பிரச்சாரத்தை விடாப்பிடியாக செய்யும் அதே சமயம் அக்.30 அன்று அயோத்தியில் வழக்கமாக நடைபெறும் மதச் சடங்கில் யாரும் கலந்து கொள்ளாதீர்கள் என்று எச்சரித்து, பாரதீய ஜனதாவின் வகுப்புவாத வெறியை அம்பலப்படுத்தி வருகிறார். அவரது நோக்கம் வேறாக இருந்தாலும், தமது கொள்கையில் ஊசலாட்டமாக இருந்தாலும் இன்றைய நிலையில் அவரது இயக்கத்தை வரவேற்று ஆதரிப்பது மதவெறி எதிர்ப்பு சக்திகளின் கடமையாகும்.

இந்துவெறி பாசிச சக்தியாக வளர்ந்து வரும் பாரதீய ஜனதாவின் கொட்டத்தை முறியடித்து, வரலாற்று ரீதியாகவும் பாரம்பரிய ரீதியாகவும் வழிபாட்டு உரிமையுள்ள முஸ்லீம்களுக்கே அயோத்தியிலுள்ள மசூதியை ஒப்படைக்க வேண்டும். இப்படிச் செய்தாலும் அதற்கு எதிராக இந்து வெறியர்கள் கலவரங்களைத் தூண்டவே செய்வர். எனவே முலயம்சிங் யாதவ் நடத்திவரும் வகுப்புவாத எதிர்ப்பு இயக்கத்தை விரிவு படுத்தி படர்ந்து வரும் பாசிச அபாயத்திற்கு எதிரான புரட்சிகர இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதுதான் தீர்வாக அமையுமே தவிர, விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்தும் எந்த முயற்சியும் நாட்டையும் மக்களையும் பேரழிவில் தள்ளிவிடும்.

படிப்பகம்

www.padippakam.com

இடைத் தேர்தல் தயாரிப்புகள்:

# கொள்கையற்ற கூட்டணியும் குறுக்குவழித் திட்டங்களும்

அண்ணன் எப்போ சாவான்? திண்ணை எப்போ காலியாகும்? என்ற நப்பாசையுடன் இன்று தேசியக் கட்சிகள் அலைகின்றன. சிறுபான்மை தேசிய முன்னணி அரசு எப்போது கவிழும்? எப்படி கவிழ வைக்கலாம்? அடுத்து யாருடன் கூட்டு சேர்ந்தால் ஆட்சி அமைக்க முடியும் என்ற ஆரூடத்தில் இடைத் தேர்தலைக் குறிவைத்து அவர்கள் கணக்குப் போடத் தொடங்கி விட்டனர்.

தேசிய முன்ன்ணி ஆட்சி தொடருமா, இடைத் தேர்தல் வருமா என்கிற விவகாரம் இன்று சூடேறியப் பிரச்சனையாகி விட்டது. ராம ஜென்ம பூமி/ பாபர் மசூதி தாவாவையொட்டி பாரதீய ஜனதா விடுத்துள்ள எச்சரிக்கையும், அடுத்த தேர்தலில் தனித்து போட்டியிடுவோம் என்கிற அதன் திடீர் அறிவிப்பும் தேசிய முன்னணியுடன் அதன் தேனிலவு முடிந்து விவாகரத்துக்கான சூழ்நிலை நெருங்கி விட்டதைக் காட்டுகின்றன.

### ஓட்டுக் கட்சிகளின் இடைத்தேர்தல் தயாரிப்புகள்

பாரதீய ஜனதாவின் மிரட்டலைத் தொடர்ந்து பிரதமர் வி.பி.சிங்கே பீதியில் உறைந்து போயுள்ளார். ''பாரதீய ஜனதா ஆதரவு தரமறுத்தால் இடைத் தேர்தல் வராது; காங்கிரசு ஆட்சிதான் வரும். தேசிய முன்னணி அரசு ஆட்சியில் நீடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டால் குடியரசுத் தலைவர் முறைப்படி பெரிய கட்சியான காங்கிரசை ஆட்சி அமைக்கக் கோருவார். நாங்கள் எதிர்க்கட்சியாக அமர்ந்து செயல்படவும் தயாராக உள்ளோம்'' என்று பழியை பாரதீய ஜனதா மீது சுமத்திவிட்டு, அனுதாபத்தைத் தேடி ஆதாயமடையத் துடிக்கிறார். அதே சமயம் அவசரமாக மந்திரிசபைக் கூட்டத்தைக் கூட்டி, இடைத் தேர்தலுக்கான தயாரிப்புகள் பற்றியும் விவாதித்துள்ளார்.


''பிரதமர் இப்படி பொறுப்பின்றிப் பேசுவதே தேசிய முன்னணி அரசு தனது தகுதியை இழந்து விட்டதைக் காட்டுகிறது. மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுலாக்குவது உட்பட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் சிறுபான்மை தேசிய முன்னணி அரசு மற்ற கட்சிகளின் கருத்தைக் கேட்காமல் தன்னிச்சையாக செயல்பட்டு வருகிறது. எங்களது ஆதரவில் தான் அது நடைபோடுகிறது என்பதை மறந்து விட்டது. அதன் கையாலாகாத் தனத்தினால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியவில்லை. மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுலாக்கியதன் விளைவாக நாடே பற்றி எரிகிறது. தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு தருவதைப் பற்றி நாங்கள் பரிசீலிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. அடுத்த தேர்தலில் எவ்வித சந்தர்ப்பவாதக் கூட்டணியுமின்றி தனித்துப் போட்டியிடுவோம். ஆனால் இடைத்தேர்தல் வருமா என்று கூற முடியாது. தே.மு.அரசு ஐந்தாண்டு காலம் பதவியில் நீடிக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறோம்'' என்று ஆட்சியைக் கவிழ்த்த அவப்பெயர் தமக்கு வரக்கூடாது என்று எச்சரிக்கையுடன் தே.மு. அரசு மீது பழி போட்டு மக்களின் அதிருப்தியை அறுவடை செய்து பாரதீய ஜனதா ஆதாயமடையப் பார்க்கிறது. அதே சமயம் தேர்தலைக் குறிவைத்து இடைக்கால கட்சிக் கமிட்டியை நிறுவியும், கட்சியின் முதல்வர்கள் உள்ளிட்டு அனைத்து எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்களைக் கொண்ட ஆய்வு கூட்டத்தை அவசரமாக நடத்தியும் இடைத்தேர்தல் பற்றி பாரதீய ஜனதா விவாதித்துள்ளது.

''தேசிய முன்னணி அரசு கவிழ்ந்தால் நாங்கள் ஆட்சி அமைக்க மாட்டோம். குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க நாங்கள் ஒருக்காலும் முயற்சிக்க மாட்டோம். இடைத்தேர்தலுக்கு இப்போது அவசியமில்லை; ஒருக்கால் தேர்தல் வந்தால் மக்கள் எவ்வாறு தீர்ப்பளிக்கிறார்களோ அதன்படியே செய்வோம்'' என்று உத்தம சிகாமணிகளாக நாடகமாடி காங்கிரசு ஆதாயமடையத் துடிக்கிறது. அதேசமயம் மாநில காங்கிரசு கமிட்டிப் பிரதிநிதிகள், எம்.பி.க்கள், முதல்வர்களைக் கொண்ட அவசரக் கூட்டம் நடத்தி இடைத்தேர்தலைப் பற்றி விவாதித்துள்ளது.

ஆளும் வர்க்கக் கட்சிகளுடன் மாறி மாறி கூட்டுச் சேர்ந்து ஓட்டுப் பொறுக்கும் போலிக் கம்யூனிஸ்டுகள், ''இன்றைய நிலையில் தேசிய முன்னணி ஆட்சியே சிறந்தது. ஆட்சி கவிழ்க்கப் பட்டால் அது நாட்டுக்கே ஆபத்தாகிவிடும். எங்களது ஆதரவை விலக்கிக் கொள்வதைப் பற்றிய பேச்சுக்கே இடமில்லை. இடைத்தேர்தல் தேவையற்றது'' என்று ஒரு பக்கம் பேசிக் கொண்டே மறுபக்கம் வரப்போகும் தேர்தலில் யாருடன் கூட்டுச் சேரலாம் என்பது பற்றி டெல்லியில் கூடி விவாதித்துள்ளனர்.

ஆக, எல்லா ஓட்டுக் கட்சிகளுமே இடைத்தேர்தல் வராது என்று கூறிக் கொண்டே அதற்கான தயாரிப்பில் இறங்கி விட்டன. எந்தக் கட்சியுடன் கூட்டுச் சேரலாம், எத்தனை எம்.பி.க்களை விலைபேசி தம்பக்கம் இழுக்கலாம், எந்தெந்த சாதிகளுடன் கூட்டணி கட்டிக் கொண்டால் ஓட்டு விழும், எந்தப் பிரச்சினையைக் கையிலெடுத்தால் அனுதாப ஓட்டு கிடைக்கும், எந்த விவகாரத்தைக் கிளறினால் மக்கள் வெறுப்படைந்து எதிர்க்கட்சியைப் புறக்கணிப்பார்கள், மக்களிடம் திடீர் செல்வாக்கைப் பெறுவதற்கான குறுக்குவழி என்ன என்கிற மதிப்பீடுகள், கணக்கீடுகள், ஆரூடங்களில் ஓட்டுக் கட்சிகள் கவனம் செலுத்துகின்றன.

இடைத் தேர்தலைக் குறிவைத்து கடந்த ஜூலை மாத இறுதியிலேயே எல்லோரையும் முந்திக் கொண்டு பாரதீய ஜனதா தயாரிக்கத் தொடங்கி விட்டது. தேவிலால் கோஷ்டிக்கும் வி.பி.சிங் கோஷ்டிக்கும் இடையே பதவிப் போட்டிக்கான நாய்ச் சண்டை முற்றி, தேவிலால் வீழ்த்தப்பட்ட பிறகு சென்னையில் கூடிய பாரதீய ஜனதாவின் செயற்குழு, தே.மு. அரசை வெளிப்படையாக சாடத் தொடங்கியது. ''சிறுபான்மை தே.மு. அரசுக்கு உட்கட்சி சண்டையைக் கவனிக்கவே நேரம் போதவில்லை. அவர்கள் நாட்டைக் கவ்வியுள்ள முக்கிய






படிப்பகம்

www.padippakam.com

மான பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதில்லை. அது பலவீனமான அரசாகி விட்டது. ஐந்தாண்டு காலம் பதவியில் நீடிக்குமா என்பதே சந்தேகமாக உள்ளது'' என்று அத்வானி குற்றம் சாட்டினார். அந்தக் கூட்டத்திலேயே இடைத்தேர்தல் ஏற்பாட்டுக்கான குழுவும் அமைக்கப்பட்டது.

### வி.பி.சிங் வகுத்துள்ள வியூகம்

எந்த நேரத்திலும் பாரதீய ஜனதா, தே.மு. அரசுக்கான ஆதரவைக் கைகழுவலாம் என்ற அபாயத்தைப் புரிந்து கொண்ட வி.பி.சிங் இடைத் தேர்தலில் ஓட்டுப் பொறுக்கும் உத்தியோடு கணக்கு போட்டு காய்களை நகர்த்தத் தொடங்கினார். ராம ஜென்ம பூமி/ பாபர் மசூதி விவகாரத்தில் கோயில் கட்ட அனுமதித்தால் அது பாரதீய ஜனதாவுக்கு சாதகமாகிவிடும். எதிர்த்தால் பாரதீய ஜனதா உறவை முறித்துக் கொள்ளும். ஆனால் அதேசமயம் முஸ்லிம்களின் ஓட்டுக்களைக் கைப்பற்ற முடியும் என்று வி.பி.சிங் கணக்கு போட்டுள்ளார். எனவே ஒருபுறம் கோர்ட்டு தீர்ப்பை ஏற்பது, இந்து - முஸ்லிம் சமயத் தலைவர்கள் கூடிப் பேசி தீர்வு காண்பது, என்று அறிவித்துக் கொண்டே, மறுபுறம் அயோத்தியில் அக்.'30 அன்று ராமர் கோயில் கட்ட முயற்சிப்பவர்களைக் கைது செய்யுமாறு உத்திரவு பிறப்பித்துள்ளார். அதன்படியே, அதிரடி அரசியல் நடத்தினால்தான் பதவியைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்பதால் உ.பி. முதல்வர் முலாயம்சிங் யாதவும் பாரதீய ஜனதாவுக்கு எதிராக நெருப்பைக் கக்குகிறார்.

இடைத் தேர்தல் வந்தால் ஜனதாதளம் தனித்து போட்டியிட நேரிடும். ஜனதா தளத்துக்கு தென் மாநிலங்களில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களே இல்லை. ஆந்திராவில் தெலுங்கு தேசக் கட்சியும் தமிழகத்தில் தி.மு.க. வும் தேசிய முன்னணியில் கூட்டு சேர்ந்தால் ஓரளவு வெற்றி கிட்டலாம். மற்றபடி வட மாநிலங்களையே பிரதானமாகச் சார்ந்து நிற்க வேண்டியுள்ளது. அங்கேயும் மத்தியப் பிரதேசம், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பாரதீய ஜனதா பலமாக உள்ளது. மகாராஷ்டிரா, ஒரிசாவில் இழுபறி நிலைமைதான் ஏற்படும். எஞ்சியுள்ள பீகார், உ.பி. குஜராத், ராஜஸ்தான் ஆகிய 4 மாநிலங்களில் மட்டுமே வெற்றி பெற வாய்ப்புள்ளது. இங்கேயும் 80% மக்கள் இந்துக்களாக உள்ளனர். பாரதீய ஜனதா இந்து வெறியூட்டி இவர்களைக் கவர்ந்திழுத்து விடும். எனவே, இந்து ஓட்டுக்களைப் பிளவுபடுத்த என்ன வழி என்று யோசித்த வி.பி.சிங் இவர்களில் 50% பேர் பிற்படுத்தப்பட்ட மக்கள் என்பதைப் புரிந்து கொண்டு மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுலாக்கப் போவதாக அறிவித்தார்.

ஆகஸ்ட் 8ம் தேதியன்று இந்த அறிவிப்பை வெளியிட்ட வி.பி.சிங், அடுத்த ஒரு வாரத்திலேயே ஆகஸ்ட் 15 'சுதந்திர' தின உரையின் போது தேர்தலைக் குறிவைத்து அடுத்து சில கவர்ச்சித் திட்ட அறிவிப்புகளை, வெளியிட்டார். விவசாயிகளின் ஓட்டுக்களைக் கைப்பற்றும் நோக்கத்துடன், வரும் பத்தாண்டுகளை விவசாயிகளின் பத்தாண்டு களாக்குவோம் என்று முழங்கினார். கிராமப்புற வேலையின்மையை ஒழிக்கப் போவதாகச் சூளுரைத்தார். இது தவிர தாழ்த்தப்பட்டோரின் நண்பனாகக் காட்டிக் கொள்ள அம்பேத்கார் நூற்றாண்டு விழா, தபால் தலைகளை வெளியிடுவதாக அறிவித்தார். முகமதுநபி பிறந்த நாளை பொது விடுமுறையாக்குவது, பஞ்சாயத்துகளில் பெண்களுக்கு 30% ஒதுக்கீடு முதலான திடீர் அறிவிப்புகளை வெளியிட்டார். வி.பி.சிங் அரசை ஆதரிக்கும் கோயங்காவின் எக்ஸ்பிரஸ் நாளேடு கூட, நாட்டின் பல முக்கிய பிரச்சனைகளில் கவனம் செலுத்தாமல், கவர்ச்சிவாத அடிப்படையில் தேர்தலைக் குறிவைத்து தரப்படும் வாக்குறுதிகள் என்று தலையங்கம் தீட்டி வி.பி.சிங் அரசை விமர்சித்தது.




'இராவண லீலா' நடத்த இராம ஜோதி ஏந்தி இரத யாத்திரை புறப்பட்டுள்ள அத்வானி - இந்து வெறி பத்திரிக்கையான ''ஆர்கனைசர்'' வெளியிட்டுள்ள கருத்துப் படம்

### பாரதீய ஜனதாவின் இந்துவெறித் திட்டம்

வி.பி.சிங்கின் சாணக்கியத் தனத்தைப் புரிந்து கொண்ட பாரதீய ஜனதா, வேறொரு கணக்கு போட்டு இடைத் தேர்தலுக்கான தயாரிப்புக்களைச் செய்து வருகிறது. இட ஒதுக்கீடு எதிர்ப்புக் கிளர்ச்சியை பின்னாலிருந்து கொண்டே தூண்டிவிட்டு அதையே தேசியப் பிரச்சினையாக முன்னிறுத்துவது; வி.பி.சிங் அரசு அவசர கோலத்தில் இட ஒதுக்கீட்டை அறிவித்ததால் விபரீதமான நிலைமை ஏற்பட்டு விட்டதாக, அடக்குமுறையும் வன்முறையும் பெருகிவிட்டதாக குற்றம் சாட்டி மக்களின் கவனத்தை அதில் குவியவைத்து அதிருப்தியை உருவாக்குவது; மறுபுறம் ராமஜென்ம பூமி விவகாரத்தைக் கிளறிவிட்டு இந்து ஓட்டுக்களைக் கைப்பற்றுவது என்ற திட்டத்துடன் அது களத்தில் இறங்கியுள்ளது.

இதுநாள்வரை விசுவ ஹிந்து பரிஷத், பஜ்ராங் தளம் முதலான தனது வெகுஜன அமைப்புகள் மூலம் ராமஜென்ம பூமி விவகாரத்தை இயக்கிவந்த பாரதீய ஜனதா, இப்போது அத்வானி தலைமையில் அயோத்தியை நோக்கிய ரத யாத்திரையை தானே முன்னிருந்து நடத்துகிறது. தேர்தலைக் குறிவைத்து வட மாநிலங்களில் இந்து வெறியூட்டும் பிரச்சாரத்தைச் செய்வதற்கான ஏற்பாடு தான் இது. இந்த ரத யாத்திரை அக். 30 அன்று அயோத்தியை வந்தடையும். அன்று திட்டமிட்டபடி ராமர் கோயில் கட்டும் பணி துவங்கும் என்று இந்து வெறியர்கள் கொக்கரிக்கின்றனர்.

அதேசமயம் உ.பி. ஜனதா தள முதல்வரான முலாயம்சிங் யாதவ் அயோத்தியில் ராமர் கோயில் கட்ட அனுமதிக்க முடியாது; கோர்ட்டில் வழக்கு இருக்கும் போது இவ்வாறு செய்வது சட்ட விரோதமானது; மீறி நடப்பவர்களைக் கைது செய்வோம். எனவே அக். 30 அன்று அயோத்தியில் நடக்கும் சடங்கில் யாரும் கலந்து கொள்ளாதீர்கள்'' என்று மக்களை எச்சரிக்கிறார். ''கோர்ட் மூலம் வழக்கில் தீர்ப்பு கிடைக்க வருடக் கணக்காக காத்திருக்க முடியாது. மேலும் மதவிவகாரங்களில் கோர்ட் தலையிடக் கூடாது. ஷாபானு ஜீவனாம்ச வழக்கில் கோர்ட் தீர்ப்பை மதிக்காத முஸ்லிம்கள் இப்போது மட்டும் கோர்ட் முடிவை ஏற்பார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம்? வழக்கைக் காரணம் காட்டி காலத்தை நீட்டிப்பதானது முஸ்லிம்களுக்கு சாதகமானதாகும்'' என்று எதிர்சவால் விடுக்கிறது, பாரதீய ஜனதா.

எனவே அக். 30 அன்று கலவரமும் கைதுகளும் நடப்பது நிச்சயமாகிவிட்டது. இப்படி நடக்கும்; நடக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளுடன்தான் பாரதீய ஜனதா புறப்பட்டிருக்கிறது. அரசு அடக்கு முறையைக் காரணம் காட்டி தே.மு. அரசுக்குத் தரும் தனது ஆதரவை விலக்கிக் கொள்ள முடியும்; மறுபுறம் இந்துக்களை தம் பின்னே திரட்டிக் கொள்ளவும் முடியும் என்கிற திட்டத்துடன்தான் கோயில் கட்டும் திட்டத்தையும் ரத யாத்திரையையும் அறிவித்துள்ளது. மேலும், தே.மு. அரசு தாறுமாறான பாதையில் சென்றதும் கறாராகத் துண்டித்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்ட கொள்கை உறுதிமிக்க கட்டுப்பாடான கட்சி என்ற நற்பெயரையும் இதன்மூலம் சம்பாதிக்க முடியும் என்று கணக்கு போட்டுள்ளது.

### பாசிச காங்கிரசின் சூழ்ச்சி!

காங்கிரசுக் கட்சியோ சூழ்ச்சியும் தந்திரமும் கொண்ட வேறொரு திட்டத்துடன் இடைத் தேர்தலுக்கான தயாரிப்புகளை செய்யக் கிளம்பியுள்ளது. வி.பி.சிங் அரசின் மீதான மக்களின் அதிருப்தியை சாதகமாக்கிக் கொள்வது, பாரதீய ஜனதாவை வகுப்புவாதத்தைத் தூண்டுவதாக குற்றம் சாட்டி தனிமைப்படுத்துவது, காங்கிரசைத் தவிர வேறெந்த கட்சியாலும் நிலையான ஆட்சியைத் தரமுடியாது, நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் முடியாது என்ற மாயையை மக்களிடம் உருவாக்குவது; ஓட்டுப் பிளவைச் சாதகமாக்கிக் கொண்டு மீண்டும் ஆட்சியைப் பிடிப்பது என்கிற திட்டத்துடன் அது களத்தில் இறங்கியுள்ளது. இதற்காக காந்தி பிறந்த அக்.2ந் தேதி முதலாக 'சத்பவன யாத்ரா' (நல்லெண்ணப் பயணம்) நடத்த தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்ற பாசிச இந்திரா முன்பு கையாண்ட உத்தியை செயல்படுத்தத் துவங்கியுள்ளது. அதாவது, மொரார்ஜி தலைமையிலான ஜனதா அரசை வீழ்த்த, ஜனதா கட்சியைப் பிளந்து சரண்சிங் கோஷ்டியை ஆதரித்து பின்னர் அதையும் இந்திரா கவிழ்த்ததைப் போல, இப்போது வி.பி.சிங் கோஷ்டிக்கு எதிராக சந்திரசேகர் - தேவிலால் கோஷ்டியை ஆதரிக்கும் நயவஞ்சகத் திட்டத்துடன் பேரங்களை ரகசியமாக நடத்தி வருகிறது. எதிர்பார்த்தபடியே சந்திரசேகர் கும்பல் வி.பி.சிங் கோஷ்டியை எதிர்த்து கலகம் செய்யத் துவங்கி விட்டது. வி.பி.சிங்குக்குப் பதிலாக சந்திரசேகர் தலைமையை நிறுவும் திட்டம் தற்காலிகமாகத் தோல்வி அடைந்தாலும், தேர்தல் நெருங்கும் போது கணிசமான எம்.பி.க்களின் ஆதரவுடன் பகிரங்கமாக வெடிக்கலாம். இதைக் காட்டி, அன்றைய ஜனதாவைப் போலவே இன்றைய ஜனதா தளமும் நெல்லிக்காய் மூட்டை போன்ற கூட்டணிதான்; பதவி வெறியர்களின் சந்தர்ப்பவாதக் கூடாரம் தான் என்ற கருத்தைப் பரப்பி நிலையான ஆட்சியை காங்கிரசு மட்டுமே தரமுடியும் என்று நியாயப்படுத்தி ஓட்டுக்களைக் கைப்பற்ற கணக்கு போடுகிறது.

### போலிக் கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாத கணக்கு


போலிக் கம்யூனிஸ்டுகள் தமது சந்தர்ப்ப வாதத்திற்கேற்ப யார் காலைப் பிடிக்கலாம் என்று கணக்கு போடுகின்றனர். அதற்கு முன்பாக இடதுசாரி கூட்டணி கட்சிகளுக்கிடையே உள்ள முரண்பாடுகளை தற்காலிகமாக தீர்த்துக் கொள்ள 'மார்க்சிஸ்ட்' கட்சி தனது இடதுசாரி கூட்டாளிகளுடன் சமரசம் பேசிவருகிறது. காங்கிரசு அல்லது தேசிய முன்னணி ஆகிய இருதரப்பில் யாருடனும் கூட்டுச் சேரும் நிலைமை வரலாம் என்பதால் இப்போதைக்கு பாரதீய ஜனதாவுக்கு எதிராக வகுப்புவாத எதிர்ப்பு வாரம் என்ற பெயரில் அக். 23 முதல் பேரணி, பொதுக் கூட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளது. ஆனால் அதிலேயும் கூட உறுதியாக இல்லாமல், ''அயோத்தியில் கோயில் கட்டுவது தவறல்ல; மசூதியை இடித்து விட்டு கட்டுவதுதான் தவறு'' என்று 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் அறிவித்துள்ளனர். எனவே அவர்களது வகுப்புவாத எதிர்ப்பு எந்த லட்சணத்தில் இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. இதற்கிடையே 'மார்க்சிஸ்ட்' கட்சிக்குள்ளேயே கூட்டணி பற்றிய கருத்து மோதல்கள் முற்றத் தொடங்கி விட்டன. நம்பூதிரிபாடு தலைமையிலான கேரள கோஷ்டி பாரதீய ஜனதாவுடன் கூட்டு சேரக் கூடாது என்று வாதிடுகிறது. ஜோதிபாசு தலைமையிலான மே.வங்க கோஷ்டியோ, கூட்டணி இல்லா விட்டாலும் தொகுதி உடன்பாடு செய்து கொள்ள வேண்டும் என்று வாதிடுகிறது. வலதுகளோ மீண்டும் காங்கிரசுடன் கூட்டுச் சேரும் நோக்கத்துடன் தே.மு. அரசை எதிர்த்து விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

### கொடிகளில் வேற்றுமை!
### கொள்கையில் ஒற்றுமை!

ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் தயாரிப்புகளுக்கேற்ப பத்திரிக்கைகளும் தம்பங்குக்கு கூட்டணி பற்றிய ஊகங்கள், வெற்றி வாய்ப்பு பற்றிய மதிப்பீடுகள், கணக்கீடுகளை ஊதிப் பெருக்கத் தொடங்கி விட்டன. ஓட்டுக் கட்சிகள் மற்றும் பத்திரிக்கைகளின் ஊகங்களும் மதிப்பீடுகளும் கணக்கீடுகளும் மாற்றுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதல்ல; எந்தக் கட்சியுடன் கூட்டணி சேர்ந்தால் ஓட்டு கிடைக்கும், எத்தனை எம்.பி.க்களை இழுத்தால் ஆட்சியைப் பிடிக்க முடியும், அனுதாப ஓட்டு எவ்வளவு விழும், எதிர்க்கட்சி மீதான அதிருப்தி ஓட்டு எவ்வளவு கிடைக்கும், தனித்தனியே நின்று ஓட்டுக்களைப் பிரிப்பதன் மூலம் வெற்றி பெறமுடியுமா, எந்தெந்த சாதிகளுடன் கூட்டுச் சேரலாம், சிறுபான்மை மதத்தவரின் ஓட்டுக்களைக் கவரும் வழி என்ன என்ற அடிப்படையிலே அவை அமைந்துள்ளன.

இன்றைய ஓட்டுக் கட்சிகள் எதுவுமே மாற்றுக் கொள்கைகளைப் பேசி மக்களைத் திரட்டுவதற்கான தகுதியை அறவே இழந்து விட்டன. மக்களின் மனநிலை எதில் கவனம் செலுத்துகிறதோ அதை உசுப்பிவிட்டு ஓட்டுக்களைக் கைப்பற்றுவதிலேயே குறியாக உள்ளனர். தொடர்ந்து தாக்கும் விலையேற்றத்தைக் கண்டு மக்கள் அதிருப்தி அடைகிறார்கள் என்றால் அதைச் சொல்லியே ஓட்டுப் பொறுக்குவது; விலையேற்றத்தைத் தடுப்பதற்கான தொலை நோக்குத் திட்டமோ கொள்கையோ எதுவுமின்றி மக்களின் வெறுப்புணர்வைச் சாதகமாக்கிக் கொள்வதிலேயே குறியாக உள்ளனர். நாட்டைக் கவ்வியுள்ள பிரச்சினைகள் எதிலும் அவர்களுக்கு மாற்றுக் கொள்கை எதுவும் கிடையாது. எல்லோருமே ஒருமைப்பாடு, சோசலிசம், வகுப்புவாத எதிர்ப்பு, வறுமை ஒழிப்புக் கொள்கைகளை பேசுகின்றனர். எல்லோருமே அரசு பயங்கரவாத அடக்குமுறையை நியாயப் படுத்துகின்றனர். அவர்களது கொடிகளின் நிறத்தில்தான் வேற்றுமை உள்ளதே தவிர கொள்கைகளில் அல்ல.

பாசிச ராஜீவ் ஆட்சியின் மீதான மக்களின் வெறுப்பு, போபர்ஸ் ஊழல் முதலானவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு ஆட்சிக்கு வந்த தேசிய முன்னனி அரசு, காங்கிரசுக்கு மாற்றுக் கொள்கை கொண்டதாக, இரண்டாவது சுதந்திரத்தைச் சாதித்து விட்டதாக மார் தட்டியது. ஆனால் தேசிய முன்னணியே கட்சி மாறிகள், பிழைப்புவாதிகள், ஊழல் பெருச்சாளிகள், கிரிமினல்களின் கூடாரம் தான் என்பதும் ராஜீவின் கொள்கைகளை அடியொற்றிச் சென்று பாசிசத்தைச் சுமந்து வரும் பல்லக்குதான் என்பது வெகுவிரைவிலேயே வெளிச்சமாகி விட்டது.



இப்படி மாற்றுக் கொள்கை எதுவுமின்றி ஆட்சிக்கு வரும் ஓட்டுக் கட்சிகளால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது. மாறாக, பிரச்சினைகள் தீவிரமடையவே செய்யும். ஆட்சிகள் மாறியும் கூட பஞ்சாப், காஷ்மீர், அசாம் பிரச்சனையிலிருந்து, வறுமை, வேலையின்மை, விலையேற்றம் வரை எதுவும் தீராமல் மேலும் தீவிரமடைந்துள்ளதற்கு இதுவே காரணம். கொள்கை அடிப்படையற்ற ஓட்டுக் கட்சிகளின் இத்தகைய சந்தர்ப்பவாதக் கூட்டணிகள் கூட நாளை சிதைந்து போய்விடும். நாடாளுமன்ற ஜனநாயகமே கேலிக் கூத்தாகிவிடும். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் யோக்கியதை மேலும் மேலும் அம்பலப்படும் போது அம்மணமாக பாசிசம் அரங்கேறுவதற்கு வாய்ப்பாக அமைந்து விடும். எனவே இடைத் தேர்தலைக் குறிவைத்து ஓட்டுக் கட்சிகள் செய்துவரும் மாய்மாலங்களுக்கு உழைக்கும் மக்கள் பலியாகி விடாமல் அம்பலப்படுத்த வேண்டும். படர்ந்துவரும் பாசிச அபாயத்தை முறியடிக்க பெரும் படையாய் திரண்டெழ வேண்டும்.

● மனோகரன்



படிப்பகம்

கரூர் வட்டாரத்தில்...


www.padippakam.com

# திடீர் பிள்ளையார் கோவில்களின் பின்னணி!

"முதலாளிக்கும் தொழிலாளிக்கும் பிரச்சினையா? ஊழியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் பிரச்சினையா?" - பிள்ளையார் கோவில்களை உருவாக்கு! திடீர் மத விழாக்களை நடத்து! பிரச்சினை திசை திரும்பும்! தொழிலாளர்கள், ஊழியர்கள் தங்களுக்குள்ளேயே அடித்துக் கொள்வார்கள்!" - இப்படி ஒரு வஞ்சக தாக்குதலை அரசு மற்றும் தனியார் தொழிற்சாலை நிறுவனங்கள் தமிழகத்தில் துவக்கியுள்ளன. கரூர் நகரை சுற்றி மட்டும் அரசு அலுவலகங்களில், அரசு குடியிருப்பில், அரசு தொழிற்சாலையில் பல திடீர் பிள்ளையார் கோவில்கள் உருவாகிவிட்டன.

7.9.90 அன்று கரூர் தாலுக்கா அலுவலகத்தில் கிருபானந்த வாரியார் தலைமையில் ஒரு புது பிள்ளையார் உருவானார். கரூர் தாந்தோணி மலையில் அரசு ஊழியர்கள் குடியிருப்பில் பல இனமக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இன்னொரு பிள்ளையார், "சக்தி விநாயகர்" தோனறிக் கொண்டிருக்கிறார். கரூர் தாலுக்கா அலுவலகத்திலும், தந்தோணி மலை விட்டுவசதி வாரிய குடியிருப்பிலும் கோரிக்கை விடுத்த பல பிரச்சினைகள் நிறைவேறவில்லை. ஆனால், யாரும் கோரிக்கை வைக்காமலே முழுவேகத்தில் பிள்ளையாரை உருவாக்குகிறார்கள், நிர்வாகத்தினர். இதற்காக பகுதி பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ்., இந்து மதவெறிக் கட்சிகளுடன் இணைந்துக் கொள்கின்றனர். தாங்களே இதற்கு பெருந்தொகையை மறைமுகமாக கொடுத்து உதவுகின்றனர். பல இன மக்கள் வாழும் தந்தோணி வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் இந்துமதவெறியைத் தூண்டும் நடவடிக்கைக்கு எதிராக கரூர் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது! ஆலய அமைப்பு நிதிக்கென ரசீது அடித்து ஆயிரக்கணக்கில் வசூல் வேறு செய்து சுருட்டுகிறது, இந்து மதவெறி கும்பல். குடியிருப்பில் இருக்கும் வி.டி.மணவழகன் தலைமையில் ஆர்.சம்மந்தம், ஆர்.கணேசன், எஸ்.முருகேசன் போன்ற அரசு அலுவலர்களே இந்த வசூலில் முன்னின்று, மதவெறியைத் தூண்டுகின்றனர்.

அடுத்து மாயனூர் தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலையிலும், பிள்ளையார் கோவில் கட்டுவதற்கு ஏற்பாடுகள் துரிதமாக நடக்கிறது. டி.கே.ரெங்கராஜ் தலைமையில் போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தொழிற்சங்கம் உட்பட, தி.மு.க. அ.தி.மு.க. தொழிற் சங்கங்கள் நிர்வாகத்தின் திடீர் பக்திக்கு காவடி தூக்குகின்றன; முழு உதவி புரிகின்றன. இத் தொழிற்சாலையில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு தமிழக அரசு வழங்கியுள்ள சம்பள உயர்வில், கோவில் நிதிக்கென, நிர்பந்தமாக 500 ரூபாய் பிடித்துக் கொள்கிறது, நிர்வாகம். தொழிலாளர்களிடமிருந்து ஒருநாள் சம்பளம் பிடிக்க முயற்சித்தது, நிர்வாகம். எதிர்ப்பு வரவே 'விருப்பம் உள்ளவர்கள் கொடுக்கலாம்' என்று பின்வாங்கியது. ஆனால், மறுபுறம் தொழிலாளர்களின் பல கோரிக்கைகளை கிடப்பில் போட்டு, மிரட்டி வருகிறது நிர்வாகம். 'ஆர்டர்' இல்லையென, ஆலையின் செயல்பிரிவின் உற்பத்தியை ஒரு மாதகாலமாக நிறுத்தியும், 'லே-ஆப்' விடப் போவதாக தொடர்ந்து மிரட்டியும் வருகிறது. புது ஒப்பந்தம் போடுவதை தள்ளிப்போட்டும், போனஸ் பிரச்சினையை இழுத்தடிக்கவும் முயற்சிக்கிறது. தொழிலாளர்கள் நிர்வாகத்தின் இந்த நரித்தனத்தை கண்டும் காணாமலும், 'நமக்கேன் வம்பு' என்று ஒதுங்கியும் அதன் தாக்குதலுக்கு மேலும் வழிவிடுகின்றனர். அந்த அளவு தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தைப் பற்றி பீதி ஏற்படுத்தியுள்ளன, துரோக தொழிற் சங்கங்கள்! நிர்வாகம் மதவெறி சக்திகளுடன் பகிரங்கமாக கூட்டுச் சேர்ந்துள்ளதை தொழிலாளர்கள் முழுவீச்சுடன் எதிர்க்காவிட்டால், அந்த அழிவுசக்திகள் நமது எதிர்கால வாழ்க்கையையே சின்னாபின்னப் படுத்திவிடும்!




— தகவல்: வாசகர்கள், மாயனூர்.

## கரித்துண்டு திருடிய தொழிலாளிக்கு சிறைத் தண்டனை! இஞ்சின் திருடிய அதிகாரிக்கு குளுகுளு வசதி!

'கரித்துண்டு திருடிய தொழிலாளிக்கு கடும் சிறைத் தண்டனை, இஞ்சின் திருடிய அதிகாரிக்கோ ஏ.சி.ரூம் வசதி' என்பது திருச்சி பொன்மலை பணிமனையில் எழுதப்படாத சட்டமாகி விட்டது. அண்மையில் பணிமனையின் வாகனங்களுக்கு சுமார் 4 வருடங்களாக ரோடுவரி கட்டாமல்; கட்டியதாக கணக்குக் காட்டி ரூ.96,000 கையாடல் செய்யப்பட்டுள்ள மோசடி, பணிமனையின் வாகனம் மன்னார்புரம் ரோட்டில் விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து அம்பலத்திற்கு வந்தது.

இது தொடர்பாக வாகனங்களுக்கு பொறுப்பாளராகவும், பணம் கட்டுவதை சரிபார்க்கும் பொறுப்பாளராகவும் இருக்கும் நாராயணன் என்பவரை நிர்வாகம் தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது. ஆனால் நாராயணனுக்கு மூளையாகவும் அரணாகவும் இருந்து கூட்டுக் கொள்ளையடித்த அண்ணாமலை, சாமிக்கண்ணு முதலான அதிகாரிகள் தண்டனையில் இருந்து தப்பிக்க முயற்சிக்கிறார்கள்; நிர்வாகமும் இதற்கு உடந்தையாக இருக்கிறது. குற்றவாளிகளை கண்டுபிடிக்கப் போகிறோம் என்று வழக்கம் போல் புலனாய்வுத் துறை விசாரணை நாடகமும் நடந்து கொண்டிருக்கிறது.

பதவி ஒய்வு பெறுவதற்குள் பல லட்சங்களை சுருட்ட படுவேகத்தில் செயல்படும் சாமிக்கண்ணு, நிர்வாகத்தில் ஊழலுக்கு 'பெயர் போனவர்'. கையூட்டு இல்லாமல் சிறு துரும்பைக் கூட நகர்த்தாதவர். விராலிமலை விபச்சார விடுதியின் பிரதம வாடிக்கையாளர். இவருக்கு 'மாமா வேலை' செய்பவர் தான் அண்ணாமலை. சில வருடங்களுக்கு முன்பு சக பெண் குமாஸ்தாவிற்கு காதல் கடிதம் எழுதி விசாரணைக்கு ஆளாகி கருப்புப் பட்டியலில் இடம் பெற்றவர். இன்றும் தனது ஆசைக்கு இணங்காத பெண்களுக்கு C.R.(ஊழியர் நடத்தைப் பற்றிய ரகசியக் குறிப்பு) எழுதும் பொழுது மோசமாக எழுதி விடுவதாக மிரட்டி வருபவர்; சிலருக்கு அவ்வாறு எழுதியும் இருக்கிறார். இது போன்ற அதிகாரிகளுக்கு 'கையாளாக' இருந்து செயல்பட்டவர்தான் நாராயணன். 96,000 ரூ. கையாடல் மட்டுமல்லாமல் வருடாவருடம் பியூன்களுக்கு தரும் சீருடை, ஸ்டீல் டேபிள், டிபன் கேரியர், தட்டுகள் முதலானவற்றைக் கடத்தி வெளியில் விற்றார். தனது செயலுக்கு பாதுகாப்பாக அதிகாரிகளின் இழிசெயலுக்கு வலது கரமாக இருந்தார்.

நாராயணனுடன் மோசடியில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்று கையை உதறிக் கொண்டார்கள். தங்கள் பெயரை வெளியிட வேண்டாம் என்று நாராயணனுக்கு தூது விடுகிறார்கள்; காப்பாற்றுவதாக வாக்குறுதி அளிக்கிறார்கள்

கடினமாகவும், நேர்மையாகவும் தொழிலாளர்களை உழைக்கச் சொல்லும் சோம்பேறிகளான அதிகாரிகள் சாத்தியப்பட்ட வழிகளிலெல்லாம் அரசு சொத்தை கொள்ளையடிக்கிறார்கள். தங்களின் அடிவருடிகள் கொள்ளையடிக்க துணை செய்கிறார்கள்.

பொன்மலைப் பணிமலையில் இயங்கி வரும் ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் (RWU) இந்த 96,00 ரூபாய் மோசடியில் நாராயணன் மட்டுமல்லாமல், சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் கூண்டோடு பிடித்து தண்டனை வழங்கவேண்டும் என நிர்வாகத்தை நிர்பந்தித்து பிரசுரம், பொதுக் கூட்டம் மூலம் பிரச்சாரம் செய்து வருகிறது. ரூ.96,000-க்கு அபராதம் என சேர்த்துக் கட்டப்படும் தொகை சுமார் 2 லட்சம் ஆகும். இத்தொகையை நிர்வாகம் ஈடு செய்வதன் மூலம் அதன் சுமை தொழிலாளர் தலைமீதே விழும். எனவே, இப்பிரச்சினையில் இருந்து தொழிலாளர்கள் ஒதுங்கிக் கொள்ளாமல் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படும் வரை போராட முன் வர வேண்டும் என்று RWU பிரச்சாரம் மேற் கொண்டு வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# கருணாநிதி நிர்வாகபுலியா?



''கருணாநிதி அரசு ஊழல் நிறைந்தது என்று சொல்வதைக் கூட ஒத்துக் கொள்வோம்! ஆனால், அரசு நிர்வாகத்தை நடத்துவதில் அவருக்கு நிகர் யாருமில்லை'' என்று கருணாநிதியின் மீதான தங்கள் மதிப்பை பலர் நியாயப்படுத்துகின்றனர். ஊழல் அரசு எப்படி திறமையானதாக இருக்க முடியும்? அப்படியானால் திருடனின் திறமையை போற்றலாமா?

விரைவான நிர்வாகம், திறமையான நிர்வாகம் - இதுதான் கருணாநிதியின் தனிச் சிறப்பு என்கின்றனர் சர்வகட்சி அதிகார தரகர்கள்! தி.மு.க.வின் அரசியல் எதிரிகள் கூட இதை மறுப்பதில்லை என்கின்றனர். காமராஜர் கூட தூய்மை, மனிதாபிமானம் என்று தான் நாடாண்டார். ராஜாஜி, பக்தவச்சலம் போல் தலை சிறந்த நிர்வாகி என்று அவரால் பெயரெடுக்க முடியவில்லை.

ஆனால் கருணாநிதி முதலமைச்சருக்குரிய அனைத்து தகுதிகளோடு அரசு நிர்வாகத் திறமையில் முன்னுதாரணம் படைக்கிறார் என்கிறார்கள். தன்னிடம் ஆட்சியதிகாரம் இல்லாதபோதும் பல இடர்பாடுகளுக்கு மத்தியில் கட்சியை பலம் குன்றாமல் வழிநடத்தி பாதுகாத்தார். அந்த தலைமை பண்புதான் அரசு நிர்வாகத்திலும் பரிமளிக்கிறது என்று பூரிக்கின்றனர், கட்சித் தலைவர்கள்.

மூச்சு விடாமல் அடுக்கும் இந்த புகழுரைக்கு ஏதாவது ஆதாரம் காட்டுகிறார்களா என்றால் வழக்கம் போல் பேனைப் பெருமாளாக்கி கும்பிடு கும்பிடு என்று கூப்பாடு போடுகிறார்கள். இலவச, சீர்திருத்தச் சட்டங்கள் (5கிலோ அரிசி, பெண்களுக்கு இட ஒதுக்கீடு) அதன் அரைகுறை குளறுபடியான அமுலாக்கம் போன்றவற்றையே இதற்கு உதாரணம் காட்டுகிறார்கள். அரசு மருத்துவமனைகள், ரேஷன் கடைகள், சத்துணவுக் கூடங்கள், அரசு அலுவலகங்களில் திடீர் சோதனைகள் போன்ற மந்திரிகளின் ஆரம்ப கால சூரத்தனங்களை பெருமை பொங்க விவரிக்கிறார்கள்.

விரைவான நிர்வாகம், திறமையான நிர்வாகம் - அதாவது அரசாங்கம் உங்கள் வாசல்படிக்கு வந்து சேவகம் செய்யும் என்பது போல சொன்னார்கள். உங்களுக்கு உழைக்க எங்களுக்கு உத்தரவிடுங்கள் என்று கோட்டைக்கு போனார்கள்! மக்களின் அடிப்படை உரிமைகள், பொருளாதார மேம்பாடு, பண்பாட்டு வளர்ச்சி, ஒட்டு மொத்தமாக சமூக முன்னேற்றம் இவற்றில் கருணாநிதி தலைமையிலான அரசு நிர்வாகம் என்ன ஆரோக்கியமான மாற்றத்தை உருவாக்கி இருக்கிறது என்பதுதான் கேள்வி?

நடந்து வரும் மதக் கலவரங்கள், பெருகிவரும் கிரிமினல் குற்றங்கள், வரலாறு காணாத சிறை 'உடைப்பு', மக்கள் மீது அதிகரித்து வரும் கொலை, கொள்ளை தாக்குதல்கள், போலீசு சிறை சித்திரவதைகள், படுகொலைகள், பொய் வழக்குகள், உரிமை மறுப்புகள், பொருளாதார ரீதியில் முன்னேற்றமின்மை, கட்டுப்படுத்த முடியாத விலைவாசி உயர்வு, கலப்படம், நுகர்வோர் ஏமாற்றப்படுதல், அரசு ரேஷன் கடைகளிலே தட்டுப்பாடு ஒழுங்கீனம், பொது வாழ்வை பொது ஒழுங்கை சீர் குலைக்கும் ரௌடிகள், பொறுக்கிகள், தொழில் முறை கிரிமினல்கள் — இவர்கள் சமூகத்தையே அச்சுறுத்துவது சவால் விடுவது, தண்டனை இல்லாமல் தப்பிப்பது;

மேலும் பண்பாட்டு ரீதியில் மக்களை சீரழிக்கும் மடமையில் ஆழ்த்தும் நிறுவனங்களை, நபர்களை, போதை பொருட்களை அனுமதிப்பது, அரசு நடத்துவது, அதில் மந்திரிகள் பங்கேற்று கௌரவிப்பது; அதிகார, அரசாங்க நபர்கள் விழாக்களில் விடலைகள் போல் காலத்தை வீணடிப்பது - இப்படி எண்ணற்ற குற்றங்களை கருணாநிதியின் விரைவான, திறமையான நிர்வாகம் எப்படி சகித்துக் கொள்கிறது? அனுமதித்து ஊட்டி வளர்க்கிறது? இதுதான் கருணாநிதி நிர்வாக தலைமையின் ரகசியம்!

உண்மை என்னவென்றால், சர்வக் கட்சி அதிகார தரகர்கள், கழகத் தொண்டர்கள் கதை கட்டுவது போல் கருணாநிதியோ அவரது மந்திரிகளோ, வேர்வை வழிய அரசு நிர்வாகத்தை தூக்கிச் செல்வதில்லை. இதற்காக நிர்வாகத்தை கவனிப்பதற்காக பெரும்படையாக நிரந்தரமான அதிகார வர்க்கம் இயங்குகிறது.

மொத்த அரசு நிர்வாகமும் சுமார் 60-க்கும் மேற்பட்ட துறைகளையும் பூதாகரமான உட்பிரிவுகளையும் கொண்டுள்ளது. உதாரணத்திற்கு விவசாயம் என்று எடுத்துக் கொண்டால், அதில் 13 உட்துறைகள் உள்ளன. ஒவ்வொரு உட்துறையில் 30 லிருந்து 55 க்கும் மேற்பட்ட உட்பிரிவு இலாக்காக்கள் உள்ளன. ஒவ்வொரு உட்பிரிவு இலாக்காவிலும் 14-க்கும் மேற்பட்ட உட்பிரிவு கிளை அலுவலகங்கள் உள்ளன.

இவர்களின் வேலைகளுக்கு அதிகாரபூர்வ முத்திரை குத்தும் வேலையைத் தான் கருணாநிதி முதல் அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் செய்கிறார்கள். இதில் ஏராளமாக முத்திரை குத்துபவர், குறைவாக முத்திரை குத்துபவர், முத்திரையே குத்தாமல் தூங்குபவர் என்று பல ரகங்கள் உண்டு!

விசயம் என்னவென்றால், அதிகார வர்க்கம் தன்னுடைய முடிவுகளுக்கும் வேலைகளுக்கும் ஏன், தன்னுடை அசைவுகளுக்குக் கூட சுயமாக பொறுப்பேற்காது! பிறரை சாட்டி விடும். எப்போதும் மற்றவரின் தோள் மீதே வாசம் செய்யும்! வாயும் வயிறும் தான் அதற்கு சொந்தம்! மூளையை பழைய 'பைல்'களிலிருந்தும் விதிகளிலிருந்தும் வாங்கிக் கொள்ளும்! முடிவுகளுக்கு மக்கள் பிரதிநிதிகளின் முத்திரைகளை பெற்றுக் கொள்ளும்!

இதை நன்றாக அறிந்தவர் கருணாநிதி! அதிகார வர்க்க கும்பலின் அசைவுக்கு ஏற்ப இசைவாக கரணம் போட தெரிந்தவர்! அதிகார வர்க்கம் கொடுக்கும் அறிக்கைகளை மந்திரம் போல் மேடைகளிலும், சட்டசபைகளிலும், பத்திரிகையாளர்களிடமும் விசுவாசமாக ஒப்பிப்பவர். மக்களுக்கு புரியக் கூடிய வகையில் சொற்களால் மையெழுதி அதிகார வர்க்க அறிக்கைகளை கவர்ச்சியாக நடமாட விடும் பிறவிக் கலைஞர்! சிறப்பான கட்டியங்காரர்! உதாரணத்திற்கு தன் கையாலாகாத்தனத்தை மறைப்பதற்கு கருணாநிதி பேசிய பொய்களைப் பார்த்தாலே இவை புரியும். குறிப்பாக கருணாநிதியின் நேரடி பொறுப்பின் கீழ் இருக்கும் போலீசு துறையின் நிர்வாகத் திறனை பார்ப்போம்!

**சட்டவிரோத கிரிமினலுக்கு சேவகம் செய்யும் போலீசு**



படிப்பகம்

www.padippakam.com

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் முக்கியமாக பேசப்பட்ட விசயங்களில் ஆட்டோ சங்கர் விவகாரம், சந்தன மரக்கடத்தல் வீரப்பன் சாகசம், பாக்கெட் சாராயம், மதக் கலவரங்கள், அ.தி.மு.க., தி.மு.க ஊழல்கள், தமிழகத்தில் ஈழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் திரிந்து, ஈ.பி.ஆர். எல்.எப். குழுவின் தலைமையை புலிகள் கொன்றொழித்தது.

இச்சம்பவங்களில் கருணாநிதி முன்னுக்குப் பின் சொன்ன முரணான தகவல்கள், மழுப்பல்கள், பொய்கள், செயலற்ற கையாலாகாத் தனங்கள் ஆகியன அவருடைய நிர்வாகத் திறனின் யோக்கியதையைக் காட்டிவிட்டன.

ஆட்டோ சங்கர் விவகாரத்தை எடுத்துக் கொண்டால், போலீசு கும்பலின் அதிகார பூர்வமற்ற அதிகாரியாக இருந்திருக்கிறான். போலீசு கும்பலால் விருப்பமின்றி கைது செய்யப்பட்டான். காங்கிரசு கவர்னர் ஆட்சியும் அவனுக்கு தண்டனை வழங்கவில்லை. கருணாநிதி ஆட்சியும் அவனுக்கு தண்டனை வழங்கவில்லை! அவனுடைய காதலுக்கு விளக்கேற்றி தேனிலவுக்கு அனுப்பி வைக்குமளவு போலீசு அதிகாரிகள் அவனுக்கு 'கடன்' பட்டிருக்கிறார்கள்.

ஆயிரம் ஆட்டோ சங்கருக்கு இணையான சாராய உடையார், எத்திராஜ், நல்லையா, மல்லையா சாராய பேர்வழிகளும் கூட கருணாநிதி அரசு நிர்வாகத்தால் எந்த பாதிப்புக்கும் உள்ளாகவில்லை. மீண்டும் அவர்களை அதிகார பூர்வமான சாராய அதிபர்களாக்கி இருக்கிறது. அதற்காக குறுக்கு வழியில் விரைவாகவும் திறமையாகவும் அரசாங்க நிர்வாக சட்டங்களை முறுக்கி வளைத்துள்ளது. அதிகார வர்க்கம் அரசு சாராய கடைகளை அற்ப விலைக்கு ஏலம் எடுக்க அவர்கள் 'சிண்டிகேட்' அமைக்க உதவியுள்ளது.

அதாவது முன்கூட்டியே மேற்கூறியவர்கள் தங்கள் ஏரியாக்களை பிரித்துக் கொண்டனர். ஒருவர் இடத்தில் இன்னொருவர் தலையிடாமல் அரசு நிர்ணயித்த பெயரளவு தொகைக்கு போகாமல் பார்த்துக் கொண்டனர். அதே முறையில் தங்கள் பகுதிகளில் பல கடைகளை ஏலம் எடுக்காமல் நிறுத்தி விட்டனர்.

சென்னையில் 25 கோடி ரூபாய்க்கு எதிர்பார்த்த சாராய கடை ஏலம் வெறும் 9 கோடியாக சுருங்கிப் போனது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 625 கடைகளில் 294 கடைகள் மட்டுமே ஏலம் எடுக்கப்பட்டு 12 கோடி ரூபாய்க்கு 7.5 கோடி ரூபாய்தான் வசூல்! கருணாநிதி தலைமையிலான அரசாங்க நிர்வாகத்தின் தனிச்சிறப்பு - கிரிமினல்களை உபசரிப்பது. அரசு வருவாய்க்கு குழிபறிப்பது மட்டுமல்ல; அதன் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளிலும் தும்பை விட்டு வாலைப் பிடிப்பது, பிறகு ஒப்பாரி வைப்பது என்று திட்டமிட்டு செய்கிறது.

நாகூர், ஆம்பூர், திண்டுக்கல், திருவல்லிக்கேணி என்று ஆர்.எஸ்.எஸ். கலவரம் நடத்திய எல்லா இடங்களிலும், சிறுபான்மை முஸ்லீம் மக்கள் அபாயத்தை எச்சரித்து முன்கூட்டியே அரசுக்கு தகவல் சொல்லியுள்ளனர். அவை எல்லாவற்றையும் அசட்டையாக குப்பை கூடையில் போட்டுவிட்டது கருணாநிதி தலைமையிலான விரைவான திறமையான அரசு நிர்வாகம்.

ஒருபுறம் நேரடியாக அதிகார வர்க்கமும், போலீசும் கலவரத்தில் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு துணை போகிறது. அதை அம்பலப்படுத்தி தண்டிக்க திராணியற்ற கருணாநிதி நிர்வாகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம், நட்ட ஈடு என்று வாய்க்கரிசி போடுகிறது.

சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா கும்பலை கொன்றொழித்தவர்களை 3 மணி நேரத்தில் பிடித்து விடுவோம்; 30 மணிநேரத்தில் குற்றவாளிகளை கூண்டில் அடைப்போம் என்று அனல் பறக்க அறிக்கை வெளியிட்டது. போலீசு. பிறகு புலிகளுக்கும் போலீசுக்கும் இருந்த தொடர்பு வெளிவந்தவுடன் கருணாநிதி விசயத்தையே திசை திருப்பினார். இனி ஈழப் போராளிகள் எவருக்குமே தமிழகம் தார்மீக ஆதரவு தராது என்று அப்பாவி போல் புலம்பினார். ஈழ ஆதரவை இன்னொரு முறை கை கழுவினார்.

இன்னும் இவ்வாறு ஏராளமான உதாரணங்களைச் சொல்லலாம்.

''ஆட்சிக்கு போனவுடன் அ.தி.மு.க. ஊழல்களை வெளி கொணர்வேன்! கோட்டைக்கு போனவுடன் கொள்ளையடித்தவர்களின் முகமூடியை கிழிப்பேன்!'' என்ற சவடால்கள் என்ன ஆனது? மலையளவு கூறிய அ.தி.மு.க ஊழலில் ஒன்றைக் கூட அவர் வெளியே கொண்டு வரவில்லையே ஏன்? ஒன்று அ.தி.மு.க. உத்தம சீலர்களின் பாசறையாக இருக்க வேண்டும். அல்லது கருணாநிதி ஒன்றுக்கும் உதவாத வெத்துவேட்டாக இருக்க வேண்டும்! இதில் எது உண்மை? கடைசியில் இவரே எம்.ஜி.ஆர் பாணியில் தனது ஆட்சியும் என் மனைவி உட்பட என் உறவினர்கள் சிபாரிசை அதிகாரிகள் யாரும் ஏற்க வேண்டாம் என்று தினசரிகளில் விளம்பரம் கொடுக்குமளவு நிர்வாக சீர்கேடு நாறியது தானே மிச்சம்!




○ ○ ○

இவையெல்லாம் திடீர் விபத்து போல் நடந்து விட்ட குற்றங்கள் அல்ல.. இந்த சம்பவங்கள் அனைத்திலும் சம்மந்தப்பட்ட குற்றவாளிகளுடன் போலீசுக்கும். தொடர்பு உண்டு. போலீசு, குற்றங்கள் நடந்த பிறகு தான் தடியும், துப்பாக்கியும் தூக்கிக் கொண்டு வரும். குற்றவாளியை கண்டுபிடிக்கும் என்பது போல் கதை சொல்கிறார்கள். 'குற்றவாளிகள் தப்பி ஓட்டம்! போலீசு தீவிர வலைவீச்சு' என்று திகில் கதை சொல்கிறார்கள்.

ஆனால், உண்மையில் குற்றங்கள் நடக்காமல் தடுப்பது தான் போலீசாரின் வேலை. அந்த குற்றம் கொள்ளை, பிக்-பாக்கெட், வீட்டில் திருட்டு, கொலை ஆகியவையாக கூட இருக்கலாம். ஒரு அரசாங்கத்தை கவிழ்த்து விட்டு இன்னொரு அரசாங்கத்தை நிறுவ முயற்சி செய்யும் சதி திட்டமாகவும் இருக்கலாம்.

இந்த முன்னெச்சரிக்கை தகவல்களை எல்லாம் சேகரிப்பதற்கு, போலீசு துறையிலேயே 'இன்டெலிஜென்ஸ் கேதரிங் ஏஜென்ஸி' என்ற அமைப்பு இயங்குகிறது. இந்த மாதிரி நிலைமை போய்க் கொண்டிருக்கிறது: இந்த நடவடிக்கையை அரசாங்கம் உடனே எடுத்தாக வேண்டும் என்று அரசுக்கு ஆலோசனை சொலலக்கூடிய அமைப்பு இது. ஐ.பி. (I.B), சி.பி.ஐ (C.B.I) என்ற இந்த இரண்டு உளவு பிரிவு தான் போலீசின் உயிர்நாடி என்றழைக்கப்படுகிறது.

அரசுக்கு, அதுவும் முக்கியமாக முதல் மந்திரி (I.B) பிரதமமந்திரி (C.B.I) ஆகியோருக்குத் தக்க சமயத்தில் உளவுத் தகவல்களைத் தந்து, பரிந்துரைகளையும் செய்ய வேண்டும். குறைகளையும் சுட்டிக் காட்டி, அவைகளை நிவர்த்திக்க வழிமுறைகளையும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

உதாரணத்திற்கு மாநில அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்த வேலை நிறுத்தம் எவ்வளவு நாள் நீடிக்கும், அவர்களது உண்மையான கோரிக்கைகள் என்ன, இந்த வேலை நிறுத்தத்திற்குப் பின்னணியில் யார் யார், எந்த அரசியல்வாதி எந்த வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், இந்த வேலை நிறுத்தத்தை தடுக்க முடியுமா? யாரைக் கைது செய்தால் இவர்கள் பயந்து ஒதுங்குவார்கள் என்றெல்லாம் தகவல் தர வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

இன்னும் போலீசுக்கு உள்ள எல்லையற்ற அதிகாரங்களை, முன்னாள் டி.ஐ.ஜி (இன்டெலிஜென்ஸ்) சீனிவாசன் என்பவரே கூறுகிறார். ''டி.ஐ.ஜி (இன்டெலிஜென்ஸ்) அலுவலகத்தினர் கட்சி ஆட்களிடமிருந்தோ, அல்லது தகவல் தருபவர்களிடம் இருந்தோ தகவல்கள் சேகரிக்கிறார்கள். இதைத் தவிர, தபால்களைப் பிரித்துப் பார்ப்பதும் உண்டு. முதலில் மாநில அரசிடம் இந்தக் கட்சிகளின், இந்த நபர்களின் தபால்களைப் பிரித்துப் பார்க்க அனுமதி பெறுகிறோம்.

இவ்வளவு அதிகாரமும் ஆள்பலமும் வைத்துக் கொண்டுதான் கிரிமினல்களை பிடிக்க முடியவில்லை என்று சுற்றி வருகிறார்கள் போலீசுகாரர்கள். போராடுபவர்களையும் அப்பாவி பொதுமக்களையும் தண்டிப்பதற்கு தான் இந்த பலம் முழுவதையும் நூறு மடங்கு பயன்படுத்துகிறார்கள்.

குற்றங்களுக்கு காரணமான போலீசை பாதுகாக்கவும், கையாலாகாத்தனத்தை மூடி மறைக்கவும் அதனுடைய அதிகார திமிர்த்தனங்களுக்கு சப்பை கட்டு கட்டவும் தான் கருணாநிதி தன் திறமையை பயன்படுத்துகிறார். இவ்வளவு தான் ஓட்டு பொறுக்கிகளுக்கு — கருணாநிதி உட்பட - உரிமையுண்டு.

மற்றபடி திறமையான, விரைவான நிர்வாகம் என்பதெல்லாம் அதனுடைய கிரிமினல் குற்றங்கள், ஊழல்களில் தானும் முடிந்த அளவு திறமையாக விரைவாக குளிர்காய்வதுதான்! கடமையை ஆற்றாத போலீசு அதிகாரிகளை இடமாற்றம், பதவி குறைப்பு செய்து செம்மைபடுத்துகிறார் என்பது கூட தன்னுடைய கிரிமினல் குற்றங்களை மறைத்துக் கொள்வதற்குதான்!

கருணாநிதியின் விரைவான, திறமையான நிர்வாகத்திற்கு சான்று தேடினால், அவர் மேற்கொள்ளும் உல்லாச, ஓய்வு, கேளிக்கை நிகழ்ச்சிகளில் காண கிடைக்கும்.

அந்த கால மன்னர்கள் அந்தப்புரங்களில் ராஜ தந்திரங்களையும், போர் வியூகங்களையும் வகுத்தது போல் இவர் அரசு விழாக்கள், உடன் பிறப்புகளின் கேளிக்கை நிகழ்ச்சிகள் மூலமாகத் தான் விரைவான அரசாங்கம் நடப்பதை பறைசாற்றுகிறார்.

சென்னை வள்ளுவர் கோட்டம், மெரீனா சீரணி அரங்கம், வாலாஜா ரோடு கலைவாணர் அரங்கம் - இவைதான் கருணாநிதியின் அதிகார பூர்வமான ராஜ தர்பார் மண்டபங்கள்! கட்சி தொண்டர்களுக்கு காட்சி தருவது, சினிமா நடிகர்களுடன் கொஞ்சுவது, கவர்னர், அதிகாரிகளுக்கு பிரியாவிடை கொடுப்பது, பிறந்தநாள் கொண்டாடுவது, போலீசுக்கு பதக்கங்கள் அளிப்பது, பல்வேறு அரசு ஆதரவு தொழிற் சங்கங்களால் குளிப்பாட்டப்படுவது, சங்க கால புலவர்கள், சரித்திரம் போற்றும் மன்னர்கள், தமிழ் அறிஞர்கள், கலைஞர்கள், புகழ்பரப்புவது, கழக சாதனைகளை விளக்குவது, முப்பெரும் விழா, ஐம்பெரும் விழா என்று சுற்றிச் சுற்றி கருணாநிதி அந்த நவீன தர்பார் மண்டபங்களை விட்டு வெளியே வரவதில்லை.

அரிதாக வெளியே வந்தாலும் திருமணவிழா, பெயர் சூட்டுவிழா, அடிக்கல் நாட்டுவிழா, திறப்புவிழா என்று திரிவது; இன்னும் பிரயாணங்களின் போது 'ஏசி' கோச்சுகளில் குங்குமம், முத்தாரம், சுமங்கலி, முரசொலி ஆகிய குடும்ப பத்திரிக்கைகளுக்கு, 'பூமாலை' என்ற தனது வீடியோ பத்திரிக்கைக்கு 'ஜனரஞ்சகமான' கதைகள் எழுதி தருவது, பேட்டிகள் தருவது - என்று முழுக்க மேட்டு குடியினரின் விடலைகளுக்கு அறிவுக்கு விருந்து படைக்க சுகமாக இறங்கி விடுகிறார். இவ்வளவுக்கு பிறகும் அவருக்கு நேரமிருந்தால் சட்டசபையை கூட்டுகிறார்.

கடந்த ஒன்றே முக்கால் ஆண்டுகளில் சட்டசபை கூடியது ஒருசில மாதங்கள் மட்டுமே! அதிலும் எதிர்கட்சிகளின் கூத்துக்கள், ஆளுங்கட்சி எம்.எல்.ஏக்களின் அரட்டைகள் போக மீதி நேரங்களில் டஜன் கணக்கில் 'முற்போக்கு' சட்டங்களை இயற்றி, கைதட்டிவிட்டு கலைந்து விடுகிறார்கள்.

இன்னும் சட்டசபை கேள்வி நேரங்கள் என்ற பெயரில், சூடான, சுவையான, ஆர்வமான கேள்விகளை தேர்ந்தெடுத்து சம்மந்தப்பட்ட துறையின் சட்டசபைக்கான செய்திகள் சேகரிப்பு பிரிவுக்கு அனுப்பி விடுகின்றனர். அங்கிருந்து வந்தவுடன் சம்மந்தப்பட்ட மந்திரிகள் அந்த பதிலை சுவையேற்றி தருகின்றனர். கேள்வி கேட்டவர் தாங்கிக் கொண்டே அதை காதில் வாங்கிக் கொள்வார்.

சட்டசபையில் எந்த கேள்வியை அனுமதிக்கலாம், எந்த கேள்வியை அனுமதிக்க கூடாது, எந்த வார்த்தை சபை குறிப்பில் இருக்கலாம், எந்த வார்த்தை சபை குறிப்பில் இருக்க கூடாது என்று வரையறை செய்வது சட்டசபை செயலர்தான்! அவர் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி. சட்டசபை விவகாரங்களை வழிநடத்திச் செல்வதற்கும், கண்காணிப்பதற்கும் சட்டசபை செயலர் தலைமையில் தனித்துறையே - பெரும் அதிகார வர்க்க பட்டாளமே - இயங்குகிறது. அவர்களுடைய கட்டளையை, ஆலோசனையை சபைக்கு தெரிவிப்பவர்தான் சபாநாயகர்!

மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்தான் நாட்டை ஆள்கிறார்கள் என்று எப்படி பிரமையில் ஆழ்த்துகிறார்களோ அதே போல்தான், சட்டசபைக்கு சபாநாயகர்தான் தலைமை வகிக்கிறார் என்று அவர் பின்னால் ஒளிந்துக் கொண்டு சட்டசபையை வழிநடத்தி செல்கிறது, அதிகாரவர்க்கம்! ஆக, கருணாநிதியின் விரைவான நிர்வாகம், திறமையான நிர்வாகம் என்பதெல்லாம், அதிகாரவர்க்கமும் ஆளும் கட்சி பிரதிநிதிகளும் ஒருவருக்கொருவர் சொறிந்துக் கொள்வது தானே அன்றி உண்மையல்ல!

குறிப்பாக கருணாநிதியின் நிர்வாக திறனை அதிகார வர்க்கமும், சர்வகட்சி அதிகார தரகர்களும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடுவதற்கு காரணம் ரத்தம், சதை, மூளை என்று முழுக்க முழுக்க கருணாநிதியே தன்னை ஒரு அதிகார வர்க்க பிண்டம் போல் விரும்பி உருமாற்றி கொண்டிருப்பதுதான்!

சவடால், சுயதம்பட்டம், பழியை பிறர் மீது தள்ளிவிடும், சாதனைக்கு மட்டும் சொந்தம் கொண்டாடும் வாயையும் வயிற்றையும் குறுக்கு வழியில் நிரப்பிக் கொள்ளும், மூளையையும் இதயத்தையும் உண்மைக்காக அல்ல, நரித்தனத்திற்காக செலவழிக்கும்! இதுதான் அதிகார வர்க்கத்தின் லட்சணங்கள்! துண்டு போட்ட கருணாநிதிக்கும் 'டை' கட்டிய அதிகார வர்க்கத்திற்கும் வித்தியாசம் தோற்றத்தில்தான்!


● குணசேகரன்

**நடிகை ராதிகாவின் 2-வது திருமணம்; புரோகிதராக கருணாநிதி!**



படிப்பகம்

www.padippakam.com




## தொலைக்காட்சிக்கு தன்னாட்சி உரிமை:

# கத்தரிக்கோலுக்கு சுதந்திரம்! கருத்துரிமைக்கு கல்லறை!

தொலைக்காட்சிக்கு தன்னாட்சி உரிமையளிக்கும் 'ஜனநாயக'க் கடமையை தேசிய முன்னணி அரசு நிறைவேற்றி விட்டது. இனி என்ன? தணிக்கைகள், தடைகள், இருட்டடிப்புகள், அரசியல் குறுக்கீடுகள் ஏதுமின்றி பிரிட்டிஷ் ஒளிபரப்புத் துறையைப் போல இந்தியத் தொலைக்காட்சியும் இயங்கப் போகிறது என்று நம்பச் சொன்னார்கள். இது முன்பிருந்ததை விட முற்போக்கான - முன்னேற்றகரமான நடவடிக்கை என்று ஆளும் வர்க்க அறிவு ஜீவிகள் ஏற்றிப் புகழ்ந்தார்கள். அத்தனையும் ஒரு வாரத்திற்குள்ளேயே புஸ்வாணமாகியது. கூண்டுக்குள் கிளியை சிறைப்படுத்தி வைப்பதைவிட, அதன் சிறகுகளை வெட்டிவிட்டு விடுதலை செய்து விட்டதாகக் காட்டுவது எவ்வளவு அயோக்கியத் தனமானதோ அதுதான் தொலைக்காட்சிக்கு தன்னாட்சி உரிமை வழங்குவதிலும் நடந்துள்ளது.

ராஜீவ் காலத்தில் "ஜனவாணி" என்ற பெயரில் மந்திரிகள், எம்.பி.க்களை பத்திரிக்கையாளர்கள் நேருக்கு நேர் சந்தித்து மக்கள் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கும் தொடர் முன்பு ஒளிபரப்பப்பட்டது. அதையே இன்னும் தரத்தில் உயர்ந்ததாக 'குலாமன்ச்" (திறந்த அரங்கம்) என்ற பெயரில் இந்துஸ்தான் டைம்ஸ் வீடியோ நிறுவனத்தின் உதவியுடன், பிரிட்டிஷ் ஒளிபரப்புத் துறையில் பயிற்சி பெற்ற இயக்குனர் கரண் தாப்பரைக் கொண்டு ஒரு தொடரைத் தயாரித்து ஒளிபரப்புவதென புதிய ஆட்சியாளர்கள் முடிவு செய்தனர். இதன்படி கடந்த ஆகஸ்ட் இறுதியில் நிதி மந்திரி மது தந்தவதேயிடம் நேருக்கு நேர் உரையாடல் நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது.

அடுத்த தொடரில் ரயில்வே மந்திரி ஜார்ஜ் பெர்ணாண்டசிடம் கேள்விகள் - விளக்கங்கள் கொண்ட தொடர் ஒளிபரப்பானது. கேவல் வர்மா என்ற பிரபல பத்திரிக்கையாளர் கேள்விகளைத் தொகுத்து பெர்ணாண்டசிடம் கேட்டார். அதில் ரயில்வே துறை சம்பந்தமான கேள்விகள் மட்டுமின்றி, காஷ்மீர் விவகாரம், கவர்னர் ஜக்மோகன் நீக்கப்பட்டது பற்றி, பெப்சி கோலா விவகாரம், பன்னாட்டுக் கம்பெனிகள் மற்றும் புதிய தொழிற்கொள்கை பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டன.

ஆனால், இது முழுமையாக ஒளிபரப்பப் படவில்லை. ரயில்வே துறை தவிர இதர கேள்விகளைக் கொண்ட பகுதி வெட்டப்பட்டு, 45 நிமிடங்கள் கொண்ட இத்தொடர் 30 நிமிடங்களுக்கு சுருக்கப்பட்டு ஒளிபரப்பானது. தன்னாட்சி உரிமை வழங்குவதாக கூறிவிட்டு நிகழ்ச்சியை தணிக்கை செய்து ஒளிபரப்பிய இந்த கருத்துரிமை பறிப்புக்கு எதிராக பாரதீய ஜனதா உட்பட எதிர்க் கட்சியினரும், பத்திரிக்கையாளர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஜார்ஜ் பெர்ணாண்டசே நிகழ்ச்சியை முழுமையாக ஒளிபரப்புமாறு கோரினார். கேள்விகளைத் தொகுத்தளித்த கேவல் வர்மா, தொலைக்காட்சி நிலையம் தனக்கு ஊதியமாக அளித்த ரூ.750க்கான காசோலையை திருப்பி அனுப்பி தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

ஆனாலும் செய்தி ஒளிபரப்புத் துறை மந்திரி உபேந்திரா அசைந்து கொடுக்கவில்லை. ரயில்வே துறை தவிர, இதர துறை சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு பெர்ணாண்டஸ் பொதுவில் பதிலளித்ததை ஒளிபரப்பினால் நாளை அந்தந்தத் துறை சம்பந்தப்பட்ட மந்திரிகள் எதிர்ப்பு தெரிவிக்கக் கூடும் என்று தனது தணிக்கை முறைக்கு நியாயம் கற்பித்தார். அப்படியானால் மத்திய மந்திரிகளும், எம்.பி.க்களும் தமது துறை சாராத பொது விஷயங்களை பொதுக் கூட்டங்களில் பேசுவதை தடுப்பீர்களா என்று பத்திரிக்கையாளர்கள் கிடுக்கிப்பிடி போட்டதும் வாயடைத்துப் போன உபேந்திரா, "குலாமன்ச் போன்ற வெளிப்படையான நிகழ்ச்சிகளை ஏற்குமளவுக்கு பார்வையாளர்கள் இன்னும் பக்குவம் பெறவில்லை" என்று தணிக்கையை நியாயப் படுத்த முயன்றார். பின்னர் "நான் தணிக்கை செய்யவில்லை. நிகழ்ச்சியை திருத்தி ஒழுங்குபடுத்துவதைத் தான் செய்துள்ளேன்" என்று கூசாமல் புளுகினார்.

விவகாரம் இத்துடன் நின்றுவிடவில்லை. அடுத்தடுத்த சம்பவங்களில் தன்னாட்சி உரிமை என்பது எவ்வளவு பெரிய மோசடி என்று வெட்ட வெளிச்சமாகியது.

☆ வட மாநிலங்களில் இட ஒதுக்கீட்டு முடிவை எதிர்த்து மாணவர்கள் நடத்திவரும் கிளர்ச்சிகளைப் பற்றிய செய்திகள் திட்டமிட்டே இருட்டடிப்பு செய்யப்பட்டன. ஆகஸ்ட் 27ல் டெல்லியில் நடந்த இட ஒதுக்கீடு எதிர்ப்பு கடையடைப்பு போராட்டம் பெரிய அளவில் நடந்ததாக அரசுத்துறை செய்தி நிறுவனங்களே கூறிய போதிலும், தொலைக்காட்சியில் இப்போராட்டத்திற்கு ஆதரவும் இருந்தது, எதிர்ப்பும் இருந்தது என்று ஒளிபரப்பப்பட்டது. அன்றைய 'பந்த்' தில் 400 பேருந்துகள் நாசமாக்கப்பட்டதைப் பற்றிய செய்தி இருட்டடிப்பு செய்யப்பட்டு, இட ஒதுக்கீட்டை மக்கள் ஆதரித்து பேட்டி தரும் நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது.

☆ மத்திய மந்திரி தினேஸ் கோஸ்வாமி பதவி விலகுவதாக அறிவித்தது பற்றிய செய்திகள் மூடி மறைக்கப்பட்டன. அதே நாளில் ஆப்கான் அதிபர் நஜிபுல்லா வருகை பற்றிய செய்திகளுக்கு அதீத முக்கியத்துவம் தரப்பட்டது. இதே போல கிரிமினல் அரசியல் நாயகன் சௌதாலாவுடனான பேட்டி கவனமாக தணிக்கை செய்யப்பட்டு அவரை கட்டுப்பாடுமிக்க ஜனதாதள ஊழியராக வானொளி சித்தரித்தது.

☆ போபால் விஷவாயுப் படுகொலையைச் சித்தரிக்கும் "படுகொலைகளுக்கு அப்பால்" என்ற தங்கத்தாமரை பரிசு பெற்ற செய்திப்படம் இன்றுவரை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது. அதே சமயம் அறுவை ஜோக்கு நாடகங்களும், மேட்டுக்குடி குடும்பக் கதைகளும், டிஸ்கோ ஆட்டங்களும், மூட நம்பிக்கையை வளர்க்கும் புராணத் தொடர்களும், தேசிய நிகழ்ச்சிகளாக தாராளமாக ஒளிபரப்பாகின்றன.

☆ எல்லாவற்றுக்கும் மேலாக, சில தனியார் நிறுவனங்கள் தயாரித்து வெளியிடும் செய்தித் தொகுப்பு வீடியோக்களும் தணிக்கை செய்யப்படுகின்றன. செய்தித்தாளை தணிக்கை செய்யாதபோது, அச்செய்திகளைத் தொகுத்து படமாக்கித் தரும் வீடியோக்களை மட்டும் தணிக்கை செய்வது எந்த வகையிலும் நியாயமானதல்ல என்று வீடியோ தயாரிப்பாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். "செய்தித்தாளைவிட சினிமா, வீடியோ, தொலைக்காட்சி போன்ற வெகுஜன தொடர்பு சாதனங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. படிப்பறிவற்ற மக்களிடம் கூட அதனால் பெரும் விளைவுகளை ஏற்படுத்த முடியும். எனவே தணிக்கை மிக அவசியமானது" என்கிறார் கத்தரிக்கோல் மந்திரி உபேந்திரா.

கடைசியில் தொலைக்காட்சிக்கு தன்னாட்சி உரிமை என்பது கேழ்வரகில் நெய் வடிந்த கதையாகிவிட்டது. நேற்று பிரதமராக பாசிச ராஜீவும் அவரின் கோயபெல்சாக கே.கே.திவாரியும் இருந்தனர். அதற்குப் பதில் இன்று வி.பி.சிங்கும் உபேந்திராவும் வந்துள்ளனர் என்பதைத் தவிர வேறென்ன மாற்றம் நடந்திருக்கிறது?

◆ குமார்



படிப்பகம்

www.padippakam.com



வி.பி.சிங்கிற்கு பாடை! மேல் சாதியினரின் ''மரி''யாதை!



மாணவர் கோஸ்சுவாமி; கலவ

# இடஒதுக்கீடு எ
# சூத்திரதாரி



பதவிக்காக எதையும் செய்யும் பார்ப்பன கும்பல் பாட்டாளியின் தொழிலையும் இழிவுபடுத்துகிறது.



டில்லி கல்லூரி மாணவர்கள்; இ



படிப்பகம்

www.padippakam.com



தீ வைக்கப்பட்டவர்.

ு கலவரம்:

் யார்?



விடுவார்களாம்.

இந்த படங்கள் எல்லாம் இட ஒதுக்கீட்டுக்கு எதிரான நவீன குருக்ஷேத்திர போருக்கான காட்சிகள்! போர்! போர்! என்று கூரை மீது ஏறி கூவிய பிறகும் இந்த போர்ப்படையை சீந்துவார் யாருமில்லை! வேறு வழியில்லாமல் காந்தீய வழியில் சுய விழுப்புண்களை உருவாக்கிக் கொண்டு பரிதாபம் தேடும் மலிவான வழியில் இறங்கி விட்டார்கள்!

போராட்டம், எதிர்ப்பு என்றாலே மலத்தை பார்ப்பது போல் பழக்கப் படுத்தப்பட்ட தங்களுடைய அறிவாளி குழந்தைகளை 'சூத்திரர்'களுக்கு எதிராக போரிடும் படி தள்ளுகிறார்கள்!

போக்குவரத்தை நிறுத்துவது, பொது மக்களுக்கு தொல்லை கொடுப்பது, டில்லி தலைநகரில் இப்போது இவர்களது அன்றாட வழமையாகிவிட்டது. பொது இடங்களில் கும்பல் கும்பலாக கல்லெறிவது, கலவரத்தில் இறங்குவது, பொது வாழ்வை, அரசு நிர்வாகத்தை நிலை குலைய வைப்பது போன்றவற்றை தர்மயுத்தம் என்கிறார்கள்.

இந்தக் கலவரங்களை டில்லியில் தொடர்ச்சியாக நடத்தி வி.பி.சிங் அரசை பணிய வைப்பதற்கு காங்கிரசு கிரிமினல்கள் திட்டமிட்டுக் கொடுக்கிறார்கள். இதில் அதிர்ச்சி தரும் விவரம் என்னவென்றால், இட ஒதுக்கீட்டை எதிர்த்து தம் உடலில் தீயிட்டு தற்கொலை செய்து கொண்டவர்கள் சுயமாக அப்படி செய்து கொள்ளவில்லை என்று செய்திகள் வருகின்றன. இட ஒதுக்கீட்டை எதிர்ப்பதில் தலைமையேற்றுள்ள இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையே இதை உறுதி செய்துள்ளது.

செப்டம்பர் 19ந்தேதி டில்லியில் நடந்த இட ஒதுக்கீடு எதிர்ப்பு ஊர்வலத்தில் ராஜீவ் கோஸ்சுவாமி என்ற 20 வயது கல்லூரி மாணவன் தீயிட்டு தற்கொலை முயற்சி! என்று பரபரப்பாக செய்தி வெளியிடப்பட்டது. ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர் தனது மரண வாக்கு மூலத்தில் ஊர்வல கும்பல் கட்டாயப்படுத்தி தம்மீது மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்து விட்டதாக கூறினார். பழைய கல்லூரி மாணவரான அவர் ஊர்வலத்தின் போது அப்பாதை வழியே சென்றிருக்கிறார்!

இதே போல், அரியானா மாநிலம் குருக்ஷேத்திரத்தில் ஒரு பள்ளி மாணவன் விஷம் குடித்து இறந்தான். அவனுடைய 'பாக்கெட்டில்' இட ஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து தான் தற்கொலை செய்து கொண்டதாக எழுதி வைத்திருந்தான் என்று அவசர அவசரமாக ஆங்கில பத்திரிக்கைகள் செய்தி பரப்பின! புலன் விசாரணையில் கடிதத்தில் இருந்த கையெழுத்து அவனுடைய கையெழுத்து இல்லை என்று நிரூபணமானது.

1984 ஆம் ஆண்டு டில்லி சீக்கியர்கள் படுகொலைகளுக்கு தலைமையேற்றவனும், பின்னாளில் சீக்கிய தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட அர்ஜுன்தாஸின் தம்பி அசோக் ஆஜா என்பவன்தான் தற்போது டில்லி கலவரங்களுக்கு காங்கிரசு சார்பில தலைமையேற்று பல கலவர பகுதிகளில் ஜீப்புகளில் சுற்றி திரிந்து உசுப்பி விடுகிறான்.

ராஜீவ் மந்திரி சபையில் செய்தி மற்றும் தகவல் ஒலிபரப்பு மந்திரியாக இருந்த கே.கே.திவாரி, காங்கிரசு ராஜ்ய சபா உறுப்பினர் எஸ்.எஸ்.அலுவாலியா ஆகியோர் கலவரக்காரர்களின் பேரணிகளில் கலந்து கொண்டும் ஊர்வலங்களை தொடங்கி வைத்தும் நேரடியாக பங்கேற்கின்றனர்.

உ.பி. மாநிலத்தின் முன்னாள் காங்கிரசு மந்திரியான அருண்குமார் சிங் மற்றும் '77 ஆம் ஆண்டு அதிகாரம் இழந்த பாசிச இந்திரா, ஜனதா அரசால் பழிவாங்கப் படுவதாக கூறி இந்திய போக்குவரத்து விமானத்தை கடத்திய போலா பாண்டே ஆகியோர் உ.பி.மாநிலத்தில் கலவரக் காரர்களுக்கு தலைமை தாங்குகின்றனர்.

ஜனதா கட்சியில் இருக்கும் போட்டிப் பிரிவு தலைவரான சந்திரசேகர் கும்பலும் கலவரங்களை தூண்டி விடுகிறது. ஜெயந்மல் கோத்ரா என்ற பெரும் தொழில் அதிபர் டில்லி அசோகா ஐந்து நட்சத்திர ஓட்டலில் சந்திரசேகர் சார்பாக கலவர கும்பலுக்கு வழி காட்டுகிறார். எல்லா இடங்களிலும் பாரதீய ஜனதா கட்சி ஒளிவு மறைவு இல்லாமல் தன் கொடியின் கீழ் நேரடியாக கலவரங்களை நடத்துகிறது.

இக் கலவரங்களில் பல பத்துக்கணக்கான போலீசாரின் மண்டையை பிளந்தது கலவரக் கும்பல். பல இடங்களில் கலவரங்களை ஒடுக்க ராணுவம் அழைக்கப்பட்டது. "ராணுவத்தை அழைப்பதா?" என்று குய்யோ, முறையோ என்று பா.ஜ.கவும், காங்கிரசும் கூட்டுச் சேர்ந்து மாரடித்தன!

உழைப்பாளர்களின் போராட்டத்தில் போலீசுக்கு நகக்கீறல் ஏற்பட்டு விட்டாலே "போலீசை கொல்ல முயற்சி" என்று கூப்பாடு போடும் இந்த கும்பல், தொழிலாளர்கள் ஒன்றாக சேர்ந்து 'ஒன்னுக்கு' போனால் கூட சதி முயற்சி ராணுவத்தை கூப்பிடு! என்று பதறும் கும்பல், இந்த கலவரத்தில் ஜனநாயக உரிமைகளைப் பற்றி நிறைய பேசியது; உதை வாங்கிய போலீசை கண்டு கொள்ளவேயில்லை!

O O O

காங்கிரசு, பா.ஜ. கட்சிகள் பினாத்துவதுபோல் இட ஒதுக்கீடு நாட்டை ரெண்டாக பிளக்கவுமில்லை, வகுக்கவுமில்லை! பார்ப்பன மேல்சாதி ஆதிக்க சக்திகளிடம் இருக்கும் அரசு எந்திரத்தை இயக்குவதற்கான ஏகபோக வெறியைதான் தோலுரித்து காட்டிவிட்டது "பிற்பட்டவர்கள்" மீது பார்ப்பன ஆளும் கும்பல் கொண்டிருக்கும் கயமைத்தனமான கண்ணோட்டத்தைத் தான் — 'பிற்படுத்தப் பட்டவர்கள் பிறவியிலேயே அறிவற்றவர்கள்; தகுதிக்கு மீறிய பேராசைக்காரர்கள்' — திரை கிழித்து விட்டது.

அதே போல், இட ஒதுக்கீடு பிரச்சினை தேசிய பிரச்சினையும் அல்ல;வட்டார பிரச்சினையும் அல்ல! அரசு அதிகாரத்தை பதவிகளை பங்கு போடுவதற்கான பிரச்சினை, உண்மையிலேயே ஆகப்பிற்படுத்தப்பட்ட மக்களை ஏமாற்றி ஓட்டுப் பொறுக்குவதற்கான பிரச்சினை! இதைத்தான் ஓட்டுப் பொறுக்கி கட்சிகளின் இட ஒதுக்கீடு ஆதரவு வெளிப்புற பசப்புகளும், திரைமறைவு குழி பறிப்பு சதிகளும் நிரூபிக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

● கம்யூனிசத்தின் மீது ஏகாதிபத்தியங்களும் முதலாளித்துவ வாதிகளாலும் சோ. உதயமூர்த்தி, தினமலர், தினமணி, பி.ஜே.பி. வகையறாக்களும் அவதூறு செய்வதை எதிர்த்து தாங்கள் ஏன் மிகப் பெரிய அளவிற்குப் பிரச்சாரம் செய்யவில்லை. தற்போது மிகச் சரியான நேரத்தில் ஈரோட்டில் 'வீழ்ந்தது போலிக் கம்யூனிசம். வெல்லும் உண்மை கம்யூனிசம்' என்ற தலைப்பில் கேடயம் குழுவும் பிற புரட்சிக்கரக் குழுக்களும் ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டைப் பற்றித் தங்களுடைய கருத்து என்ன என்பதைத் தெரியப்படுத்துவீர்கள் என்று நம்புகிறேன். இதையும் (ஓடுகாலிகளின்) ஓட்டாண்டித்தனம் என்று நழுவ மாட்டீர்கள் என்று நம்புகிறேன். இதற்கு சரியான பதிலைத் தராவிட்டால் தாங்கள் கம்யூனிசத்திற்கும் இந்தியப் புரட்சிக்கும் எதிரானவர்கள் என்று நான் நினைக்கும்படி செய்து விடாதீர்கள்.

இப்படிக்கு: இன்னும் புரட்சியாளர் என்று தங்களை நம்பிக் கொண்டு இருக்கும் என்னை ஏமாற்றி விடாதீர்கள்.

— தி.இராகுல், திண்டுக்கல்.

● மதவெறி பாசிச சக்திகளுக்கு எதிராக பாசிச எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியம் பற்றி இப்போது கூறும் நீங்கள், கேடயம் - மனஓசை குழு நடத்துகின்ற பாசிச எதிர்ப்பு இயக்கத்தைப் பித்தலாட்டம் என்று முன்பு கூறி இருந்தீர்கள் அல்லவா? நீங்கள் இப்போது கூறும் அமைப்புகளை (ஆர்.எஸ். எஸ்., பா.ஜ.க., வி.இ.ப.) கண்டித்துத்தான் சென்ற பாராளுமன்றத் தேர்தலில் விரிவான அளவு பிரச்சாரம் செய்து அவர்களை மக்களிடத்தில் அம்பலப்படுத்தினார்கள். ஆனால் அந்த பா.எ.இ. பித்தலாட்டம் என்று கூறிய நீங்கள் இப்போது அவற்றை பற்றிப் பேசலாமா?

இதற்குத் தங்களின் பதில் என்ன? இப்போது நீங்கள் மக்களிடம் செல்வாக்குப் பெறவேண்டும் என்ற காரணத்திற்காக சந்தர்ப்பவாதமாக முடிவு செய்துவிட்டீர்களா?

— ஏ.வி.அண்ணாதுரை, ஆலத்தூர்.

■ கேடயம் - மனஓசைக் குழு தோன்றுவதற்கு முன்பே, பத்தாண்டுகளுக்கு முன்பிருந்தே, பாசிச எதிர்ப்பு பிரச்சார இயக்கமும், ஆர்.எஸ்.எஸ். மதவெறிக்கு எதிரான இயக்கமும் நாம் நடத்தி வருகிறோம். அப்போதெல்லாம், 'இந்தியாவில் பாசிசம் சாத்தியமா?' என்கிற கேள்வியைத்தான் கேடயம் - மனஓசைக் கும்பலின் தலைவர்கள் எழுப்பிக் கொண்டிருந்தனர். அதேபோல ஆறுமாதங்களுக்கு முன்பே, அதாவது 1990 மார்ச்சு மாதத்திலேயே தமிழகத்தின் 9 இடங்களில் 'கம்யூனிசமே வெல்லும்' என்கிற அரங்கக் கூட்டங்கள் நடத்தினோம். துண்டுப் பிரசுரங்களும், சிறுவெளியீடும் போட்டு விநியோகித்தோம்.

அகில இந்திய புரட்சிப் பண்பாட்டு இயக்கம் (AILRC)

4-வது அகில இந்திய மாநாடு

திருச்சூர் (கேரளா)

19 - 20 அக்டோபர் '90

தொடர்புக்கு: கே.ஏ.மோகன்தாஸ்
43, சோனா லாட்ஜ், ஷோரனூர் சாலை,
திருச்சூர், கேரளா.

(சார்பாளர் / பார்வையாளர் கட்டணம் ரூ.40/-)

ஆர்வலர்கள் திரளாக வந்து கலந்து கொண்டு சிறப்பிக்கக் கோருகிறோம்.

— மக்கள் கலை இலக்கியக் கழகம்,
தமிழ்நாடு.




கேள்வியாளர்கள் குறிப்பிடும்படி 'மிகப் பெரிய அளவிற்கு', 'மிக விரிவான அளவிற்கு' செய்யவில்லைதான்! ஆனால் சாத்தியமான அளவிற்கு இப்பணிகளைச் செய்வதில் நாம் முன்னோடிகளாகவே உள்ளோம். 'புதிய ஜனநாயகம்' வாசகர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் இந்தக் கேள்வியாளர்களுக்கு இவை எப்படித் தெரியாமல் போனது? இவர்களது கேள்விகளின் தொனியே விளக்கி விடுகிறது. கேடயம் - மனஓசைக் கும்பலின் பொய்ப் பிரச்சாரத்துக்குப் பலியாகி உள்ளார்கள். அதனால்தான் இப்படிக் கேள்வி எழுகிறது. அவர்கள் நடத்தும் பா.எ.இ. மற்றும் மாநாடு பற்றி வெறுமனே பித்தலாட்டம், ஒட்டாண்டித்தனம் என்று நாம் ஒருபோதும் எழுதியதில்லை. பிழைப்புவாதிகள், சமரசவாதிகள், ஓடுகாலிகள், கம்யூனிச துரோகிகள் கூடி பாசிச எதிர்ப்பு இயக்கம் கட்டுவது; 'கம்யூனிசமே வெல்லும்' என மாநாடு போடுவது பற்றிக் குறிப்பான கருத்துக்கள் - விமர்சனங்களை முன் வைத்துத்தான் கூறுகிறோம். அவற்றுக்குப் பதில் சொல்லத் திராணியற்றவர்கள், அவர்களைக் குணாம்சப் படுத்துவதற்காகக் கூறும் வார்த்தைகளைச் சாக்காக வைத்துக் கொண்டு பொய்யும் அவதூறுகளுமே பரப்புகிறார்கள்.

● இடது தீவிரவாதம், இடது சந்தர்ப்பவாதம், குட்டி முதலாளித்துவ தேசியவாதம் இன்னும் இதுபோன்ற வாதங்கள் 'தம்மைத் தாக்காமல்' தற்காக்க 'கேடயத்தை' தூக்கிப் பிடித்திருப்பவர்கள் "பாசிச ஆட்சியில் பாசிச சக்திகளுக்கும், பரந்துபட்ட ஜனநாயக சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாக உள்ளது" (இந்திய சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகளும் பிரதான முரண்பாடுகளும் - பக்.17) (கோடிட்டது நான்) என இன்றைக்கு 7 ஆண்டுகளுக்கு முன்பு 'முன்மொழிவதற்காக' 'ஞானம் பெற்ற 81-ல்' இருந்து இன்றுவரை, பாசிச ஆட்சி இல்லாதபோதும் 'மற்றவர்கள்' தன் வர்க்க பாசத்தைப் புரிந்து கொள்வதற்காக வேண்டி உரக்க 'பாசிச எதிர்ப்பு தேசிய ஜனநாயகப் புரட்சி' என்று 'மனஓசை' எழுப்புவது தவறுதானே?

— குமரன், திருவண்ணாமலை.

■ தவறுதான்! 1975-76ல் அவசரநிலை ஆட்சி வந்தபோது ஆளும் பாசிசக் கும்பலுக்கும் பாசிச எதிர்ப்பு ஜனநாயக சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாகியது; பிறகு 1977-ல் ஜனதா ஆட்சி வந்தபோது அது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது; எனினும் இன்றும் தொடர்ந்து பாசிச அபாயம் நிலவுகிறது - "எனவே இன்றைய பிரதான முரண்பாடாக இருப்பது இந்தியப் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுக்கும் பாசிசத்திற்கு எதிராக ஜனநாயகத்திற்காக நிற்கும் இந்திய மக்களுக்கும் இடையிலான முரண்பாடேயாகும்" (ஷ்டி பக்.42) என்கிறது கேடயம் - மனஓசை கும்பல்.

இதன் அடிப்படையில் 'பாசிச எதிர்ப்பு தேசிய ஜனநாயக முன்னணி' கட்டிட 'புரட்சி' செய்கிறது. இதன்படி பாசிச ஆட்சி



படிப்பகம்

www.padippakam.com

மற்றும் பாசிச அபாயம் ஆகிய இரண்டு நிலைமைகளில் நிலவும் பிரதான முரண்பாடுகளுக்கு இடையிலான வேறுபாடு என்ன? பாசிச ஆட்சி நிலவும்போது ஆளும் பாசிச சக்திகளுக்கு மட்டும் எதிராக ஆளும் வர்க்கங்களின் மற்ற பிரிவுகளையும் உள்ளடக்கிய பரந்துபட்ட ஜனநாயக சக்திகளைக் கொண்டதாகப் பிரதான முரண்பாடு இருக்கும். பாசிச ஆட்சி நிலவாது, பாசிச அபாயம் நிலவும் போது இந்தியப் பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் முழுவதற்கும் எதிராக பாசிசத்தை எதிர்த்து நிற்கும் இந்திய மக்களை மட்டும் கொண்டதாக பிரதான முரண்பாடு இருக்கும்; ஆளும் வர்க்கத்தின் எந்த ஒரு பிரிவும் இதில் அடங்காது. ஆனால் கேடயம் - மனஓசை கும்பல் தான் முன்வைத்துள்ள இந்தக் கோட்பாட்டின்படியாவது செயல்படுகிறார்களா? இல்லை. ஆளும் வர்க்கங்களின் சில பிரிவினரது அரசியல் பிரதிநிதிகளான ஜார்ஜ் பெர்னான்டஸ், தமிழ்க்குடிமகன் போன்றவர்களையும் உள்ளடக்கிய பாசிச எதிர்ப்பு இயக்க நடவடிக்கைகளை, பாசிச ஆட்சி நிலவாத போதும் மேற்கொள்கின்றனர்.

கேடயம் - மனஓசை கும்பலின் பாசிச எதிர்ப்பு இயக்கம் எவ்வாறு பித்தலாட்டமானது என்று இதைச் சுட்டிக்காட்டி நாம் எழுதினோம். அப்போது பாசிச சக்திகளை முதல்பட்ச எதிரிகளாகக் கணிக்கும்போது அவர்களிலிருந்து பாசிச எதிர்ப்பு முதலாளித்துவ ஜனநாயக சக்திகளை வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்; ஒன்றுபடுகிற அம்சங்களில் பாசிச எதிர்ப்பு முதலாளித்துவ ஜனநாயக சக்திகளை கம்யூனிஸ்டுகள் தங்களுடன் இணைத்துக் கொள்ள வேண்டும்; இதை நாம் ஏற்றுக் கொள்வதில்லை என்றும், பிரதான எதிரிக்கு எதிராக இரண்டாம்பட்ச எதிரியுடன் ஐக்கிய முன்னணி அமைப்பதையும் அதில் உள்ள இயங்கியல் அர்த்தத்தை நாம் புரிந்து கொள்ளவில்லை என்றும் சாடினார்கள் (கேடயம், '88 அக்.) ஆனால் கேடயம் - மனஓசை கும்பலின் பாசிச எதிர்ப்பு இயக்கம் அதன் கோட்பாடுகளுக்கே முரணாகவும் மாறாகவும் இருக்கிறது. இதேபோல கோட்பாட்டு முடிவு ஒன்றை எழுதி வைத்துக் கொண்டு அதற்கு எதிராக அவர்களே பித்தலாட்டங்கள் செய்வதை அவர்களது பத்திரிகைகள் ஆவணங்களையே ஆதாரமாகக் காட்டி நாம் எழுதி ஓராண்டாகிறது. அதற்கு முன்பு சித்தாந்தப் போராட்டத்துக்கு நாம் பயந்து விட்டதாக அவதூறு பேசித் திரிந்தவர்கள் இப்போது ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

> ## புதிய ஜனநாயகம்
> # ஆறாவது ஆண்டு விழா
> ## நவம்பர் 7-ம் தேதி மதுரையில்
>
> ***அன்பார்ந்த வாசகர்களே,***
>
> புதிய ஜனநாயகத்தில் வெளிவந்துள்ள கட்டுரைகள் - அதன் அரசியல் கண்ணோட்டம் குறித்து உங்களது விமர்சனங்கள், சந்தேகங்கள், ஆலோசனைகளை அக்டோபர் இறுதிக்குள் எழுதி அனுப்புங்கள். நிகழ்ச்சியில் ஆசிரியர் அவற்றுக்கு பதில் அளிப்பார். தவறாமல் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுங்கள்! புதிய ஜனநாயகத்தை புரட்சிப் பாதையில் வழி நடத்திச் செல்ல கருத்தால் உதவுங்கள்!
>
> நிகழ்ச்சி பற்றிய விபரங்கள் அடுத்த இதழில்...
>
> — **ஆசிரியர்குழு.**

● ***"நக்சல்பாரிகளின் நோக்கமென்ன, நக்சல்பாரிகள் ஆயுதம் ஏந்துவது ஏன்?" என்ற தலைப்பில் தமிழ்நாடு மக்கள் கலைமன்றம், ஆந்திர ஜனநாட்டிய மண்டலி ஆகிய அமைப்புகள் கத்தார் தலைமையில் மதுரையில் நடத்திய கலைநிகழ்ச்சியில் வங்கிக் கொள்ளை என்பது ஒரு புரட்சிகரமான நடவடிக்கை; இன்னும் குறிப்பாக மதுரை வங்கிக் கொள்ளை என்பது மக்களுக்காக மக்கள் யுத்தம் செய்த ஒரு புரட்சிகரமான நடவடிக்கை; இதைப் பகிரங்கமாக அறிவிப்பதில் நாங்கள் பெருமை அடைகிறோம் என்று பேசினர். இவ்வாறு பேசியது இதுதான் நக்சல்பாரிகளின் நோக்கமென்பது போன்றும், மதுரை வங்கி கொள்ளை பற்றிய அதிகார பூர்வமான அறிவிப்பாகவும் உள்ளது. கத்தார் ஒரு புரட்சிகரக் கலைஞன் என்றும், மக்கள் கலைஞன் என்றும் நக்சலிசம் மகத்தான மக்கள் எழுச்சி என்றும் தலைப்பிட்டு எழுதும் தாங்களும் இதே நிலையைத்தான் ஆதரிக்கிறீர்களா? அப்படியானால் நக்சல்பாரிகள் என்பவர்கள் கொலை, கொள்ளை போன்ற சமூக விரோத செயல்களைச் செய்பவர்கள்தான் என்று பிற பத்திரிக்கைகள் எழுதுவதை கண்டிக்கும் தங்களின் செயல் எப்படிச் சரியாகும்? - தகுந்த விளக்கம் அளியுங்கள்.***

**— ஜெயந்திரன், மதுரை.**

■ மதுரை வங்கிக் கொள்ளையை அடுத்த சில மாதங்களில் மக்கள் யுத்தத்தினர் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை அவர்களே மறந்து போய் விட்டார்களா? அல்லது எவ்வித நெறிமுறையுமின்றி புரட்டிப் புரட்டிப் பேசுவதுதான் 'ராஜ தந்திரம்' - அரசியல் திறமை என்று கருதுகிறார்களா? தெரியவில்லை. அன்று அவர்கள் 'மதுரை வங்கிக் கொள்ளை'யில் சம்பந்தப்படவில்லை; போலீசு அவதூறு செய்து, தமது தோழர்கள் மீது தாக்குதல் நடத்துகிறது என்று பத்திரிக்கையில் எழுதினார்கள். சுவரொட்டி, பிரசுரம் போட்டார்கள். மதுரையிலேயே பொதுக்கூட்டம் போட்டுச் சொன்னார்கள். இப்போது 'மக்களுக்காக மக்கள் யுத்தம் செய்த ஒரு புரட்சிகரமான நடவடிக்கை' என்கிறார்கள்.

'மக்களுக்காக மக்கள் யுத்தம் செய்த ஒரு புரட்சிகர நடவடிக்கை தான் என்றால் இதை மக்களிடம் நேரடியாக அப்போதே சொல்லி ஆதரவு கேட்டிருக்கலாம். 'எங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை' என்று ஏன் புளுக வேண்டும். மக்கள் அப்போது ஆதரவு தரமாட்டார்கள் என்று கருதியதாலா? அல்லது போலீசு தாக்குதல் - வழக்கை எதிர்கொள்ளத் துணிவற்ற பயமா? மக்கள் ஆதரவு தரமாட்டார்கள் என்று கருதியிருப்பார்களேயானால் அது ஒரு தீவிரவாத சாகசம்தானே தவிர புரட்சி நடவடிக்கை அல்லவென்று அவர்களுக்கே தெரிந்திருக்கிறது. போலீசு தாக்குதல் வழக்கிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக 'கொள்ளைக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை' என்று கூறியிருப்பார்களேயானால் போலீசு பற்றிய இவர்களின் அறியாமையைத்தான் அது காட்டும். இவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை வைத்தா போலீசு தாக்குதலும் வழக்கும் தொடுக்கப்படுகிறது? ஒரு காரியத்தைச் செய்துவிட்டு அப்போதே அதை நியாயப்படுத்த முடியவில்லை என்பதே இவர்களது தார்மீக, அரசியல் ரீதியிலான ஓட்டாண்டித்தனத்தைக் காட்டிவிடுகிறது.

கத்தார் ஒரு புரட்சிகரக் கலைஞர் என்றும் மக்கள் கலைஞர் என்றும் நக்சலிசம் மகத்தான மக்கள் எழுச்சி என்றும் தலைப்பிட்டு நாம் எழுதியதற்கும் மக்கள் யுத்தக் குழுவினரின் மேற்கண்ட நடவடிக்கைக்கும் முடிச்சுப் போடுவது சரியில்லை. இது பற்றி கேள்வி பதில் பகுதியிலேயே விளக்கமளித்து இருக்கிறோம். கத்தார் புரட்சிகர லட்சியத்துக்கு நிற்கிறார்; அதற்கான கருத்தைப் பிரச்சாரம் செய்கிறார்; பரபரப்பு, சாகச, பயங்கரவாதச் செயல்களை ஒரு போராட்ட முறையாகப் பிரச்சாரம் செய்வதில்லை. அதே சமயம் அத்தகைய செயல்களை, புரட்சிகரப் பயங்கரவாத நடவடிக்கைகளோடு போட்டுக் குழப்புகிறார் என்றே கருதுகிறோம். புரட்சிகர அம்சத்தை நாம் வரவேற்கும் அதே சமயம் தவறான அம்சங்களை விமர்சனம் செய்யத் தவறுவதில்லை. இப்படிச் செய்வதுதான் சரியானது என்று கருதுகிறோம். ஏதாவது ஒரு பக்கத்தை மட்டும் பார்த்து முற்றாக ஆதரிப்பது அல்லது முற்றாக எதிர்ப்பது என்பதுதான் தவறானது.

'நக்சல்பாரிகள் என்பவர்கள் கொலை, கொள்ளை போன்ற சமூக விரோத செயல்களைச் செய்பவர்கள்தான்' என்று பிற பத்திரிக்கைகள் இரண்டு காரணங்களுக்காக புளுகுகிறார்கள். முதலாவதாக, ஒரு தனிநபர் அல்லது கும்பல் தனது சொந்த லாபத்துக்காகச் செய்யும் கிரிமினல் செயல்கள்; அதையே தொழிலாக வைத்திருப்பவர்கள் என்கிற அவதூறுப் பிரச்சாரம் செய்கிறார்கள். இரண்டாவது, நக்சல்பாரிகள் என்பவர்கள் சில குழுக்களாகப் பிரிந்துள்ளவர்கள், வெவ்வேறு நடைமுறையில் இருப்பவர்கள்; சில குழுக்கள் பரபரப்பூட்டும் சில சாகச நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும் மற்றவை அதை எதிர்க்கின்றன. ஆனால் அனைவரும் ஒன்றுதான் என்று பிற பத்திரிக்கைகள் எழுதுகின்றன. இவை இரண்டுமே புரட்சிகர இயக்கத்துக்கு எதிராகப் பரப்பப்படும் அவதூறுகள் என்பதாலேயே நாம் அந்தப் பத்திரிக்கைகளைக் கண்டிக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஆபத்து யாரால்?

பிரதமர், மத்திய அமைச்சர்கள், 15 முதல் அமைச்சர்கள் உட்பட 90 தேசிய பிரமுகர்கள் கலந்து கொண்ட ஒரு நாள் கூத்து அண்மையில் சென்னையில் நடந்து முடிந்துள்ளது. இவர்களைப் பராமரிக்க இலட்சக் கணக்கில் ரூபாய் செலவு; கறுப்பு பூனைகள், மோப்ப நாய்கள் சகிதம் இவர்களைப் பாதுகாக்க எண்ணிலடங்கா போலீசு; கூட்டம் நடந்த இடத்தைச் சுற்றி இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவிற்கு போலீஸ் ரோந்து; குண்டு கண்டிபிடிக்கும் சோதனைகள்; போக்குவரத்து நிறுத்தம்; இப்படி பயங்கரமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டிய நிலையில் உள்ளவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தான் தேசிய ஒருமைப்பாட்டை எவ்வாறு பாதுகாப்பது என்று கலந்தாலோசித்தார்கள்! ஆம்; சென்னையில் நடந்த தேசிய ஒருமைப்பாடு குழுவின் கூட்டத்தைத் தான் குறிப்பிடுகிறோம்.

சரி, இவ்வளவு பண விரயம், பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து தேசிய ஒருமைப்பாடு குழு (தே.ஒ.கு) சாதித்தது என்ன? சாதித்து பூஜ்யமே!

பஞ்சாப் பிரச்சனை, பாபர் மசூதி - ராமஜென்பூமி ஆகிய இரு பிரச்சனைகள் மட்டுமே இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. இதில் பஞ்சாப் பற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. தெரிவிக்கப்பட்ட கருத்துகள் மூன்று வகைகளாக இருந்தனவாம். தேர்தல் நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை இன்னும் பஞ்சாபில் கனியவில்லை; எனவே தேர்தலை தள்ளிப் போட வேண்டும் என்பது ஒரு கருத்து; தேர்தலை தள்ளிப் போட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிப்பது என்றால், தேர்தல் நடத்துவதற்கான ஒரு தேதியை உறுதியாக அறிவித்து விட்டே குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிக்க வேண்டும் என்பது இன்னொரு கருத்து; மூன்றாவது கருத்து, தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதாகும்; அகாலி தளம் கட்சி இந்த கருத்தை முன் வைத்து கோரியது; ஆனால் தேசிய ஒருமைப்பாட்டை காக்க கூடியவர்களால் பஞ்சாப் பிரச்சனையில் ஒருமைப்பாட்டிற்கு வர முடியவில்லை. தெரிவிக்கப்பட்ட கருத்துகளை அடிப்படையாக கொண்டு அரசாங்கம் விரைவில் ஒரு முடிவெடுத்து அமுலாக்கும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்!

பிரதமர்தான் முடிவெடுப்பார் என்றால், அப்புறம் கருத்து கேட்பதற்காகவா இவ்வளவு தடபுடல்கள்? கருத்து கேட்பது என்றால் எழுத்து பூர்வமாகவே பெற்றுக் கொள்ளலாமே?

பஞ்சாபின் எரிகின்ற பிரச்சனை தேர்தல் நடத்தாததுதான் என்பது போல எல்லோரும் தேர்தலை எப்போது நடத்துவது என்பதில் தான் கவனம் செலுத்தியுள்ளனர். பஞ்சாபின் உழைக்கும் மக்களுக்கோ அரசு பயங்கரவாதம், மதவெறி பயங்கரவாதம், வேலையில்லா பிரச்சனை, பற்றாக்குறை, விலைவாசி போன்ற எரிகின்ற பிரச்சனைகள் பல உள்ளன. இவைகளைத் தீர்ப்பது பற்றி தே.ஒ.கு கூட்டம் விவாதிக்கவேயில்லை

ஒருமைப்பாடு குழுவில் பேசப்பட்ட இரண்டாவது பிரச்சனை பாபர் மசூதி - ராமஜென்மபூமி தாவாவாகும். இது தொடர்பாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்து - முஸ்லீம் ஆகிய இருமதத் தலைவர்களையும் கூட்டி வைத்து பேசி ஒரு சுமுகமான முடிவு காண முயல்வது; இப்பிரச்சனை தொடர்பாக கோர்ட்டில் உள்ள வழக்கு விசாரணையை முடுக்கி விட அரசாங்கம் முயல்வது; கோர்ட் தீர்ப்பை மதித்து எல்லோரும் நடக்க வேண்டும் ஆகிய அம்சங்கள் கொண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நூற்றாண்டுகளாக முஸ்லீம்களின் வழிபாட்டு தலமாக இருக்கும் பாபர் மசூதி பற்றி இந்து மதவெறியர்கள் பிரச்சனையை கிளப்பினார்கள் என்பதற்காக கோர்ட் முடிவுக்கு கட்டுப்படுவது என்பதோ, பேசித் தீர்ப்பது என்பதோ இந்துமத வெறிக்கு தீனி போடுவதாகும்.

பாபர் மசூதி - ராமஜென்மபூமி பிரச்சனையை இந்து சாம்ராஜ்யத்தை நிறுவும் தங்களது நோக்கத்திற்கு உந்து பலகையாக வைத்து செயல்படும் வி.எச்.பி., பி.ஜே.பி போன்ற இந்து மதவெறி பாசிச சக்திகள் எந்த முடிவையும் ஏற்க தயாராக இல்லை. தேசிய ஒருமைப்பாட்டிற்கு திட்டமிட்டு உலைவைக்கும் அச்சக்திகளின் கொட்டத்தை அடக்குவது எப்படி என்று தே.ஒ. குழு கூட்டம் விவாதிக்கவே இல்லை. இதன் மூலம் அது கையாலாகாத சுயநலமிகளின் குழு என்பதை நிரூபித்துக் கொண்டுள்ளது;

சென்னையில் நடந்த இந்த தே.ஒ.கு. கூட்டத்தில் பாரதிய ஜனதா கட்சி கலந்து கொள்வதில்லை என கடைசி நிமிடத்தில் முடிவெடுத்தது. மத நல்லிணக்கத்திற்கான துணைக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளை தே.ஒ.கு. கூட்டத்தில் தெரிவிப்பதற்கு முன்பே அந்த முடிவுகள் பற்றி சில வியாக்கினங்களை உள்துறை அமைச்சகத்தின் சிறு உயரதிகாரிகள் வெளிப்படுத்தி விட்டனர். துணைக்குழு கூட்டத்தில் நடந்த முழு விவாதங்களையும் வெளியிடாமல் அபிப்பிராயங்களை மட்டும் வெளியிட்டதன் மூலம் வி.பி.சிங் அரசு நெறிமுறைகளை மீறி விட்டது; இவ்வாறு அபிப்பிராயங்களை கசிய விட்டதன் நோக்கம் அத்வானி நடத்த இருக்கும் ரத யாத்திரையை தடுக்கும் நோக்கமுடையது; எனவே, இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் கலந்து கொள்ளவில்லை என பி.ஜே.பி கட்சி அறிவித்தது;

அக்கட்சி சொல்வதில் ஒரு நியாயம் இருப்பினும் கூட்டத்தில் கலந்து கொள்ளாததற்கு அது ஒரு சாக்கே. உண்மைக் காரணம் வேறாகும். பாபர் மசூதியை இடித்து விட்டு அந்த இடத்தில் ராமர் கோயிலை கட்ட வேண்டுமென்று தான் இந்துமதவெறி பார்ப்பன பி.ஜே.பி தலைமையின் எண்ணமாகும்; அதே சமயத்தில் தான் மதவெறியில்லாது மத நல்லிணக்கத்திற்கு பாடுபடுவது போலவும் தேசிய ஒருமைப்பாடு குலையுமாறு நடந்து கொள்ளாது என்பது போலவும் நாடகமாடி வருகிறது; இந்தப் பிரச்சனையில் மற்ற கட்சிகள் எல்லோரும் தான் விரும்பாத ஒரு பொது முடிவுக்கு வருவார்கள் என்று அதற்கு முன்கூட்டியே தெரியும்; அந்த முடிவை ஏற்குமாறு மற்ற எல்லோரும் தன்னை நிர்ப்பந்திப்பார்கள் என்றும் அதற்கு தெரியும். நிர்ப்பந்தத்திற்கு ஒப்புக் கொண்டு மத நல்லிணக்கவாதி போல காட்டிக் கொண்டால் இந்து வோட்டு வங்கி கைவிட்டு போய்விடும்; ஏற்றுக் கொள்ளா விட்டாலோ தனிமைப்படுத்தப்படும்; இந்த






படிப்பகம்

www.padippakam.com

இக்கட்டான நிலையிலிருந்து தப்பிக்கவே பி.ஜே.பி கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லை.

சென்னை கூட்டத்திற்கு முன்பே துணைக்குழுவின் முடிவு பற்றி கருத்துகளை வி.பி.சிங் அரசு கசிய விட்டதன் நோக்கம் பி.ஜே.பி கட்சியை மதவெறி அமைப்பு என்று காட்டி தனிமைப்படுத்தத்தான்; ஆனால் கூட்டத்திற்கு வராமல் இருந்ததன் மூலம் பி.ஜே.பி தலைமை இதை முறிய டித்து விட்டது. இது தனது மதவெறி நடவ டிக்கைகளைத் தொடர பி.ஜே.பிக்கு சாதக மாக போய் முடிந்து விட்டது.


மொத்தத்தில் வோட்டுப் பொறுக்கிக ளின் அரசியல் சித்து விளையாட்டுக்கான மற்றுமொரு அரங்கமே தே.ஒ.குழு. என்பது தெளிவாக நிருபணமாகி விட்டது; அதன் செயல்பாடுகள் தேசிய ஒருமைப்பாட்டிற்கு உலை வைக்கும் சக்திகளுக்கு பணிந்து போவதே என்பதும் நிரூபணமாகி விட்டது; அரசு சன்மானங்களைப் பெற லைசன்ஸ் வழங்கும் வோட்டுகளைப் பெற, தேசிய ஒருமைப்பாட்டிற்கு கேடு விளைவிக்கும் சாதி, மத, இன வெறிகள் உட்பட இன்னும் என்னென்ன சாதனங்கள் உள்ளனவோ அத் தனையையும் தயங்காமல் பயன்படுத்த தயாராயிருக்கும் சக்திகளைக் கொண்ட தே.ஒ.கு. அப்படி மட்டுமே இருக்க முடியும்.

இங்கே தான், இப்பொழுது தான் அடிப்படையிலேயே ஒரு சந்தேகம் வரு கின்றது! உண்மையிலேயே தேசிய ஒரு மைப்பாட்டினால் யாருக்கு என்ன லாபம்? என்பதே அந்த சந்தேகம். எதற்காக ஒரு மைப்பாட்டை உருவாக்க வேண்டும்? கட் டிக் காக்க வேண்டும்?

அரசாங்கமும் ஆளும் வர்க்கங்களும் வோட்டுப் பொறுக்கி அரசியல் கட்சிகளும் சொல்லும் ஒருமைப்பாடு வந்தால், விலை வாசி விழுமா? வேலையில்லாத் திண்டாட் டம் வேரற்று போகுமா? கல்வி வசதி கட்டா யம் கிடைக்குமா? லஞ்சம் ஊழல் ஊற்றற்று போகுமா? பட்டினி பறந்து விடுமா? நிச்ச யம் இவை எல்லாம் நடக்கப் போவதில்லை; எனவே, இயல்பாகவே உழைக்கும் மக்கள் தேசிய ஒருமைப்பாட்டில் அக்கறை செலுத் தவில்லை;

ஆனால் இந்தியா தனித்தனி நாடாக போகாமல் ஒருமைப்பாடு சாதிக்கப்பட்டு ஒரே நாடாக இருந்தால் வேறு சிலருக்கு ஜீவாதாரமான ஆதாயம் இருக்கிறது. டாட்டா, பிர்லா போன்ற தரகுப் பெருமுத லாளிகள் மற்றும் ஏகாதிபத்தியவாதிகளின் கம்பெனிகளுக்கு மாபெரும் சந்தை நிலை நாட்டப்படும்; மலிவான உழைப்பு சக்தி உத் திரவாதமாக்கப்படும். 'வன்முறைகள்', 'சீர் குலைவுகள்' இல்லாமல் உற்பத்தி ஒழுங்காக நடந்து லாபம் தொடர்ந்து கிடைக்கும். நிலப் பிரபுக்களும் பெரும் வியாபாரிகளும் அதி கார வர்க்கத்தினரும் இதே போல் தேசிய ஒருமைப்பாட்டினால் ஆதாயம் அடைகி றார்கள்.

எனவே தான் இவர்களும் இவர்க ளுக்கு சேவை செய்கின்ற அரசும் அரசியல் கட்சிகளும் பிற அமைப்புகளும் 'தேசிய ஒருமைப்பாட்'டிற்கு இவ்வளவு கூப்பாடு போடுகின்றனர்.



அதே சமயத்தில் உழைக்கும் மக்கள் அரசியல் உணர்வு பெற்று விட்டாலோ, ஐக் கியப்பட்டு விட்டாலோ தமது ஆடம்பர வாழ்விற்கு ஆபத்து என்பது அவர்களுக் குத் தெரியும். எனவே அவர்களை சீரழிக்க வும் அவர்களுக்கு இடையே இட்டு நிரப்ப முடியாத இடைவெளியை உருவாக்கவும் சாதி, மத, இன வெறிகளை திட்டமிட்டு கிளப்பி உழைக்கும் மக்களை மோத விடுகி றார்கள். இவ்வாறு இவர்கள் சொல்லும் ஒரு மைப்பாட்டிற்கு இவர்களே குழிபறிப்பவர்க ளாகவும் இருக்கிறார்கள். ஆனால் பழியை இவர்கள் ஊட்டி வளர்க்கும் சாதி, மத, இன வெறி சக்திகள் மீதோ அல்லது அன்னிய நாடுகள் மீதோ மட்டும் முழுமையாக போட்டு விட்டு அப்பாவி போல நாடகமாடு வார்கள்.

எனவே, தேசிய ஒருமைப்பாட்டிற்கு எதிரான முக்கிய கிரிமினல் குற்றவாளிகள் இவர்கள் தான். ஆனால் இவர்கள் தான் ஒருமைப்பாட்டை காப்பதாக கூத்தடித்து நமது வரிப்பணத்தை ஏப்பம் விட்டு வருகி றார்கள். எனவே, இவர்களை ஒழிக்காமல் உண்மையான தேசிய ஒருமைப்பாட்டை சாதிக்கவே முடியாது.

அடுத்து இவர்கள் சித்தரிக்கும் ஒரு மைப்பாடு என்பதே மாபெரும் மோசடியா கும். இந்தியா பல்வேறு தேசிய இனங்க ளைக் கொண்ட நாடு. ஆதிக்க சக்திகளால் மக்கள் சாதி, மத அடிப்படையில் திட்ட மிட்டு பிரித்து வைக்கப்பட்டிருக்கும் நாடு. இன்னும் பெரும் முதலாளிகளான டாட்டா, பிர்லா போன்ற தரகு முதலாளிகள், நிலப்பிர புக்கள், அதிகார வர்க்கத்தினர், பெரும் வியாபாரிகள், ஏகாதிபத்தியவாதிகளின் லாப வேட்டைக்கு ஏற்ப கிராமப்புறங்கள், மலைப்பகுதிகள், புறக்கணிக்கப்பட்டு அங் குள்ள மக்கள் மிகவும் மோசமான நிலையில் ஒடுக்கி வைக்கப்பட்டுள்ளனர். பல மாநிலங் களே இவ்வாறு பின்தங்கிய நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளன. இதனாலும் ஆளும் வர்க்கங்களின் பிரித்தாளும் கொள்கையா லும், இந்தியாவில் சாதி, மத மோதல்கள், தேசிய இனம் அல்லது பழங்குடி அடிப்ப டையான போராட்டங்கள் தொடர்ந்து நடப் பதற்கான அடித்தளமும் உள்ளது.

இந்த அடித்தளத்தை போட்டவன் ஆங்கிலேயன். ஏறத்தாழ 500-க்கும் மேற் பட்ட சமஸ்தானங்களாக சிறு சிறு நாடுக ளாக இருந்த இந்திய துணைக் கண்டத்தை தனது ஒடுக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் வசதியாக இருக்கும் பொருட்டு துப்பாக்கி முனையில் இந்தியாவை நிர்வாக மையப்ப டுத்தி ஒரே நாடாக்கினான். அதே சமயத்தில் தனது ஆதிக்கத்திற்கு எதிராக இந்திய மக் கள் ஒன்றுபட்டு போராடாமல் தடுக்க பிரித் தாளும் கொள்கையை கையாண்டான். வகுப்புவாரி பிரதிநிதித்துவம், சாதிய அடிப் படையில் தனித்தொகுதி, இந்தியர்களை நிர் வாகத்தில் பயிற்றுவிப்பது என்ற தூண்டி லைப் போட்டு அரசு சன்மானங்களுக்காக மக்கள் சாதி, மத, இன அடிப்படையில் மோதிக் கொள்ளும்படி செய்தான்.

1947-க்குப் பிறகு ஆளும் வர்க்கங்க ளாக வந்த தரகுப் பெருமுதலாளிகளும் நிலப்பிரபுக்களும் தங்களது தொழில், லாப நோக்கங்களுக்கு இந்தியர் ஒன்றாக இருப் பது தேவை என்பதால், துப்பாக்கி முனை யில் இந்திய ஐக்கியத்தை பராமரித்து வரு கின்றனர். எனவே, இவர்களுக்கு ஏக இந் தியா என்பது ஏகபோக கொள்ளைக்கான சாதனம், ஒருமைப்பாடு என்பது லாப பங் கீடு தான்; பாரதப்பற்று என்பது பணப்பற்று தான்.



படிப்பகம்


www.padippakam.com

இப்படி இவர்களின் வேட்டைக்கு அடித்தளமாக இந்தியாவை ஒன்றாக வைத்திருக்க துப்பாக்கியை மட்டும் பயன்படுத்தவதில்லை; சித்தாந்த ரீதியில் ஒன்றாக கட்டி வைக்கவும் முயல்கிறார்கள்; அதற்கு அவர்கள் பயன்படுத்தும் பாசக் கயிறு தான் இந்து-இந்தி-பார்ப்பன ஆதிக்க அடிப்படையிலான கலாச்சாரமாகும். இந்த கலாச்சாரத்தை பின்பற்றுவதே தேசப்பற்று; அது தான் ஒருமைப்பாட்டிற்கான அடித்தளம் என்று 1947-க்கு முன்பிருந்தே திட்டமிட்டு பிரச்சாரம் செய்யப்பட்டது. சுதந்திர போராட்ட இயக்கம் இந்து-இந்தி-பார்ப்பன ஆதிக்க கலாச்சாரத்தோடு திட்டமிட்டு பின்னிபிணைக்கப்பட்டது. இந்து மகாசபை, ஆரிய சமாஜம் போன்ற அமைப்புகள் இதை வெளிப்படையாக செய்தன. காந்தியும் காங்கிரஸ் கட்சியும் இதையே நாசூக்காகவும் சில சமயங்களில் வெளிப்படையாகவும் செய்தனர்.

போராட்டத்திற்கு செல்லுமுன் விநாயகரை கும்பிட்டு வரும் பழக்கத்தை கொண்டு வந்தார் திலகர். பசு வதையை தடை செய்ய வேண்டும்; சுய ராஜ்யத்தை விட பசு வதைத் தடையையே நான் முக்கியமாக கருதுகிறேன் என்று சொல்லி செயல்பட்டவர் காந்தி. முஸ்லீம்களுக்கும் கிறித்துவர்களுக்கும் தனித்தொகுதி கொடுக்கப்பட்டதை எதிர்க்காத காந்தி தாழ்த்தப்பட்டபட்ட மக்களுக்கு தனித்தொகுதி கொடுத்தவுடன் 'இந்து மதத்தை ஒழிக்கப் பார்க்கிறார்கள்' என்று ஒப்பாரி வைத்தார். தாழ்த்தப்பட்டவர்களுக்காக தனித்தொகுதி முறையை எதிர்த்து சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

''பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்வோம்', 'சேதமில்லாத இந்துஸ்தானம், அதை தெய்வமென்று கும்பிடடி பாப்பா' என்று 'தேசியக்கவி'பாரதி பாடியதும் இந்த அடிப்படையில் தான். இப்படி எண்ணற்ற எடுத்துக் காட்டுகள் உள்ளன.

1947 ஆகஸ்டு 15க்கு பிறகும் காங்கிரஸ் கட்சியால் இது தொடரப்பட்டது. இந்துக்களின் நாடு என்ற அடைமொழி கொண்ட பெயர்கள் பொதுத்துறை நிறுவனங்களுக்கு சூட்டப்பட்டன. இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் லிமிடெட், பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் போன்றவை இதற்கு எடுத்துக் காட்டுகள். இராணுவம் மற்றும் கேந்திரமான துறைகளில் உயர் பதவிகளில் திட்டமிட்டு கிறித்துவர்கள், முஸ்லீம்கள் தடுக்கப்பட்டனர்.



முகலாய மன்னர்களால் அடித்து நொறுக்கப்பட்ட சோமநாதர் ஆலயத்தைக் கட்ட முன்முயற்சி எடுத்தவர் அன்றைய உள்துறை அமைச்சர் வல்லபாய் படேல்; புதுப்பிக்கப்பட்ட ஆலயத்தில் சோமநாதரை பிரதிஷ்டை செய்யும் விழாவை துவக்கி வைத்தவர் அன்றைய குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத். இன்றளவும் இந்த நிலையே நீடிக்கின்றது.

1935-லேயே இந்தி தான் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று காந்தியின் முன்முயற்சியால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வானொலி, வானொளி ஆகியவைகளில் இந்து-இந்தி-பார்ப்பன ஆதிக்கமும் கலாச்சாரமும் இருப்பதை - பரப்பப்படுவதை நடைமுறையில் அன்றாடம் கண்டு வருகின்றோம். வலது, இடது போலி கம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட 'தேசிய' கட்சிகள் அனைத்தும் இந்தப் பாதையிலே வால் பிடித்து சென்றவையே; இன்றும் செல்பவையே.

இதற்கு எதிராக குரல் கொடுத்தவர்கள், தங்களது - நியாயமான உரிமைக்குப் போராடியவர்கள் எல்லாம் தேசத் துரோகிகள், ஒருமைப்பாட்டைக் குலைப்பவர்கள் என்று மூர்க்கமாக தாக்கப்பட்டனர்; திட்டமிட்டு தனிமைப்படுத்தப்பட்டனர். சுயநிர்ணய உரிமைக்கு குரல் கொடுப்பது, இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பது, இலங்கைத் தமிழர்கள், காஷ்மீர் மக்களின் போராட்டங்களை ஆதரிப்பது, ஏன் சட்டத்திற்கு உட்பட்டு மாநிலத்திற்கு சில கூடுதல் அதிகாரங்களுக்குப் போராடுவது கூட தேசத் துரோகம்; ஒருமைப்பாட்டை சீர்குலைக்கும் சதி என்று அவதூறு செய்யப்படுகின்றன. அரசு அடக்கு முறையும் ஏவி விடப்படுகின்றது.

இதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் இது பலாத்காரத்தின் அடிப்படையில், அறியாமை - ஏமாற்றுதனத்தின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ள ஐக்கியமாகும்; குற்ற உணர்வை ஏற்படுத்தியும் பதவி வேலை வாய்ப்பு காட்டியும், மனதை ஊழல் படுத்தி உருவாக்கப்பட்டுள்ள ஒருமைப்பாடாகும்.

உழைக்கும் மக்களின் மீதான சுரண்டலும் ஒடுக்கு முறையும் இல்லாத, வேலையில்லாத திண்டாட்டம், விலைவாசி ஏற்றம், லஞ்சம் ஊழல், சாதி, மத இன பேதங்கள் அற்ற, எல்லோருக்கும் சம அந்தஸ்து சம வாய்ப்பும் அளிக்கின்ற தேச ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையுமே நாம் விரும்புகிறோம்.

உழுபவர்க்கு நிலம்; உழைப்பவருக்கே அதிகாரம் கொண்ட பாட்டாளி வர்க்கத் தலைமையிலான ஒரு அரசே இதைச் செய்ய முடியும். அரசியல் புரட்சி ஒன்றின் மூலமே இதைச் சாதிக்க முடியும். அதற்கு ஆயுதமேந்துவது தவிர்க்க முடியாதது.

◆ சுப்பு

# வைகறையை நோக்கி...



திருக்காட்டுப் பள்ளியில் கடந்த 8.9.90 அன்று விவசாயிகள் விடுதலை முன்னணியின் திருவையாறு வட்டார முதல் மாநாடு தியாகிகள் இரணியன், சிவராமன் நினைவரங்கத்தில் நடந்தது. வி.வி.மு. தோழர் இலட்சுமணன் கொடியேற்றி வைக்க தோழர் பழனிவேல் தலைமையில் மாநாடு தொடங்கியது. பின்னர் காவிரிநீரில் தமிழக உரிமைக்கான சிறப்புக் கருத்தரங்கமும் மதியம் மாநாட்டு கருத்தரங்கமும் நடைபெற்றது. இதில் தோழர்கள் சிவஜோதி, காளியப்பன், இராம.துரைமாணிக்கம், மாது, நாராயணன் ஆகியோர் பங்கேற்றனர். இதனை அடுத்து தோழர்கள் ஜெயசீலன், சிவஜோதி, பாஸ்கர் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும், தோழர் ஜெயசீலன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிதாக பொறுப்பேற்றவர்களை தோழர் மாது அறிமுகம் செய்து வைக்க தோழர்கள் ராஜமாணிக்கம் (வி.வி.மு., பட்டுக்கோட்டை), கதிர்வேலன் (வி.வி.மு., கல்லலை), முத்து (ம.க.இ.க., திருச்சி), காமராஜ் ( என்.எப்.டி.இ) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாலை ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடந்தது. ஊர்வலத்தில் பகுதிவாழ் மக்கள் பெருவாரியாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். 150-க்கும் மேற்பட்டவர்கள் அடங்கிய ஊர்வலம் கடும் மழை பெய்த பொழுதும் உறுதியுடன் தொடர்ந்து நடத்தப்பட்டு பொதுக்கூட்டத் திடலை வந்தடைந்தது. பொதுக் கூட்டத்தில் தோழர் ஜெயசீலன் தலைமையேற்று மாநாட்டு தீர்மானங்களை விளக்கிப் பேசினார். தோழர் கதிர்வேலன் சிறப்புரையாற்ற திருவெண்ணை நல்லூர் வட்டார தோழர்கள் கலை நிகழ்ச்சி நடத்தினர். இறுதியில் தோழர் பாஸ்கர் நன்றி நல்க சர்வதேச கீதத்துடன் மாநாடு நிறைவடைந்தது. புரட்சிகர அரசியலின் உறுதிப்பாட்டை எடுத்துரைக்கும் வண்ணம் விளங்கிய இம் மாநாடு பகுதி மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பை பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

# விவசாயிக்கு நாமம் அதிகாரிக்கு லாபம்

(புதிய ஜனநாயகம் வாசகர் எழுதிய கடிதத்தை உங்கள் பார்வைக்கு அப்படியே பிரசுரிக்கிறோம்.)

ஐயா,

மதுரை மாவட்டம் உத்தமபாளைய வட்டம் தேவாரம் மீனாட்சிபுரம் கிராமத்தில் அறியாமையால் பஞ்சாயத்து உறுப்பினராக பதவி ஏற்று செயல்பட தொடங்கினேன். இந்த அரசியல் அமைப்பில் நான்கு ஆண்டு கால அனுபவத்தில் தோல்வியைத் தவிர எதையும் நான் அறிந்ததே இல்லை. கோடிக் கணக்கான தோல்விகள். ஒரு சிறிய அனுபவம், என்னுடைய கிராமத்தையே பழி சொல்லுக்கு உள்ளாக்கியது.

எங்கள் கிராம மக்கள் சிலருக்கு IRDP (கிராமப்புற ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டம்) கடன் வேண்டி அனுமதி கேட்டேன். அரசு 10 பேரில் நான்கு பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கியது. தேவாரம் தொடக்க கூட்டுறவு வங்கி மூலமாக கடன்பெற அனுமதி கிடைத்தது. ஆனால், வங்கி அதிகாரிகளோ தலைக்கு ரூ.1100 முதல் 1500 வரை லஞ்சமாக எடுத்துக் கொண்டார்கள். அப்போது அவர்களிடம் நான் ''ஐயா, தங்கள் வங்கியில் கடன்பெற நீங்கள் ஏற்கனவே நூறு ரூபாய்க்கு பத்து ரூபாய் வாங்கி இதுநாள் வரை தலைக்கு ரூ.700 முதல் 750 வரை செலவாகியுள்ளன. அதற்குமேல் நீங்கள் இவ்வளவு எடுத்துக் கொண்டால் என்ன செய்வது'' என்று மன்றாடினேன். ஆனால் என்னோட மன்றாடலை வங்கி அரக்கர்கள் ஏற்கவில்லை. தனியார் வட்டி - கடன் எங்களை துரத்த வேறுவழி இன்றி இந்த சுமையையும் எங்கள் முதுகில் ஏற்றிக் கொண்டோம். பலனை பங்கிட்டுக் கொண்டார்கள் பாவி அதிகாரிகள்.




எனவே எங்கள் குறைகளை, கடந்த 22-9-1988ம் நாளன்று தமிழக ஆளுநர் அவர்களுக்கு முறையோடு எழுதி நீதி கேட்டேன். அதன்படி 13-2-89 ஆம் நாள் அரசு ஒரு விசாரணைக்கு அழைத்து உத்தமபாளையம் கூட்டுறவு வங்கி அதிகாரிகளை விசாரணை செய்ய ஏற்பாடு செய்தது. குட்டி எட்டடி பாயந்தால் தாய் பதினாறடிபாயும் மல்லவா? விசாரணைக்குழு தன் குணத்தைக் காட்டி எங்கள் நெற்றியில் நாமம் போட்டது. விசாரணைக் கமிட்டியிடம் நாங்கள் கொடுத்த உறுதிமொழி வேறு. ஆனால் அவர்கள் உருவாக்கிய உறுதிமொழி வேறாகிவிட்டது. எங்கள் கையெழுத்தையே மாற்றி தலைகீழாக மனு தயார் செய்துள்ளார்கள் என்பது 29-1-90-ஆம் நாள் எனக்கு அனுப்பப்பட்ட நகலின் மூலம் தெரிய வந்தது.

எங்களிடம் லஞ்சமாகப் பெற்றுக் கொண்ட தொகையை எங்கள் கணக்கில் வரவு வைக்கும் வரை கடனை திருப்பி செலுத்த மாட்டோம் என்பதுதான் எங்கள் கோரிக்கை. ஆனால் விசாரணைக்குழு, பெற்ற கடனையே நாங்கள் திருப்பி செலுத்த மாட்டோம் என பொருள்படும்படி மாற்றி விட்டது. வங்கி அதிகாரிகளோ எங்களைப் பார்த்து "நீங்கள் கடன் வாங்கினால் கடனை திருப்பி செலுத்த மாட்டீர்கள். ஆகையால், உங்களுக்கு அரசு இனி சலுகைகள் எதுவும் செய்ய முன்வராது'' என்கிறார்கள். இந்த சம்பவத்தில் எங்கள் கிராமம் இழிவு சொல்லைத்தான் பெற்றது. அரசு அதிகார வர்க்கங்களோ பலனைப் பெற்றது.

**இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள,**
எம்.முருகையா, 4வது வார்டு மெம்பர்
தே. மீனாட்சிபுரம் பஞ்சாயத்துபோர்டு

## தவறுக்கு வருந்துகிறோம்

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

கடந்த 1 - 15 செப்டம்பர் இதழில் 11ம் பக்கம் வெளிவந்துள்ள அமைப்புச் செய்தியில் ''முத்துப் பேட்டையில் மலை முழுங்கிகள்'' என்பதற்குப் பதிலாக ''மன்னார்குடியில் மலை முழுங்கிகள்'' எனத் தவறாக அச்சாகியுள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட மோசடிகள் இசட்.சி.25 முத்துப்பேட்டை, பஞ்சாயத்து யூனியன் ஊழியர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன சேமிப்புச் சங்கத்தைச் சேர்ந்தது என்ற விபரமும் ஊழல் பேர்வழி பழைய நிர்வாக செயலரான ஆபத்தாரணம்தான் சங்கத்தின் மோசடிகளுக்குக் காரணம் என்ற விபரமும் விடுபட்டுள்ளது. மேற்கூறிய தவறுகளுக்காக மிகவும் வருந்துகிறோம்; இது போன்ற தவறுகள் இனியும் தொடராமல் கவனமாக செயலாற்ற உறுதியளிக்கிறோம்.

— ஆசிரியர்குழு

## நெருப்போடு மோதும் போலீசு

எத்தனை முறை சூடுபட்டாலும் போலீசிற்கு உரைப்பதில்லை; மீண்டும் மீண்டும் புரட்சிகர அமைப்புகள் மீது வெறியோடு பாய்கிறது. எந்த அளவிற்கு புரட்சிகர அமைப்புகளை பலம் கொண்டு தாக்குகிறதோ அந்த அளவிற்கு தன்னை அம்பலப்படுத்திக் கொள்கிறது. இதோ இதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டு.

பட்டுக் கோட்டையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பல மோட்டார் சைக்கிள்கள் தீ வைக்கப்பட்டன. சில சமூக விரோத சக்திகளின் கைங்கரியமே இது. ஆனால் உண்மையான குற்றவாளிகளை பிடிக்க வக்கற்ற போலீசு, விவசாயிகள் விடுதலை முன்னணியின் மீது பாய்ந்தது. கறம்பக்குடியைச் சேர்ந்த சாகுல், ஊரணிபுரத்தைச் சேர்ந்த சேகர் மற்றும் அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த நடராஜன், ராஜமாணிக்கம், மூர்த்தி, பாலசுப்ரமணியன் ஆகிய வி.வி.மு. தோழர்களை 12.9.90 அன்று கைது செய்தது.

ஏற்கெனவே பலமுறை இதுபோன்று தோழர்களை பல சதிச் செயல்களில் சம்பந்தப்படுத்தி பொய் வழக்குப் போட்டு தோற்று அம்பலப்பட்டுப் போனது. மோட்டார் சைக்கிள் எரிப்பிற்கும் வி.வி.மு அமைப்பினருக்கும் சிறிதும் தொடர்பு கிடையாது என்பது தெரிந்திருந்தும் திட்டமிட்டே இத்தகைய அடக்குமுறையை நடத்தி வருகிறது. மக்கள் மத்தியில் அமைப்பைப் பற்றி, தவறான கருத்தை உருவாக்குவதற்காக - அமைப்பின் வளர்ச்சியை இதன் மூலம் தடுக்கலாம் என்கிற கனவில் - இவ்வாறு கைது செய்து பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறது. போலீசின் பொய்ப் பிரச்சாரத்தை தினத்தந்தி, தினமணி, தினகரன், மாலைமுரசு முதலான பத்திரிகைகள் நகலெடுக்கும் எந்திரத்தைப் போல அப்படியே கக்குகின்றன.

போலீசின் சதிச் செயலையும், பொய்ப் பிரச்சாரத்தையும், பத்திரிக்கைகளின் நேர்மையையும் வி.வி.மு. அம்பலப்படுத்தி முறியடித்து வருகிறது. இது தொடர்பாக சுவரொட்டி ஒட்டிய தோழர்கள் மூவரையும் 16.9.90 அன்று பட்டுக் கோட்டையில் கைது செய்தது போலீசு. கைதான தோழர்கள், தொடர்ந்து மூன்று நாட்களாக தம்மை சட்டவிரோத காவலில் வைத்துள்ளதைக் கண்டித்து போலீசு நிலையத்திலேயே உண்ணாவிரதம் மேற்கொண்டனர். பின்னர் 16ந் தேதி பட்டுக்கோட்டையில் கைது செய்த மூவரையும் ஏற்கெனவே கைது செய்யப்பட்ட அதிராம்பட்டினத்து தோழர்கள் நால்வரையும் 'கியூ' பிரிவு போலீசு தோழர்களின் சொந்த விவரங்களை சேகரித்துக் கொண்டும் சட்டவிரோதமாக புகைப்படம் எடுத்துக் கொண்டும் விடுதலை செய்துள்ளது. தோழர்கள் சாகுல் மற்றும் சேகர் ஆகிய இருவரை விடுவிக்காமல் தொடர்ந்து போலீசு நிலையத்திலேயே வைத்து விசாரித்து வருகிறது. இவர்களையும் விடுவிக்கக் கோரி வி.வி.மு. பிரசுரம், சுவரொட்டி மூலம் தொடர்ந்து போராடி வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

கர்நாடக காங்கிரசு அரசின் கேபினட் மந்திரியாக இருப்பவர் வீரப்ப மொய்லி. இவர் தனது வீட்டை தனது மனைவியின் பெயரில் எழுதி வைத்துவிட்டு அதே வீட்டில் தான் வாடகைக்கு குடியிருப்பதாகக் கூறி அரசிடமிருந்து மாதந்தோறும் ரூ.9000-ஐ சுருட்டி வருகிறார். சொந்த வீட்டில் குடியிருப்பவர்கள் மாதம் ரூ.1000 மட்டுமே அரசிடம் இருந்து வாடகைத் தொகையாகப் பெறவேண்டும். இதை மீறி அரசை ஏமாற்றி லட்சக் கணக்கில் மோசடி செய்துவிட்டதாக குற்றம் சாட்டி பெங்களூரைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞர் மொய்லி மீது வழக்கு தொடுத்துள்ளார். ஆளும் காங்கிரசு கும்பலோ வீரப்ப மொய்லியின் செயலை நியாயப்படுத்துகிறது. அது சரி, கட்சித் தலைவர் ராஜீவ் பினாமி பெயரில் சுவிஸ் வங்கியில் சொத்து சேர்த்துள்ள போது, காங்கிரசு கலாச்சாரப்படி மொய்லி செய்தது எப்படி குற்றமாகும்?

போலிக் கம்யூனிஸ்டுகளின் குரு பீடமான ரஷ்யா, முதலாளித்துவ நரகத்தை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் புறப்படத் தொடங்கியதும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு இன்று கழுத்தை நெறிக்கத் தொடங்கி விட்டது. ரொட்டிக்கும் உப்புக்கும் நீண்ட வரிசையில் நின்றும் கூட கிடைக்காமல் தவிக்கும் ரஷிய மக்கள் அண்மையில் மாஸ்கோ நகர வீதிகளில் 50,000 க்கும் மேல் திரண்டு பிரதமர் ரிஜ்கோவைப் பதவி விலகுமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர். சொந்த நாட்டு மக்களை பட்டினி போட்டு வாட்டும் கோர்பி கும்பல் பிரச்சனையைத் தீர்க்க வக்கற்று முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்திற்குள் நாட்டை இழுத்துச் செல்வதுதென முடிவு செய்து செப்.24 அன்று அதையே சட்டபூர்வமாக்கியுள்ளது. உள்நாட்டிலுள்ள கருப்புப் பண முதலாளிகளையும், அன்னிய ஏகாதிபத்தியங்களையும் ரஷியாவில் முதலீடு செய்யுமாறு அதிபர் கோர்ப்பசேவ் விரும்பி அழைக்கத் தொடங்கி விட்டார். இதைச் சித்தரிக்கும் வகையில் ரஷிய மொழியில் வெளியிடப்படும் 'பிசினஸ் வீக்' என்ற ஏடு ''உலக முதலாளிகளே, தொழிலதிபர்களே ஒன்று சேருங்கள்'' என்ற முழக்கத்துடன் அட்டைப் படக் கட்டுரையை எழுதியுள்ளது. கடைசியில் ''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!'' என்ற முழக்கம் ரஷியாவில் இன்று காலாவதியாகி விட்டது. அதனாலென்ன? எஜமான விசுவாசத்தை அதற்காக மாற்றிக் கொள்ளவா முடியும் என்று இங்குள்ள போலிக் கம்யூனிஸ்டுகள் இன்னமும் ரஷியாவை சோசலிச நாடென்று துதிபாடுகிறார்கள்.

''இந்திய கடற்படையில் அமெரிக்காவின் கை மேலோங்கி வருகிறது. கடற்படைத் தளபதி நட்கர்னியே அமெரிக்காவுக்கு விசுவாசமாக நடந்து கொண்டு தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்'' என்று ரியர் அட்மிரலாகப் பணியாற்றும் விஷ்ணு பகவத் குற்றம் சாட்டி பம்பாய் உயர் நீதி மன்றத்தில் வழக்கொன்றைத் தொடுத்துள்ளார். மேற்குப் பகுதி கடற்படையின் தளபதியாக இருந்த இவரை டெல்லிக்கு மாற்றம் செய்துள்ளனர். உரிய தகுதி இருந்தும் கூட தம்மை விரட்டியடித்துள்ளதாகக் குற்றம் சாட்டும் இவர், கடற்படையில் அமெரிக்காவின் கைவரிசையை அம்பலப்படுத்திக் காட்டியுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள போர்க்கலை பயிற்சிக் கல்லூரியில் பயின்றவர்களுக்கு மட்டுமே கடற்படையில் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது. டெல்லியில் பயின்றவர்கள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றனர். இப்போதைய தளபதி நட்கர்னி, உதவி தளபதி ஜெயின் மற்றும் பிற பின்னணி படைத் தளபதிகள் அனைவரும் அமெரிக்க கல்லூரியில் பயின்றவர்கள் தான். இப்படைத் தளபதிகளின் குழந்தைகள் அமெரிக்காவில் தங்கிப் படிக்க வசதியும், அவர்களது குடும்பத்தினர் எப்போது வேண்டுமானாலும் அமெரிக்கா சென்று வர விசேச அனுமதியும் தரப்பட்டுள்ளது. இது தவிர ஓய்வு பெற்ற ராணுவ உயர் அதிகாரிகள் அமெரிக்க ஆயுத வியாபாரிகளுடன் சேர்ந்து கொண்டு இந்தியாவுக்கான ஆயுத பேரத்தில் தரகு வேலை செய்கின்றனர். 1989 ஏப்ரலில் தளபதி நட்கர்னி அரசு ஒப்புதலின்றி அமெரிக்க கடற்படை விமானத்தில் வாஷிங்டனுக்குச் சென்று திரும்பியுள்ளார். இது பற்றி அவர் அரசுக்கு இதுவரை தெரிவிக்கவில்லை. உதவி தளபதியான ஜெயின் கடற்படை அதிகாரிகளின் மனைவிகளுடன் கூத்தடிக்கிறார். அவர்கள் இவரை மிரட்டிப் பணிய வைத்து ராணுவ ரகசியங்களை அமெரிக்காவுக்குக் கடத்தியிருக்கக் கூடும் என்று அடுக்கடுக்காக குற்றம் சாட்டி ராணுவ தளபதிகளின் யோக்கியதையை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார். பாகிஸ்தானிடமிருந்து நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஆட்சியாளர்கள் ஓயாமல் கூச்சல் போட்டு ஆயுதங்களை வாங்கிக் குவிக்கின்றனர். உண்மையில், நாட்டுக்கு ஆபத்து யாரால் ஏற்பட்டுள்ளது என்பது இப்போது புரிகிறதல்லவா?

சொர்க்கபுரி அமெரிக்கா இன்று கொலைக்காரப் பட்டினமாகி விட்டது. பள்ளிகளும் கல்லூரிகளும் கூட கொலைக்களங்களாகி விட்டன. இளஞ்சிறுவர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதும், வன்முறை ஆயுதங்களால் தாக்கிக் கொள்வதும் பெருகி விட்டது. கல்லூரிகளில் போதை மருந்துப் பழக்கத்திற்கு அடிமையாகி மனவியாதி பிடித்தவர்கள் சக மாணவர்களையே சுட்டுக் கொல்கின்றனர். இது ஒரு புறமிருக்க இனவெறி பிடித்த வெள்ளையர்கள் பிறநாட்டவரையும் குறிப்பாக கருப்பர்களையும் சுட்டுக் கொல்வது பெருகி விட்டது. கடந்த ஆண்டில் மட்டும் 1905 இளஞ்சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். எங்கேயும் எப்போதும் யார் வேண்டுமானாலும் கொல்லப்படலாம் என்ற மரண பீதி தான் அமெரிக்காவில் நிலவுகிறது. பயபீதியில் உறைந்து போயுள்ள பெற்றோர்கள் தமது அருமைக் குழந்தைகளை கொலைகாரர்களிடமிருந்து காப்பாற்ற குண்டு துளைக்காத கோட்டு, ஹெல்மெட் அணிவித்து பள்ளிக்கு அனுப்புகின்றனர். குண்டு துளைக்காத ஒரு 'கோட்'டின் விலை 300 டாலர் என்று இப்போது சூடாக வியாபாரம் நடக்கிறது. சுதந்திரமாக நடமாடக்கூட முடியாத நிலையில் மக்களை மரண பீதியில் வைத்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் குவைத்தின் சுதந்திரத்தை மீட்டெடுக்க ஆயுதமேந்திக் கிளம்பியிருப்பது, நல்ல வேடிக்கை!

குடியரசுத் தலைவருக்கும் குண்டு துளைக்காத 'கோட்'டு; குடிமகனுக்கும் குண்டு துளைக்காத 'கோட்'டு - அமெரிக்காவின் சமத்துவம்!





படிப்பகம்

www.padippakam.com

அனைவருக்கும் கி.பி.2000க்குள் ஆரோக்கிய வாழ்வளிப்பது என்பது ஐ.நா. சபை உருவாக்கிய திட்டம். இதன்படி 1990க்குள் அனைவருக்கும் குடிநீர் - ச்சாக்கடை வசதிகளை செய்து தருவதென இந்தியாவும் ஒப்புக் கொண்டுள்ளது. இத்திட்டம் செயல்படும் லட்சணத்திற்கு இங்குள்ள புகைப்படமே சாட்சி. பம்பாய் மையப்பகுதியில் குடிநீர் தொட்டி துருப்பிடித்து இற்று விழுந்த பிறகு அதையே இருப்பிடமாக்கிக் கொண்டு வாழ்கிறது இந்த ஏழைக் குடும்பம். குடிநீர் திட்டம் தோல்வி அடைந்தாலும் அனைவருக்கும் வீடு தரும் திட்டம் நிறைவேறிவிட்டது என்று சொரணை கெட்ட ஆட்சியாளர்கள் ஒரு வேளை மார்தட்டிக் கொள்வார்களோ?



காஷ்மீரின் பயங்கரவாத அரசு, இந்து வெறியுடன் முஸ்லீம் உயரதிகாரிகள் 5 பேரை அண்மையில் வேலை நீக்கம் செய்தது. காஷ்மீர் தீவிரவாதிகளுடன் இவர்களுக்குத் தொடர்பு உள்ளது என்று குற்றம் சாட்டி தனது செயலை நியாயப்படுத்தியது. இதை எதிர்த்து மாநிலம் முழுவதுமுள்ள ஏறத்தாழ 2 லட்சம் அரசு ஊழியர்கள் கடந்த செப்டம்பர் 14ந் தேதி முதலாக காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். காஷ்மீரின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை ஒரு சில தீவிரவாதிகளின் கைவரிசையாக சித்தரித்த அரசு பயங்கரவாதிகள், அரசு ஊழியர் போராட்டத்தால் முற்றாக தனிமைப்பட்டு ஆப்பசைத்த குரங்காக அலறுகின்றனர்.



ஒரு நாளைக்கு 13. இரண்டு மணி நேரத்திற்கு ஒன்று. இது குழந்தை பிறப்பு விகிதக் கணக்கல்ல; காந்தி பிறந்த குஜராத் மாநிலத்தில் நடக்கும் வரதட்சிணைப் படுகொலையின் சராசரிக் கணக்கு. கடந்த ஆண்டில் மட்டும் மொத்தம் 4821 வரதட்சிணைப் படுகொலைகள் நடந்துள்ளன. 1983-ல் ஒரு நாளைக்கு சராசரியாக 3 பேர் கொல்லப்பட்டனர். 1986-ல் அது இருமடங்காகியது. 1983-ஐ ஒப்பிடும்போது 1989-ன் வரதட்சிணைப் படுகொலைகள் 400% அதிகரித்து விட்டது. பெருகிவரும் வரதட்சிணைப் படுகொலைகளைத் தடுக்க வக்கற்ற ஆட்சியாளர்கள் 'சார்க்' மாநாட்டில் பெண்கள் மீதான அடக்குமுறையை தடுத்து நிறுத்த தனிக் கமிஷன் அமைக்கப் போகிறார்களாம்! வெட்கக் கேடு!

குமரி மாவட்டத்தில் கேரள எல்லையை ஒட்டியுள்ள பத்துகாணி என்ற கிராமத்தில் ஆர்.எஸ்.எஸ். குண்டர் படைத் தலைவனான கொல்லி விஜயன் கள்ளச் சாராய வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தான். இந்தப் பகுதியில் தி.மு.க. தலைவராக இருந்த ராஜா தாஸ், போலீசுக்கு இது பற்றி துப்பு கொடுத்ததின் பேரில் போலீசார் 'ரெய்டு' நடத்தி கள்ளச் சாராய கும்பலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முற்பட்டனர். ஆத்திரமடைந்த கொல்லி ராஜா கும்பல் ராஜாதாஸைக் கொலை செய்ததோடு கேரளாவிலிருந்து ஆர்.எஸ்.எஸ். குண்டர்களைக் கொண்டு வந்து பத்துகாணி கிராமத்தைச் சூறையாடி வீடுகளையும் தீயிட்டுக் கொளுத்தியது. தடுக்கப் போன போலீசாரைத் தாக்கிவிட்டு அவர்களிடமிருந்து துப்பாக்கிகளையும் பறித்துச் சென்றது. ஆர்.எஸ்.எஸ்-இல் இருப்பவர்கள் ஏதோ புனிதமான மதக் கோட்பாடுகளுக்காக நிற்பவர்களல்ல; அங்கேயும் ஓட்டுக்கட்சிகளைப் போலவே சாராய கிரிமினல் - மாஃபியாக்கள் தான் தலைவர்களாக உள்ளவர் என்பதற்கு இச்சம்பவம் இன்னுமொரு சான்று.

கேரளாவிலுள்ள காசர்கேடு மாவட்ட பீடித் தொழிலாளர் சங்கத் தேர்தலில் 'இடது' கம்யூனிஸ்ட் கட்சியின் சி.ஐ.டி.யு.வும், வலதுகளின் ஏ.ஐ.டி.யு.சி. சங்கமும் போட்டியிட்டன. வழக்கம் போலவே சி.ஐ.டி.யு. குண்டர்கள் வாக்குச் சாவடியைக் கைப்பற்றி கள்ள ஓட்டு போட்டு இத்தேர்தலில் வெற்றி பெற்றனர். இம்மோசடியை எதிர்த்த வலதுகளின் மீது போலீசார் தடியடி நடத்தி பொய் வழக்கும் போட்டுள்ளனர். ஆத்திரமடைந்த வலதுகள் இதை தமது பத்திரிகைகளில் அம்பலப்படுத்துவதோடு 'இடதுசாரி' கூட்டணியிலிருந்து விலகப் போவதாகவும் மிரட்டுகின்றனர். கல்கத்தா நகராட்சித் தேர்தலின் போது 'இடது'கள் நடத்திய கள்ள ஓட்டு - ரெளடித்தனத்தை பத்திரிகைகள் அம்பலப்படுத்திய போது "இது முதலாளித்துவ சதி!" என்று கூச்சல் போட்ட 'இடது'கள், இப்போது தமது கூட்டாளிகளே அம்பலப்படுத்துவதை எப்படி நியாயப்படுத்த போகிறார்கள்?

ரஷியாவின் கசகஸ்தான் மாநிலத்தில் உள்ள அணுஉலை கடந்த செப்.12 அன்று விபத்துக்குள்ளானது. இதனால் ஏறத்தாழ ஒரு லட்சம் மக்கள் கதிர்வீச்சினால் பாதிக்கப்பட்டனர். செர்னோபில் அணுஉலை விபத்துக்குப் பிறகு நடந்த பெரிய தாக்குதல் என்று ரஷிய அரசே ஒப்புக் கொள்கிறது. அடுத்தடுத்த அணுஉலை விபத்துக்களால் சொந்த நாட்டு மக்களையே காப்பாற்ற முடியாத இச்சாவு வியாபாரிகளின் உதவியோடு கூடங்குளத்தில் நிறுவப்படும் அணுஉலை மட்டும் பாதுகாப்பானதாக இருக்குமாம்! ஆளுங் கும்பலுடன் சேர்ந்து கொண்டு போலிக் கம்யூனிஸ்டுகள் கதைக்கிறார்கள்; நம்புங்கள்!

அரசு சுற்றுலாத் துறை நடத்தும் டெல்லியிலுள்ள "கனிஷ்கா" என்ற ஐந்து நட்சத்திர ஓட்டலில் வீடியோவில் நீலப் படங்களைத் திரையிடுவது சர்வ சாதாரணமாகி விட்டது. மலிவு விலையில் சாராயம் விற்கத் தொடங்கி விட்ட பிறகு. அரசு ஓட்டலில் நீலப் படங்கள் திரையிடப்படுவது மட்டுமன்றி, இனி விபச்சாரம் கூட அங்கீகரிக்கப்பட்டு விடும்.

இந்தியாவிலுள்ள ரஷிய அடிவருடிகளின் கொள்கை பரப்பு ஆங்கில ஏடுகளான 'பேட்ரியாட்' மற்றும் 'லிங்க்' ஆகியன கடந்த செப்.21 முதலாக காலவரையின்றி நிறுத்தப்பட்டு விட்டன. மொத்தமுள்ள 500 ஊழியர்களில் 157 பேரை காரணமின்றி நிர்வாகம் வேலை நீக்கம் செய்ததால் தொழிலாளர்கள் கிளர்ச்சியில் இறங்கினர். போராடும் தொழிலாளர்கள் மீது போலீசை ஏவி அடக்கிய நிர்வாகம், தொழிலாளர்கள் வன்முறையில் இறங்கி விடுவார்களோ என பீதியடைந்து பத்திரிகையையே நிறுத்தி விட்டது. அங்கே, ரஷியாவில் அதிபர் கோர்ப்பசேவ் வரம்பற்ற அதிகாரங்களைக் குவித்துக் கொண்டு போராடும் மக்களை ஒடுக்குகிறார். இங்கே, ரஷிய அடிவருடிகளும் அதே பாணியில் தொழிலாளர்களை ஒடுக்குகின்றனர். அவர்களது அகராதியில் இதுதான் 'சர்வதேசியம்' போலும்!



படிப்பகம்

www.padippakam.com

# தென்னாப்பிரிக்கா:

# கருப்பினத்தவரிடையே மோதல்




தென் ஆப்பிரிக்காவின் ஜோஹென்ஸ்பர்க் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் கருப்பின மக்களிடையே நடந்த கலவரங்களில் 700 பேர் கடந்த ஆறு வாரத்தில் இறந்துள்ளனர். கடந்த ஜூலை மாதத்திலிருந்து ஷோசா மற்றும் ஜூலு இனப் பழங்குடியினர் இருபிரிவாகப் பிரிந்து நிற்பதும், இரு இனத்தின் தீவிரவாதிகள், இனப்பற்றுள்ள இளைஞர்கள் ஒருவருடன் ஒருவர் மோதிக்கொண்டு இனப்படுகொலை புரிவதும் தொடர்கிறது. ஆப்பிரிக்க சமுதாயத்தில் கருப்பின பழங்குடி மக்கள் நூற்றுக்கணக்கான வர்ண இனங்கள் அடிப்படையில் பிரிந்து இருந்தாலும் இனப்பகைமை உணர்வும், இனமோதல்களும் பழங்காலந் தொட்டு நிலவி வந்தாலும் தற்போதைய அளவிற்கு இனக் கலவரமாக வெடித்ததில்லை.

உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு நிறவெறி மற்றும் காலனி ஆதிக்கத்திற்கு எதிரான வீரதீர மிக்க போராட்டங்களை நடத்தியவர்கள் கருப்பின பழங்குடி மக்கள். இன வேறுபாடின்றி ஒன்றுபட்டு தேசிய - இன விடுதலைப் போராட்டத்தை நடத்தி மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தனர். இவர்கள் இன்று இன அடிப்படையில் மோதிக் கொள்வதற்கு என்ன காரணம்?

ஷோசா, ஜூலு என்ற இரு பழங்குடி இனத்தவர்களே தென்னாப்பிரிக்காவில் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். ஷோசா இன மக்கள் மாண்டேலா தலைமையிலான ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் (ஆ.தே.கா) அமைப்பில் பெருவாரியாக உள்ளனர். ஜூலு இனப் பழங்குடியினரைப் பெரும்பான்மையாகக் கொண்டு செயல்பட்டு வரும் அமைப்பு இங்கதா இயக்கம். இதன் தலைவர் மங்கோசுது புத்திலேசி. இவர் 1970-லேயே. தென்னாப்பிரிக்க நிறவெறி அரசுடன் சமரச உடன்படிக்கை செய்து கொண்டார். அப்பொழுதே ஜூலு இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ''அரசுடன் சமரசமானவர்கள் எவரும் கைக்கூலிகளே - துரோகிகளே'' என கடுமையாக எதிர்த்தனர். மேலும் இங்கதா இயக்கம் கருப்பின மக்களுக்கான உரிமை - விடுதலைப் போராட்டத்தில் மிதவாதத்தைக் கடைபிடித்து செயல் குறைந்து சுணங்கிக் கிடந்தது. இன்னொருபுறம் மாண்டேலா தலைமையிலான ஆ.தே.கா. ஆயுதப் போராட்டத்தில் ஊன்றி நின்று தீவிரமாக செயலாற்றியது. உலக நாடுகளை தென்னாப்பிரிக்க நிறவெறி அரசுக்கு பொருளாதார தடை விதிக்கக் கோரி ஆ.தே.கா. அறைகூவல் விடுத்தபொழுது புத்திலேசி இதை எதிர்த்தார். இதனாலும் ஜூலு இனத்தவர் மத்தியிலேயே செல்வாக்கு இழந்து போனார் புத்திலேசி.

எண்ணற்ற ஜூலு இன இளைஞர்கள் இங்கதா இயக்கத்தைப் புறக்கணித்து வெளியேறி ஆ.தே.கா.-வின் போராட்டங்களில் பங்கெடுத்தனர். ஆ.தே.கா., ஷோசா இன மக்களை பெரும்பான்மையாகக் கொண்டும் ஷோசா இனத்தினரையே தலைவர்களாகக் கொண்டும் இயங்கி வந்தாலும் இன வேறுபாடின்றி நிறவெறி அரசின் சுரண்டலுக்கும், அடக்குமுறைக்கும் உள்ளான அனைத்து கருப்பின மக்களின் விடுதலைக்காக குரல் கொடுத்து வந்தது. இதனால் ஆ.தே.கா.வின் போராட்டத்தில் ஜூலு இனத்தவர் மட்டுமல்லாமல் பிற இனப் பழங்குடி மக்களும் இணைந்தனர். ஜூலு இன இளைஞர்கள் ஆ.தே.கா.-வில் இணைவதை தடுக்க மிரட்டல், பலாத்கார தாக்குதல் முதலானவைகளை கையாண்டார் புத்திலேசி. இதிலிருந்தே ஆ.தே.கா.-விற்கும், இங்கதா இயக்கத்திற்கும் இடையிலான பகைமையும் மோதலும் தொடங்கி நீறுபூத்த நெருப்பாக இருந்தது.

கருப்பின மக்களின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மாண்டேலா தென்னாப்பிரிக்க மக்களின் மனதில் சிறந்த தலைவராக நீங்கா இடம் பெற்றவர். தனது 27 ஆண்டு கால சிறை வாசத்திலும் விடுதலை உணர்வு குன்றாது உறுதியுடன் திகழ்ந்து உலக அளவில் புகழ் பெற்றார். தொடர்ச்சியான உள்நாட்டு விடுதலைப் போராட்டம் மற்றும் உலக நாடுகளின் பொருளாதார தடைகளால் நிலைகுலைந்து போன தென்னாப்பிரிக்காவின் பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்கு வெள்ளை நிறவெறி அரசுக்கு அவகாசம் தேவைப்பட்டது. மேலும் நிறவெறி ஆதிக்கத்திற்கு எதிரான கருப்பின மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தினால் உலகளவில் அம்பலப்பட்டுப் போனதாலும் மாண்டேலாவை விடுதலை செய்யக் கோரி உலகளவில் வந்த நிர்ப்பந்தத்தினாலும் தென்னாப்பிரிக்க அரசு ஜனநாயக வேடம் போட வேண்டியிருந்தது. இதனாலேயே கடந்த பிப்ரவரி மாதம் மாண்டேலாவை விடுதலை செய்தும், மாண்டேலா தலைமையிலான ஆ.தே.கா. மற்றும் இதன் கூட்டு அமைப்புகள் மீதிருந்த தடையை நீக்கியும் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு பேச்சு வார்த்தைக்கு வருமாறும் அழைத்தார் தென்னாப்பிரிக்க அதிபர் டி.கிளர்க். ''ஆயுதப் போராட்டத்திற்கான அடிப்படை இன்னும் நீடிக்கிறது. எனவே பேச்சுவார்த்தை, ஆயுதப் போராட்டம் இரண்டையும் தொடர்வோம்'' என்று கூறினார் மாண்டேலா. ஆனால் சமீபத்தில் 1500 அரசியல் கைதிகளை (கருப்பின விடுதலைப் போராளிகள்) விடுவிக்க வேண்டும்; வெளிநாடுகளிலுள்ள 20,000 கருப்பின மக்களை திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை விதித்து ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைப்பதாக ஒத்துக் கொண்டு அரசுடன் ஒப்பந்தம் போட்டுள்ளார்.

ஆ.தே.கா.வின் கொரில்லாப் படை மற்றும் பிற குழுக்களில் உள்ள தீவிரமான இளைஞர்கள் மாண்டேலாவின் ஒப்பந்தத்தை - ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைப்பது - ஒட்டி அதிருப்தி அடைந்தனர். இதனால், ''ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதன் மூலம் அதற்கான அடிப்படை நீங்கிவிட்டது என்று அர்த்தமில்லை; இது ஒரு வகை தந்திரமே'' என்று தனது மனைவி வின்னி மாண்டேலா மூலமும், ''ஆயுதப் போராட்டம் தொடர்ந்து நடக்கும், வீரர்களே பதுங்கு குழிகளில் எப்பொழுதும் தயாராகக் காத்திருங்கள்!'' என்று தனது அமைப்பு கொரில்லாப் படையின் தலைமைப் போராளி கிரிஸ் ஹனி மூலமும் அறிக்கை விட்டார் மாண்டேலா. தொலைபேசி பேட்டி ஒன்றில் நிருபர்கள் ஒப்பந்தத்தைப் பற்றிக் கேட்டபொழுது ''இது ஒரு வகையான உடன்படிக்கை'' என்று மட்டுமே கூறி நழுவிக் கொண்டார் மாண்டேலா.

மாண்டேலாவின் ஊசலாட்டப் போக்கை கருப்பின விடுதலைக்காகப் போராடும் பிற அமைப்புகளும், குழுக்களும் கடுமையாக எதிர்க்கின்றன. பான் - ஆப்பிரிக்கன் காங்கிரசின் தலைவர் பர்னே தேசாய் ''ஆ.தே.கா.வும் அதன் கூட்டாளி கம்யூனிஸ்டுகளும் (ரஷ்ய அடிவருடிக் கட்சி) விடுதலைப் போராட்டத்தை தலைமுழுகுகிறார்கள். வெள்ளை இன வெறியர்களுடன் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ள ஓடிக் கொண்டிருக்கிறார்கள்'' என்று கூறுகிறார். ஆ.தே.கா.- விற்கு ஆதரவு தெரிவித்து வந்த சேரிப்பகுதி இளைஞர்களும் பல்கலைக் கழக மாணவர்களும் இன்று ஆயுத போராட்டப் பாதையில் நின்று போராடும் பான் - ஆப்பிரிக்கன் காங்கிரசு மற்றும் அசானியன் மக்கள் அமைப்பை நோக்கிச் செல்வதும் நடக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

மேலும், ஜோஹென்ஸ்பர்க் மற்றும் இதனைச் சுற்றியுள்ள நகர்ப்புறங்களில் வசித்துவரும் கருப்பின பழங்குடி மக்களில் தனது ஷோசா இனத்திற்கு மட்டும் அரசிடம் இருந்து சில சலுகைகளைப் பெற்றுத் தந்துள்ளார் மாண்டேலா. இதனால் ஒதுக்கப்பட்ட ஜூலு இனத்தினர் மாண்டேலா மீது வெறுப்படைந்து உள்ளனர்.


இத்தருணத்தைப் பயன்படுத்தி இங்கதா இயக்கத்தை வளர்க்கத் திட்டமிட்டார், புத்திலேசி. ட்ரான்ஸ்வால் பகுதியில் பலவந்தமாக தமது இயக்கத்திற்கு ஆள்சேர்க்க முற்பட்டார். இச்செயல் ஏற்கனவே இருந்த பகைமையுணர்வை வளர்த்தது. சேபோகெங் என்ற நகரத்தில் ஜூலை 22ந்தேதி இங்கதா இயக்கம் ஊர்வலம் நடத்திய பொழுது விட்வாட்டர்ஸ் ராண்டு பகுதியில் இரு இனத்தினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்தே இனக்கலவரம் பற்றியெறிந்தது.

ஜூலு இனத்தினர் வசிக்கும் விடுதிகளை - சேரிப்பகுதிகளை ஆ.தே.கா.- வினரும் ஷோசா இனத்தினர் வசிக்கும் சேரிப்பகுதிகளை இங்கதாவினரும் தாக்கி—குடியிருப்புகளை தீக்கிரையாக்கியும், அப்பாவி மக்களை நிராதரவாக அடித்து விரட்டியும்—தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள படையெடுக்கின்றனர்.

இங்கதா இயக்கம் தனது செல்வாக்குள்ள நேட்டால் பகுதியில் இதற்கென ஆயுதப் பயிற்சியெடுத்து வருகிறது. "ஜூலு இனத்தினர் இங்கதாவில் இல்லாவிட்டாலும் இங்கத்தாவினரே: ஷோசா இனத்தினர் ஆ.தே.கா-வில் இல்லாவிட்டாலும் ஆ.தே.கா-வினரே" என்று கூறி தாக்கிக் கொள்கிற அளவிற்கு இனக் கலவரம் உக்கிரமடைந்து உள்ளது.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல் நிறவெறி ஆதிக்கத்திற்கு எதிராக போராடிய மக்கள் இன்று இனவெறி அடிப்படையில் பிரிந்து மோதிக் கொள்வதை தமக்கு சாதகமாக்கிக் கொண்டன, வெள்ளை நிறவெறி அமைப்புகளும் அரசும். வெள்ளை நிறவெறியையும், கருப்பினப் படுகொலையையுமே லட்சியமாகக் கொண்ட டாக்டர் அண்ட்ரிஸ் ட்ரெனிசிஸ் கன்சர்வேட்டிவ் பார்ட்டி மற்றும் ஆப்பிரிக்கர் (கலப்பினத்தவர்) பாதுகாப்பு இயக்கம் முதலான அமைப்புகள் இன்று தமது கொலைக் கரம் உயர்த்தி வெறியாட்டம் போடுகின்றன. கருப்பினத்தவர் போல் அரிதாரம் பூசிக் கொண்டும் முகமூடி அணிந்து கொண்டும் ஷோசா மற்றும் ஜூலு பழங்குடியினர் வசிக்கும் விடுதிகளிலும் சேரிப்பகுதிகளிலும் புகுந்து தாக்கி இனமோதலை தீவிரமாக்கியது வெள்ளை நிறவெறிக் கும்பலே. இன்னும் இங்கதா அல்லது ஆ.தே.கா. அமைப்பிற்குரிய அடையாளங்களுடன் கருப்பின மக்களை படுகொலை புரிகின்றனர். அண்மையில் - செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் ரயிலில் நடந்த இனப் படுகொலையே இதற்கு இரத்த சாட்சி.

ஜோஹென்ஸ்பர்க் ஜேப்பி நிலையத்திலிருது புறப்பட்ட ரயிலில் கருப்பின மக்களுடன் கருப்பினத்தவர்களாக வேடமிட்ட ஆறு வெள்ளை நிறவெறியர்கள் ஆயுதங்களை மறைத்துக் கொண்டு பயணம் செய்தனர். ரயில் அடுத்த பென்ரோஸ் நிலையத்தை அடைவதற்குள் 10 நிமிடமாக நிறவெறிக் கும்பல் கருப்பின மக்கள் மீது காட்டுமிராண்டித் தனமாக சுட்டது; அப்பாவி மக்களின் அங்கங்களை வெட்டி கதவின் வழியே வீசியெறிந்தது. நிலையத்தில் காத்திருந்த இன்னொரு நிறவெறிக் கும்பல் மீண்டும் கருப்பின மக்கள் மீது பாய்ந்து குதறியது. பென்ரோஸ் நிலையத்தில் கதவை திறந்ததும் இரத்தமும், இரத்தம் உறைந்த உடல்கள் மட்டுமே கொட்டின. தென்னாப்பிரிக்க அரசு செய்திப்படி இறந்தவர்கள் 26 பேர்; காயமுற்றவர்கள் 100 பேர்.



மண்டேலாவுடன் கை குலுக்கும் டி கிளார்க்; வெள்ளை நிறவெறியனின் மனம் மாறிவிட்டதா?

இப்படுகொலை கருப்பினத்தவர் இடையிலான மோதலே என முதலில் சித்தரித்த தென்னாப்பிரிக்க அரசு பின்னர், இப்படுகொலையை செய்தது வெள்ளை நிறவெறியர்களே என்பது ஆதாரங்களுடன் வெளிவர ஆரம்பித்ததும் வாயடைத்துப் போனது. வெள்ளை நிறவெறி அமைப்புகள் தென்னாப்பிரிக்க அரசின் போலீசு, ராணுவம், நீதிபதிகளின் 70 சதவிகித ஆதரவுடன் செயல்பட்டு வருகின்றன. கருப்பின மக்களின் மீதான அனைத்து தாக்குதலையும் தென்னாப்பிரிக்க அரசின் உதவியுடனே இவ்வமைப்புகள் நடத்துகின்றன. கருப்பினத்தவர்களிடையே இன மோதல்களை - பகைமை உணர்வை அப்பட்டமாக நேரடியாக தூண்டிவிட்டு ஆதாயமடைந்தான் பாசிச நிறவெறியன் போத்தோ. ஆனால் இன்று - மாண்டேலாவுடன் பேச்சு வார்த்தை என ஜனநாயக நாடகமாடி வரும் தருணத்தில் - அதே வடிவத்தில் தாக்குதல் தொடுக்க முடியாமல் போகவே இதுபோன்ற வெள்ளை நிறவெறி அமைப்புகளை திரை மறைவில் தூண்டிவிட்டு ஆதாயம் தேடி வருகிறார் டி.கிளார்க்.

ஏகாதிபத்தியங்கள் தமது சுரண்டலையும், ஆதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொள்வதற்கு ஒரே நடைமுறையை - வடிவங்களை கடைப்பிடிப்பதில்லை. மேலும் மேலும் அம்பலப்பட்டுப்போய் மரணத்தின் வாயிலருகே நிற்பதால் பல புதிய வடிவங்களில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள முயலுகின்றன. தமது காலனி - அரைக்காலனி - நவகாலனித்துவ நாடுகளில் நடக்கும் தமக்கு எதிரான போராட்டங்களை பேச்சு வார்த்தை, சலுகை, அதிகாரப் பகிர்வு முதலானவைகள் மூலம் தீர்த்துக் கொள்ள முன்வருவதற்கும் இதுவே காரணம். போராளிகளையும் போராட்ட அமைப்புகளையும் தமது அங்கமாக நிறுவன்மயமாக்கும் நோக்கத்திலேயே இப்படி முன்வருகின்றன. அதே சமயம், இன்னொருபுறம் போராளிகளிடையே தனது அடிவருடிகள், அடிவருடி அமைப்புகள் மூலம் பிளவை, மோதலை ஏற்படுத்துகின்றன அல்லது பெரிதாக்குகின்றன; இவற்றையே காரணமாக வைத்து மீண்டும் தனது அடக்குமுறையை, தாக்குதலை தொடுக்கின்றன. இதற்கு ஆங்கில ஏகாதிபத்தியமும் விதிவிலக்கல்ல. நிறவெறி பாசிஸ்டு போத்தா அம்மணமானபின் அடுத்து ஜனநாயகம், முற்போக்கு என்ற வேடத்தில் டி.கிளர்க்கை நிறுத்தியிருக்கிறது. தோற்றமும் அணுகுமுறையும் வேறாகத் தெரிந்தாலும் உள்ளடக்கமும் நோக்கமும் ஒன்றே.

நிறவெறிக்கும், இனவெறிக்கும் எதிராக போராடிவரும் தென்னாப்பிரிக்க கறுப்பின மக்கள் பெருவாரியாக பல குட்டி முதலாளித்துவ அமைப்புகளின் பின்னேயே அணிதிரண்டு இருக்கின்றனர். தேசிய - இன விடுதலையை குட்டி முதலாளித்துவ தலைமையின் கீழ் சாதிக்க முடியும் என்றாலும் அவை உலக கண்ணோட்டம் - மார்க்சிய லெனினிய கண்ணோட்டம் பெற்றிருக்கும் பொழுதே ஏகாதிபத்தியங்களின் சதிகளை முறியடித்து முன்னேற முடியும். கறுப்பின மக்கள் இன அடிப்படையில் மோதிக்கொள்வதை விடுத்து பரஸ்பரம் பேச்சு வார்த்தை மூலம் ஐக்கியப்படுவதும், உலக கண்ணோட்டம் பெறுவதும் வேண்டும்; இதற்காக தமது தலைமையை நிர்ப்பந்திக்கவும் வேண்டும்; இதுவே இன்றுள்ள கடமை.

◆ ராச.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ்.மதியழகன், 21 பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

படிப்பகம்

www.padippakam.com





"பாரதமாதா கீ ஜே!" - இது தேச பக்த முழக்கமல்ல! அகண்ட பாரதம் - இந்து ராஷ்டிரம் கனவு காணும் பார்ப்பன மேல் சாதி இந்து வெறியர்களின் போர்க் கூச்சல்! சோமநாத் - அயோத்தியா ராம்நாத் யாத்ரா — 10,000 கி.மீ. தொடர் பயணத்தின் ஆரம்ப காட்சி இது! அதி நவீன வசதிகளுடன் அலங்கார தேரில் நவீன கண்ணனாக இந்து மதவெறி பா.ஜ.க.வின் தலைவர் அத்வானி!

'எந்த சக்தியாலும் அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதை தடுக்க முடியாது' என்று மொத்த மக்களையும் நோக்கி சவால் விடுகிறார். ஒரு மாதத்திற்கும் மேல் செல்லும் இந்த மதவெறி யாத்திரை 9 மாநிலத்தை கடந்து அக்டோபர் 30ந்தேதி அயோத்தியில் பாபர் மசூதி உள்ள இடத்தில் ராமர் கோயிலை கட்டப் போகிறது! ஆர்.எஸ்.எஸ், பஜ்ராங் தளம் உள்ளிட்ட 7 இந்து மதவெறி அமைப்புகள் முழு ஆயுத பாணியாக ரத யாத்ராவுடன் செல்கிறது. நீண்ட வாள், சூலாயுதம் முதலியவற்றை பகிரங்கமாக ஏந்தி செல்கிறது. பா.ஜ.க. - ஜனதாதள கூட்டணி ஆட்சி நடக்கும் குஜராத் மாநிலத்தில் தொடங்கிய இவ் விழாவுக்கு அரசு எந்திரம் முழுவதுமாக துணை நின்றது.

இதோ, இது சென்ற ஆண்டு நவம்பரில், பொதுத் தேர்தலுக்கு முன் இதே பா.ஜ.க. 'சிலான் பூஜை' (செங்கல் பூஜை) என்ற பெயரில் இந்து மதவெறியூட்டி அரங்கேற்றிய படுகொலை! அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு ஒரு லட்சம் கிராமங்களிலிருந்து செங்கல்லை கொண்டு வரும் ஊர்வலம் நடத்தி நூற்றுக்கணக்கான முஸ்லீம்களை படுகொலை செய்து குளத்திலும் ஆற்றிலும் வீசினர். முஸ்லீம்கள் வாழும் பகுதியாக பயணப் பாதையை தேர்ந்தெடுத்து கலவரங்களை கட்டவிழ்த்து விட்டனர். வாரணாசி, மீரட், பகல்பூர் என்று இந்து மதவெறியர்கள் முடிவேயில்லாமல் சிறுபான்மை முஸ்லீம்களை வெட்டிக் கொன்றனர். இப்போது மீண்டும் அதே நரித்தனத்துடன் ரத்த வெறி கொண்டு பயணத்தைத் தொடங்கியிருக்கிறது.

அப்போதைய கலவரத்தில் காங்கிரசு, இந்து மதவெறி பா.ஜ.க.வின் கொலை வெறியில் தானும் பங்கு போட எத்தனித்தது! இப்போது பா.ஜ.க.வின் தயவில் உயிர்வாழும் தேசிய முன்னணி ஆட்சி தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள உதட்டளவில் மட்டுமே எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்து மதவெறி கும்பலுக்கு விட்டுக் கொடுத்து சிறுபான்மை முஸ்லீம் மக்களின் உயிரை பலிகொள்ள துணைபோகும் இந்த போலி மதசார்பற்ற ஆட்சியாளர்களை வீழ்த்துவது எப்போது?

# இதுதான் இன்றைய இந்தியா

